
கல்கி



KALKI
18.8.1968 40காசு


‘இப்பொழுது சீதா சுறுசுறுப்புடன் திகழும் பெண்மணி!’



ஆனால் சில நாட்களுக்கு முன் இதே சீதா சோர்வுற்று எல்லோரிடமும் சிடுசிடுவென்றிருந்தாள். ஒரு நாள் அவள் ஒரு டாக்டரின் ஆலோசனையைக் கேட்டாள்




டாக்டர் சொன்னார்: “நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருப்பதற்கு போதிய போஷாக்கு உங்களுக்கு கிடைக்கவில்லை. ஹார்லிக்ஸ் சாப்பிடுங்கள்.”



ஹார்லிக்ஸ் அளித்த நற்பலனைப் பாருங்கள்! இப்பொழுது சீதா தெம்புடன் திகழ்கிறாள்!

ஹார்லிக்ஸ் சீதாவின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது

ஹார்லிக்ஸ் உங்களைத் தெம்புடனும் உற்சாகத்துடனும் திகழச் செய்யும். உலகமெங்கும் டாக்டர்கள் ஹார்லிக்ஸை சிபார்சு செய்கிறார்கள். ஆடைச் சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு, மால்ட்டட் பார்லி ஆகியவற்றின் போஷாக்குச் சத்து சேர்க்கப்பட்டு ஹார்லிக்ஸ் தயாரிக்கப்படுகிறது. இழந்த சக்தியை மீட்டுத் தர ஹார்லிக்ஸ் இணையற்றது!



ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

HL. 7[illegible]



அறியாத வளர்ச்சி

அவள் வளருகிறாள். அவளுடன் அவளது அருமை நாயும் வளருகிறது. இந்த வளர்ச்சியை அவள் அறிவாள். ஆனால் அவள் திருமணத்திற்கு அவள் தகப்பனார் போட்டிருக்கும் ரெகரிங் டெபாஸிட் வளருவது அவள் அறியாள்.

சென்ட்ரலில் உங்களுடைய ரெகரிங் டெபாஸிட்டை ஆரம்பியுங்கள்

தி

சென்ட்ரல் பாங்க்

ஆப் இந்தியா லிட்.,

தனியார் துறையில் உள்ள மிகப்பெரிய பாங்க்

பதிவு காரியாலயம்: மகாத்மா காந்தி ரோடு,
ஃபோர்ட், பம்பாய்-1


திரு. பி.ஸி. பிள்ளை,
பிரதம ஏஜெண்ட்
சென்னை

திரு வி. வி. பிடேல்
சேர்மென்
பம்பாய்


கல்கி பொருளடக்கம்

கீலக ஆவணி 3 — ஆகஸ்டு 18

கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



10-ம் பக்கம் பார்க்க


சத்தியமேவ ஜயதே
பிறருக்கு
உபதேசிப்பதே
நமது அந்நியக்
கொள்கை
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 3

நல்ல பழக்கம் நலிய வேண்டுமா?

நாட்டில் உள்ள பாங்குகளையெல்லாம் சர்க்கார் உடைமையாக்க வேண்டும் என்கிற யோசனையை ஸ்ரீ மொரார்ஜி தேசாய் தீர்மானமாக நிராகரித்து விட்டது நல்லது. அரசாங்கத்துக்கு ஸ்டேட் பாங்கும் அதன் ஏராளமான கிளைக் காரியாலயங்களும் உள்ளன. இவற்றைத் திறம்பட நிர்வகிப்பதே பெரிய காரியம். அதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

சர்க்காரின் உடைமையாக்கும் திட்டத்தை நிராகரித்து விட்டால் மட்டும் போதாது. பாங்குகள் சுயேச்சையாக இயங்குவதற்கு இடையூறாக அவற்றின் விவகாரங்களில் அரசாங்கம் தலையிடுவதும் நிற்க வேண்டும். 'இப்படிச் செய்; அப்படிச் செய்' என்று பாங்குகளுக்கு அரசாங்கம் உத்தரவு செய்வதாலும், அரசாங்கத்தின் சார்பில் பாங்குகளின் நிர்வாகத்தைக் கவனிக்க டைரக்டர்களை நியமிப்பதாலும், பாங்குகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் பங்கெடுத்துக் கொள்வதாலும் பல்வேறு பாங்குகளிடையே போட்டா போட்டி மனப்பான்மை இல்லாமல் போய்விடும். எனவே இவையே பாங்குகளைச் சர்க்கார் உடைமையாக்குவதற்குச் சமமான நடவடிக்கையாக முடியும். நேரடியாகச் சர்க்காரே எடுத்துக் கொள்வதற்குத் தைரியமில்லாமல் சுற்றி வளைத்து எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் போலாகும். அரசாங்கம் எப்போது எஜமானனாகப் பார்க்கிறதோ அப்போதே வேலை முறையில் அரசியல் புகுந்துவிடும். பாங்குகளுக்குத் திரும்பி வராத கடன் அதிகரிக்கும். பாங்குகளில் பணம் போடுவது குறையும். சமீப காலமாகத்தான் மக்களிடையே பரவலாகப் பாங்கில் பணம் போடுவது என்ற பழக்கம் உருவாகத் தொடங்கி யிருக்கிறது. இந்த நல்ல பழக்கம் சீக்கிரமே மறைந்து போகும். நாட்டில் உள்ள பாங்குகளையெல்லாம் ஸ்டேட் பாங்கின் கிளைகளாக மாற்றி விடும் திட்டம் மூடத்தனமானது. தாங்கள் செலவழிக்கும் பணம்தான் தங்களுடையது; தாங்கள் சேமிக்கும் பணமெல்லாம் அரசாங்கத்தினுடையது என்ற மனோபாவம் மக்களிடையே ஏற்பட வழிவகுக்கும் திட்டம் மூடத்தனத்தைவிட மோசமானது. இதனால் எல்லா வகுப்பு மக்களிடமும் பணத்தை விரயம் செய்யும் எண்ணமே வலுக்கும். பணத்தைச் சேமிக்கும் எண்ணம் மறையும்.

தனி நபர்களின் ஊக்கத்துடன் கூடிய முன்னேற்ற முயற்சிகளுக்கும் தனி நபர்களின் சேமிப்புக்களுக்கும் உற்சாகமளிக்கப்பட வேண்டும். மக்களிடையே, ஊர் அறியத் தாங்கள் சேமித்து வைக்கலாம் என்ற நினைப்பு வளர வேண்டும். தங்களுக்குக் கிடைத்த செல்வத்தைப் பயம் காரணமாக ஒளித்து வைக்க முற்படும் சூழ்நிலை உருவாகலாகாது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று இந்தச் சூழ்நிலையைத்தான் காண்கிறோம். பயம் வேறு யாரையோ நினைத்து அல்ல; தங்களுடைய சொந்த அரசாங்கத்திடமே பயம்! மக்களுக்கு அச்சமற்ற, பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டிய அரசாங்கத்திடமே மக்கள் பயப்படுகிறார்கள். இந்நிலை மாற வேண்டும். மக்கள் செல்வந்தர்களாக விளங்கவும் தைரியமாக, உண்மையாக வாழவும் வழிவகுக்கப்பட வேண்டும்.

மக்களை ஏமாற்றும் வழிகளில் ஈடுபடச் செய்யும் கொள்கைகள்; தங்கள் அரசாங்கத்திடமே பயம் கொள்ளச் செய்யும் கொள்கைகள்; தனி நபர்களின் செல்வங்களையெல்லாம் வறண்டு போகச் செய்யும் கொள்கைகள் — இவற்றைக் கடைப்பிடிக்கும் ஓர் அரசாங்கம் அரசுப் பொறுப்பை வகிக்கத் தகுதி அற்றதாகிறது.

இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் போது இன்றைய பாரத அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் முடிவுறும் தறுவாயில் இருக்கிறது என்பதும் அதற்குப் பின் ஒரு தேசிய அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்பதும் தெளிவு.

பத்திரிகை உலகில் ஒரு ஜாம்பவான்

'தினமணி'யில் தம் அரசியல் தலையங்கங்களினாலும், கட்டுரைகளினாலும், நல்ல புகழும் பெரும் சம்பாதித்துக் கொண்ட பத்திரிகை உலக ஜாம்பவானான திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் அவர்களுக்கு இம்மாதம் அறுபதாண்டு நிறைகிறது என அறிந்துமகிழ்கிறோம்.

1908ம் ஆண்டில் தர்மபுரி ஜில்லாவில் அதிகாரப்பட்டி கிராமத்தில் விவசாயம், தான்ய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த திரு கோபால கிருஷ்ண அய்யங்காரின் ஆறாவது புதல்வராக திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் பிறந்தார். கல்லூரி மாணவராக இருந்த காலத்திலேயே அவர் சுதந்திர இயக்கத்தில் பங்கு கொண்டார்.



திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார்

1932ம் ஆண்டில் தொழிலாளர் தலைவர் திரு வி. வி. கிரி அவர்கள் நடத்தி வந்த 'தொழிலாளர் முரசு', 'லேபர் டைம்ஸ்' ஆகிய பத்திரிகைகளில் திரு ஏ. ஜி. வி. தம் பத்திரிகை சேவையை ஆரம்பித்தார். இந்தத் தொழிற் சங்கப் பத்திரிகைகளில் சேவை செய்ததால் தொழிலாளர் நலன்களுக்காக அவர் உழைக்க வாய்ப்பேற்பட்டது. தினமணி தொடங்கியபோது, அதில் பணியாற்றச் சேர்ந்தார். ஆரம்ப காலத்திலிருந்து 'தினமணி' பத்திரிகையின் வளர்ச்சியில் பங்கு கொண்டு, குறிப்பாக சர்வதேச விவகாரங்களை ஆராய்ந்து எழுதுவதில் நிபுணர் எனப் பெயர் பெற்றார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக 1957—58ம் ஆண்டில் அவர் சிறப்புப் பணியாற்றியிருக்கிறார்.

திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் எழுத்துத் துறையில் மட்டுமின்றி, சுவாமிநாதய்யர் நூலகம், இந்து தர்மப் பிரசார சங்கம், கலாக்ஷேத்ரா, பாரதீய வித்யாபவன் முதலிய ஸ்தாபனங்களிலும் பங்கு கொண்டு தொண்டு புரிந்து வருகிறார்.

பத்திரிகையாளர் என்ற முறையில் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் இரண்டாவது உலக யுத்தத்தின்போது மலேயாவுக்குச் சென்று நம் துருப்புக்கள் போரிடுவதை நேரிடையாகப் பார்வையிட்டார். இதற்குப் பின் இரு தடவைகளில் அவர் ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் அந்தந்த நாட்டுச் சர்க்காரின் அழைப்பின் பேரில் சென்று வந்திருக்கிறார். அகில உலகப் பத்திரிகை கருத்தரங்குகளிலும் அவர் தமிழ் நாட்டின் சார்பில் கலந்து கொண்டிருக்கிறார்.

அவரது நீண்ட காலப் பத்திரிகை அனுபவத்தில் அவர் படைத்த நூல்கள் பல. இவற்றில் மொழிபெயர்ப்பு நூல்களும் உண்டு. உலக யுத்தம் தொடங்கு முன்பே ட்லரைப் பற்றியும், வரப்போகும் யுத்தத்தைப் பற்றியும் நூல் எழுதியவர். மனித உரிமைகள் என்ற மற்றொரு நூல் நான்கு பிற மொழிகளில் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது:

ஆழ்ந்த அறிவு, பண்பு, நிறை குடத்தின் துளும்பாத பாங்கு ஆகியவற்றுக்கு உறைவிடமான திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திருந்து பத்திரிகைத் துறைக்கும் சமூகத்துக்கும் தொண்டு புரிந்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

இவ்வாண்டு எஸ். எஸ். எல். ஸி. ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் எண்பத்தி ஆறு திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருக்கிறது. அந்தத் திருத்தங்கள் என்ன என்ன என்று ஒரு சுற்றறிக்கை எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மாணவர்கள் பாடப் புத்தகத்தைத் திருத்திக் கொள்கிறார்கள்! சர்க்கார் துறையில் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதால் ஏற்படும் விளைவு இது:

ஃஃஃ

தேவையில்லாமல் ஒரு காரியத்தைச் செய்வதும் பிறகு செய்து முடித்த காரியத்தைக் கலைப்பதும் ஏராளமான நஷ்டத்துக்குக் காரணமாகின்றன. இதை யாரும் கணக்குப் பார்ப்பதில்லை.

பாரத அரசாங்கம் பல வருஷங்கள் மக்களின் பணத்தை வைத்துக் கொண்டு விளையாடிய பிறகு இப்போதுதான் எல். ஐ. ஸி. மிகப் பெரிய ஏகபோக்கிய ஸ்தாபனம் என்பதையும் இத்தனை பெரிய ஏகபோக்கியத்தைத் திறம்பட நிர்வகிப்பதும் கண்காணிப்பதும் கஷ்டம் என்பதையும் உணர்ந்திருக்கிறது. இப்போது அரசாங்கம் எல். ஐ. ஸி.யைத் தனித் தனி சிறு ஸ்தாபனங்களாகப் பிரித்து விடுவதன் மூலம் முன்னைக் காட்டிலும் திறம்படச் செயலாற்றச் செய்யலாம் என நினைக்கிறது. ஆனால் நிலைமையைத் தெளிவாகக் கண்டு சரியான வழி சொல்ல யாரும் இல்லை. போட்டா போட்டி இல்லாமல் நடத்தப்படும் ஏகபோக்கிய ஸ்தாபனம் பலவீனமாகத்தான் இருக்க முடியும். தங்கு தடையின்றி வந்து விடுகின்ற பிரீமியத் தொகைகள் நிர்வாகக் குறைகளை மறைத்து விடுகின்றன.

ஃஃஃ

செக்கோஸ்லோவாகியாவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைக்

குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. செக்கோஸ்லாவாகியாவில் ஏற்பட்டு வரும் சுதந்திர இயக்கம் காரணமாக அந்நாடு ருஷ்யாவைச் சார்ந்திராமல் மேற்கத்திய நாடுகள் பக்கம் போக நினைக்கிறது என்று முடிவு கட்டுவது தவறு. இதைக் காட்டிலும் ஆழ்ந்த அர்த்தங்கள், உலக அமைதிக்கு முக்கியமான விஷயங்கள் அதில் அடங்கி இருக்கின்றன. கம்யூனிஸம் என்ற தத்துவத்திலேயே ஏற்பட்டுள்ள மாறுதலாக இதனைக் கருத வேண்டும். இந்த மாறுதல் செக்கோஸ்லாவாகிய மக்களிடையே மட்டுமின்றி சோவியத் ருஷ்யாவின் கம்யூனிஸ சித்தாந்தத்திலேயே இதுவரை திருப்தி அடைந்து வந்த மற்ற மக்களிடையேயும் பரவும்.

மேற்கத்திய ஜனநாயக நாடுகள் எந்த உரிமைகளை அநுபவிக்கின்றனவோ — பேச்சு சுதந்திரம், விவாத சுதந்திரம் போன்றவை — அவற்றைத் தாங்களும் அடைய வேண்டும் என்று செக்கோஸ்லாவாகியத் தலைவர்கள் எண்ணிய போதிலும் அதே சமயம் ருஷ்யாவுடன் நட்புரிமையுடன் வாழவும் நினைக்கிறார்கள். இந்தக் கொள்கை மிகவும் லாகவமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்றாகும். தலைவர் டுப்செயும் அவரது தோழர்களும் இதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இன்று அமெரிக்காவும் ருஷ்யாவும் ஒன்றை ஒன்று நெருங்கி வந்து உலக அமைதி காண வேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். ஆனால் செக்கோஸ்லாவாகியாவில் ஏற்படும் சீர்திருத்தங்கள் அது மேற்கத்திய நாடுகள் பக்கம் சார்ந்திருக்கவே உதவின என்றால் ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் மிகுதியாகுமே ஒழியக் குறையாது. அவை நெருங்கி வந்து உலக அமைதி காண்பது துர்லபமாகிவிடும்.

* * *

ஊர்வலம், எதிர்ப்புக் கோஷம் ஆகியவை ஜனநாயகத்தில் அநுமதிக்கப்படுபவையே ஆகும். எனினும், இவை ஆள்கிற கட்சிக்கு ஓர் எச்சரிக்கையாகத்தான் இருக்க முடியுமே அன்றி, சட்டசபை வழியே செய்கிற காரியங்களின் இடத்தைப் பெற முடியாது. சட்டசபை மரபில் மக்களுக்குள்ள நம்பிக்கையைக் கிளர்ச்சிச் செயல்கள் குலைப்பதற்கு அநுமதிக்கக் கூடாது.

தமிழக முதன்மந்திரி பதவியில் இருக்கும் போதே அவருக்குச் சிலை வைத்தது அவிவேகம். இது எதிர்ப்புக் கூட்டத்தினரின் அவமதிப்புக்குச் சிலையை இலக்காக்கியுள்ளது. கொடும்பாவி போன்ற உருவங்களின் மீது செருப்பு முதலியவற்றை எறிவது எளிது. சிலைகள் விசேஷமாகத் துவேஷத்தைக் காட்டும் செயல்களில் தூண்டி விடுவது இயல்பு. ஒருவரின் சேவை முடிந்து அவர் ஓய்வு பெறும் வரையில், அல்லது காலகதி அடையும் வரையில், அவருக்குச் சிலை வைப்பதைத் தள்ளிப் போடக் கூடாதா?

சென்னைச் சம்பவங்கள் இவ்விஷயத்தில் தி.மு.க. — காங்கிரஸ் ஆகிய இரு கட்சியினரையும் அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கச் செய்ய வேண்டும்.

* * *

என். ஸி. ஸி. உத்தரவுகளைப் பிறப்பிப்பது ஆங்கிலத்திலேயே நடக்கட்டும் என்று பழைய முறைக்கே அதிகாரிகள் திடசித்தத்துடன் திரும்பலாகாதா? ஆங்கில உத்தரவுகள் தீர்மானமாகவும் சுருக்கமாகவும் உள்ளன என்பதோடு அகில இந்திய அமைப்பான என். ஸி. ஸி.யின் ஒற்றுமை குலையாமல் பாதுகாக்கவும் உதவும். இதனால் தென் நாட்டில் பொதுவாக அரசியல் ரீதியில் நன்னம்பிக்கை திரும்பும். என். ஸி. ஸி. பற்றிய பிரச்னை நிரவும் வழி கண்டதாகும். என். ஸி. ஸி.யில் உத்தரவுகள் ஹிந்தியில் மாற்றப்பட்டதை வட இந்திய ஆதிக்கத்தின் ஒரு சின்னமாகக் கருதுவதாலேயே அதைத் தென்னாட்டினர் வெறுக்கின்றனர்.

காமகோடியின்



கருணைமொழி

பகவானிடத்தில் பக்தி வைத்தால் தானாகவே எல்லாரிடத்திலும் பிரியமும் பிரேமையும் வரும். எல்லாம் அவனிடமிருந்தே உண்டானவை; இறுதியில் அவனிடமே ஐக்கியமாகிறவை. எனவே, அவ்வொருவனிடத்தில் அன்பு வைத்து விட்டால் தானாகவே அனைவரிடத்திலும் அன்பு உண்டாகும். அநாவசியமான துவேஷம், சண்டை எல்லாம் குறையும். அஹிம்சை என்ற உயர்ந்த லட்சியம் நடைமுறையில் சாத்தியமாகும். நாம் ஜனனம் எடுத்திருப்பதின் பிரயோஜனம் — பிறவி எடுத்திருப்பதின் பயன் — எல்லாவற்றையும் தன்னிடத்திலிருந்து உண்டாக்கி, தன்னோடு ஐக்கியமாக்கிக் கொள்கிற சாசுவத வஸ்துவிடம் வைக்கின்ற பிரேமைதான். அவரவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மங்களை, கர்மங்களைச் செய்வதன் மூலம் யாவற்றையும் ரட்சிக்கும் அவனிடம் பிரியம் வைத்து அவனை அடைகிறார்கள். ஆகவே, நம் கர்மாக்களைப் பண்ணி, அதனால் புத்தியைச் சுத்தி செய்து கொண்டு அழிவற்ற பொருளிடம் அன்பு வைத்து ஆனந்தத்தை அடைய வேண்டும்.

தொழில் தந்தையின் வழித்தோன்றல்

லண்டனில் ஒரு ஹோட்டல் அறை.

"அம்பி! நான் இன்றைய பிளேனிலே ஊருக்குத் திரும்புகிறேன்" என்று ஆரம்பித்தார் தந்தை, தம் முன் நின்ற புதல்வனை நோக்கி.

விடைபெறும் வேளையில் தந்தை மேலும் என்ன சொல்லப் போகிறாரோ என்று எதிர்பார்த்துத் தனயன் காத்திருந்தபோது, "உனக்கு விவரமாக ஒரு கடிதம் எழுதி அதோ மேஜை மீது வைத்திருக்கிறேன். நான் புறப்படுவதற்கு முன் ஒரு தடவை படித்துவிடு" என்றார் தந்தை.

உணர்ச்சிவசப்பட்டுப் பேசமுடியாத நிலையிலிருக்கும் தந்தையின் மனத்தைப் புரிந்துகொண்டு அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான் மகன்.

கடிதம் எழுதியவர் தொழில் தந்தை திரு அனந்தராமகிருஷ்ணன். கடிதத்தைப் படித்தவர் அவரது வழித்தோன்றல் திரு சிவசைலம்.

அந்தக் கடிதத்தில் அனந்தராமகிருஷ்ணன் நீண்ட காலத்துக்கு முன்னால் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தார். அனந்தராமகிருஷ்ணன் "கேர் டேக்கரா"கப் பணியாற்றி வந்த சமயம் அது. கிராமத்திலிருந்து வந்திருந்த தமது தகப்பனாருக்குச் சைனா பஜாரில் ஒருசட்டையும் அவர் அதுவரை அணிந்தறியாத அங்கவஸ்திரமும் வாங்கிக் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் செய்து தாம் வேலை பார்த்த இடத்துக்கு அழைத்து வந்தார். தமது அலுவல்களை விவரித்துச் சொன்னார். "ரொம்பப் பொறுப்பான வேலை; கண்ணியமாகவும் கௌரவமாகவும் நடந்துகொள்" என்று கூறி விடைபெற்றார் தகப்பனார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு திரு அனந்தராமகிருஷ்ணனுடைய தகப்பனார் அதிக காலம் உயிருடன் இருக்கவில்லை. ஆனால் அவர் கூறிய அறிவுரைகள் திரு அனந்தராமகிருஷ்ணனுடன் எப்போதுமே இருந்து வந்தன.


"அதே வார்த்தைகளைத்தான் நானும் உனக்குக் கூற விரும்புகிறேன்" எனச் சிவசைலத்துக்கு எழுதிய அனந்தராம கிருஷ்ணன்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்

என்ற குறளடியுடன் கடிதத்தை முடித்திருந்தார். கடிதத்தைப் படித்து முடித்த சிவசைலத்தின் கண்களில் நீர் துளித்தது. இன்றைக்கும்கூட அந்தக் கடிதத்தைப் பத்திரமாக வைத்திருக்கிறார் சிவசைலம். அடிக்கடி அதை எடுத்துப் பார்த்துப் புத்துணர்ச்சி பெறுவதுண்டு.

ஃ ஃ ஃ

அனந்தராமகிருஷ்ணனுக்கு உடற்பயிற்சிக்காகக் குதிரை ஏற்றத்தில் விருப்பமுண்டு. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் முழு மனத்துடன் ஈடுபடுகிற அவர் நாள் தவ






தொழில்மேதை திரு அனந்தராம கிருஷ்ணன் அவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்கள் பலவும் சேர்ந்து, "அமால்கமேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற பெயரில் இயங்கி வருகின்றன. இந்தப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்துக்குத் தலைவராக அண்மையில் பொறுப்பேற்றிருக்கிறார் திரு சிவசைலம். காலஞ்சென்ற அனந்தராம கிருஷ்ணன் அவர்களின் மகன் என்பதால் மட்டுமின்றி வேறு பல வகைகளிலும் திரு சிவசைலம் இந்தப் பெரிய பதவியை வகிக்கத் தகுதி பெற்றவர். அன்னாரது படத்தை இவ்விதழ் கல்கி மேலட்டையில் பெருமிதத்துடன் பிரசுரிப்பதுடன் அவரது வாழ்க்கையைப் பற்றிய சுவையான கட்டுரையையும் இங்கு மகிழ்ச்சியுடன் தருகிறோம்.

றாமல் குதிரைச் சவாரி செய்து வந்தார். சிவசைலம் அப்போது சிறு குழந்தை. ''அப்பா உங்கள் குதிரைக்கு என்ன பெயர்?'' என்று கேட்பான். ''இட்டிலி!'' என்பார் அனந்த ராமகிருஷ்ணன். அடுத்த நாள் குதிரையின் பெயர் 'போண்டா'வாக மாறியிருக்கும்!

இப்படி விளையாட்டாக ஆரம்பித்த பழக்கம் சிவசைலத்தையும் தீவிரமாகப் பற்றிக்

இந்தப் பதிலைத்தான் சொன்னார். ''நீ டாக்டருக்குப் படிக்கிறாயோ இல்லையோ, உன் பதில் அழகாக இருக்கிறது'' என்று பாராட்டிய தந்தை பின்னால் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டிய தருணம் வந்தபோது, ''அம்பி! உனக்கு வருங்காலத்தில் நிறையப் பொறுப்புக்கள் காத்திருக்கின்றன. எனக்காக நீ உன் எதிர்காலத் திட்டங்களை மாற்றி

படங்கள்: இடது பக்கத்தில்: டாஃபே டிராக்டர் தொழிலகத்தின் ஒரு தோற்றம். நடுவே: டிராக்டரைப் பயன்படுத்தும் விதம் விவசாயிகளுக்கு விளக்கப் படுகிறது. இங்கே: டாஃபே தொழிலகத்தின் அடிக்கல் நாட்டு விழாவின் போது தொழில் மேதை திரு அனந்தராம கிருஷ்ணன், அவருக்கு வலக்கரமாக விளங்கிய எம். வி. வேங்கடராமன், திரு சிவசைலம்.



கொண்டது. ''டாக்டர் ஃபீஸ் கொடுப்பதைக் குதிரை வளர்ப்பதற்குச் செலவழிக்கலாம். நீயும் குதிரைச் சவாரி செய். உடம்புக்கு நல்லது'' என்று சிவசைலத்தை உற்சாகப் படுத்தினார் தந்தை. இன்றைக்கும்கூட சிவசைலத்திடம் இரண்டு மூன்று குதிரைகள் உள்ளன. ஆனால் கிண்டிப் பக்கம் அவர் தலை வைத்துக் கூடப் படுப்பது கிடையாது!

ஃ ஃ ஃ

சென்னை பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஆரம்பப் படிப்பை முடித்துக் கொண்டு விவேகானந்தா கல்லூரியில் சேர்ந்தபோது சிவசைலம் விரும்பி எடுத்துக் கொண்ட பாடங்கள் நாச்சுரல் சையன்ஸ், பிஸிக்ஸ், கெமிஸ்டிரி. காரணம் பிற்காலத்தில் டாக்டராக வரவேண்டும் என்ற நோக்கம்தான். மருத்துவர் ஒருவரால்தான் எந்தக் காலத்திலும் சமூகத்துக்குப் பணியாற்ற முடியும் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்தது இந்த ஆசை. ''ஒரு டாக்டரைக் கற்காலத்தில் கொண்டு போய் விட்டாலும் அவரால் சமூகத்துக்குப் பிரயோசனம் உண்டு. விண்வெளி யுகத்திலும் அவர் சமூகத் தொண்டாற்ற முடியும் அல்லவா?'' என்பது சிவசைலத்தின் வாதம். தந்தை கேட்டபோதுகூட அவர்

அமைத்துக் கொள்ள முடியுமா?'' என்று கேட்டார்.

சிவசைலம் இதற்கு உடனடியாக ஒப்புக் கொண்டு லயோலா கல்லூரியில் சேர்ந்தார்.

ஆங்கிலப் பாடத்தில் சிவசைலத்துக்குப் பிரியம் அதிகம். திறமையும் மிகுதி. இதனால் தான் வந்தது வினை. இவ்விஷயத்தில் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை காரணமாகவே அலட்சியமாக இருந்து ஆங்கிலப் பரீட்சையில் தோல்வி அடைந்துவிட்டார்!

கல்லூரியில் புரொபஸர், ''சிவசைலம்! உன்னால் எப்படி ஆங்கிலத்தில் ஃபெயில் ஆக முடிந்தது? மற்ற மாணவர்களுக்கு அதை விளக்கிச் சொல்ல வேண்டும்'' என்றபோது சிவசைலத்துக்குச் சூடு பிடித்தது; வேகம் பிறந்தது. அதே வேகத்தில் படித்தவர் இரண்டாவது தடவையாகப் பரீட்சை எழுதிய போது மூன்று மணி நேரப் பரீட்சையை ஒன்றே முக்கால் மணி நேரத்தில் முடித்து விட்டு வந்தார். எண்பத்தைந்து சதத்துக்கும் அதிகமாக டிஸ்டிங்க்ஷனில் தேறினார். அன்றையப் பரீட்சையில் இவருக்கு இருந்த ஒரே பிரச்னை எந்தக் கேள்விக்குப் பதிலை முதலில் எழுதுவது என்பதுதான். எல்லாப் பதில்களுமே அவருக்கு நன்கு தெரிந்தவைதாமே!

கல் ாரிப் படிப்பு முடிந்ததும் சிவசைலம் கணக்குத் தணிக்கைத் துறையில் (Chartered

புகைப்படத்தில் காணப்படும் கார் இரவில் மழை பெய்து ஓய்ந்த சாலையில் செல்வது உண்மையான காட்சி அல்ல. வீட்டுக்குள்ளேயே எடுத்தது. கார் அட்டையில் செய்தது; மரங்கள் காய்ந்த குச்சிகள்; தண்ணீர் ஊற்றப்பட்ட தரை.

மாடலும், புகைப்படமும்:
ஜி. மூர்த்தி

Accountancy) பயிற்சி பெற லண்டனுக்குப் பயணமானார்.

அப்போது தந்தை அனந்தராமகிருஷ்ணனும் உடன் வந்தார். இருவரும் ஸவாய் ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். படாடோபம் மிகுந்த ஸவாய் ஹோட்டலில் தங்கிக் கணக்குத் தணிக்கைப் பயிற்சிக்கு வரும் சிவசைலத்தை ராஜா வீட்டுப் பிள்ளை என்று சக ஊழியர்கள் நினைத்து அதிசயமாகப் பார்த்தார்கள். ஆனால் வெகு சீக்கிரமே சிவசைலம் ஒய். எம். ஸி. ஏ. மாணவர் ஹாஸ்டலுக்குப் போய்விட்டது கண்டு அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது! எளிய வாழ்க்கை முறையைச் சிவசைலம் தேர்ந்தெடுத்தது மட்டுமல்ல, தமது செலவுகளுக்குப் பைசா விடாமல் கணக்கு வைத்துக் கொண்டு அவ்வப்போது தமது தகப்பனாரிடம் காட்டுவார். மாணவன் ஒருவன் லண்டனில் மிகக் குறைந்த பட்சம் எத்தனை பணச் செலவில் காலத்தை ஓட்டலாம் என்று பரீட்சித்துப் பார்க்க விரும்பினார். ஒரு வாரம் அப்படி சிக்கன வாழ்க்கை நடத்தித் தந்தைக்குக் கணக்குக் காண்பித்தார் சிவசைலம்.

தமது தொழில் துறை அலுவல்கள் நிமித்தம் ஸவாய் ஹோட்டலில் தொடர்ந்து தங்கி இருந்த அனந்தராமகிருஷ்ணன் இந்தக் கணக்குகளைப் பார்த்துப் பிரமித்தார். "நீ சிக்கனமாக வாழ்வது பற்றி எனக்குச் சந்தோஷம். ஆனால் அதற்காக உன்னை நீயே வருத்திக் கொள்ளாதே. அதற்கு அவசியமே இல்லை" என்று வற்புறுத்தி அவர் சொல்ல வேண்டியதாயிற்று!

மகனை விட்டுத் தனியே பிரிந்திருப்பது அனந்தராமகிருஷ்ணனுக்கு மனச் சங்கடத்தை அளித்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார். பகலெல்லாம் இருவருக்கும் வேலைகள் பல இருக்கும். இரவு படுக்கப் போகு முன் பத்து மணி சுமாருக்கு ஹாஸ்டலுக்கு வருவார் அனந்தராமகிருஷ்ணன். மகனை ஐந்து நிமிஷங்களாவது பார்த்துவிட்டுத் திரும்பவில்லையானால் ஸவாய் ஹோட்டலின் சுகமான பஞ்சணையிலும் அவருக்குத் தூக்கம் பிடிக்காது!

செல்வச் செழிப்பை அறிவாற்றலாலும் உழைப்பாலுமே தேடிப் பெற்ற அனந்தராமகிருஷ்ணனுக்கு ஸவாய் ஹோட்டலின் சொகுசான வாழ்க்கை சில சமயம் அலுத்துப் போகும். மகனையும் அழைத்துக்கொண்டு அவர் தெரு முனையில் உள்ள உணவுச் சாலைக்குப் போவார். தட்டையும் கோப்பையையும் கரத்திலேந்திக் 'கியூ'வில் நிற்பார் உணவைப் பெற்றுக்கொள்ள!

ஃ ஃ ஃ

பயிற்சியின் ஆரம்ப நாட்களில் கடிதங்களை அடுக்கி வைப்பது, சக ஊழியர்களுக்குத் தேநீர் தயாரித்துக் கொடுப்பது முதலிய வேலைகளைக் கூடச் சிவசைலம் செய்ய வேண்டியிருந்தது. இவையெல்லாம் அவர் மனத்தைப் பக்குவப்படுத்தவே உதவின. படிப்படியாகப் பொறுப்பான வேலைகள் வந்து சேர்ந்தன. தனி நபர்களின் கணக்குகள் முதல் பெரிய பெரிய நிறுவனங்களின் கணக்குகள் வரை தணிக்கை செய்யும் வாய்ப்புக்கள் கிட்டின.

விமானப் போக்குவரத்து நிறுவனம் ஒன்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து கொண்டிருக்கும்போது கையிருப்பு உபரி பாகங்களின் மதிப்பை நேரில் கண்டு தெரிந்து கொள்ளக் கிட்டங்கிக்குச் சென்றார். அங்கே சில உயர் ரகக் கம்பிகளைப் பத்துப் பத்தாகச் சேர்த்துக் கட்டிச் சேமித்து வைத்திருந்தார்கள். ஆனால் கணக்கிலோ இந்த ஒவ்வொரு கட்டையும் ஒரு கம்பி என எழுதி வைத்திருந்தார்கள்! இந்தத் தவற்றைப் பல காலமாக யாரும் கவனிக்கவில்லை. சிவசைலம் கணக்கைச் சீர் செய்யும்போது கம்பெனியின் உபரி பாகங்கள் கையிருப்பு பத்து மடங்காக அதிகரித்து விட்டது. கூடவே சிவசைலத்தின் மதிப்பும் பத்து மடங்காக உயர்ந்து விட்டது. அந்தக் கம்பெனியின் நிர்வாகக் கூட்டத்துக்கே வந்து டைரக்டர்கள் முன்னிலையில் இதற்கான விளக்கத்தைக் கொடுக்குமாறு சிவசைலம் கேட்டுக் கொள்ளப்பட்டார்!

இவர் இங்கிலாந்தில் தங்கியிருந்த நான்கு வருட காலத்தில் இவர் தகப்பனார் அடிக்கடி தொழில், நிர்வாக சம்பந்தமாக அங்கு வந்து போவதுண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் "அம்பி! என் கூட வருகிறாயா? காரில் ஒரு 'ரைட்' போய் வரலாம்" என்றார் தந்தை.

பெரியவருக்குச் சற்று ஓய்வு கிடைத்திருக்கிறது என்று நினைத்து அந்த மகிழ்ச்சியைக் கெடுக்கக்கூடாது என்ற ஆவலில் "போய் வரலாம் அப்பா! நான் தயார்" என்றார் சிவசைலம். "வாடகைக் காருக்கு ஃபோன் செய்யவா?" என்றும் கேட்டார்.

"அதெல்லாம் வேண்டாம். வா, சொல்கிறேன்."

இருவரும் கிளம்பி அறையை விட்டு வெளியே வந்தார்கள். வாசலில் புத்தம் புதிய கார் ஒன்று பளபளவென்று நின்று கொண்டிருந்தது. "என்னப்பா இது!" என்று திகைத்தார் சிவசைலம்.

"உனக்குத்தான். இன்றைக்கு என்ன தேதி? ஆகஸ்ட் இருபத்தி நாலு இல்லையா? உன் பிறந்த நாள். அதற்கான பரிசு இது!" என்றார் அப்பா நிதானமாக. சொல்லிவிட்டு, கார் சாவியை சிவசைலத்தின் கையில் கொடுத்தார். காருக்குள்ளே பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து சிவசைலத்தின் தாயார், சகோதர சகோதரிகள் அனைவரும் கையெழுத்துப் போட்ட அலங்கார அட்டை இருந்தது. **(அடுத்த இதழில் முடியும்)**



திருச்சியிலிருந்து சென்னை வரும் ரயிலில் மூன்றாம் வகுப்பில் பலரது டிக்கெட்டுகளைக் கேட்ட டிக்கெட் பரிசோதகர், கையைக் கட்டிக் கொண்டு நிற்கும் நாகேஷிடமும் கேட்கிறார். அதற்கு அவர், ''ஸார்! நான் தான் கையைக் கட்டிக் கொண்டு விட்டேனே! அப்புறம் திருப்பித் திருப்பி டிக்கெட் கேட்பானேன்!'' என்று தாம் 'வித் அவுட்' டிக்கெட் ஆசாமி என்பதைப் பளிச்சென வெளியிடுகிறார்.


''வாய்யா, என்கூட!'' என்று அழைத்த டிக்கெட் பரிசோதகரிடம், ''இன்னொன்று பெஞ்சுக்கடியில் ஒளிஞ்சிருக்கு: அதையும் விசாரியுங்க!'' என்று கூறிவிட்டு இறங்குகிறார். தொழுப்பேடு ஸ்டேஷனில் இரு 'வித் அவுட்' ஆசாமிகளும் இறங்கி நடையைக் கட்டுகிறார்கள். (அவர்களுக்குத் தண்டனை இது தானா? வேறு தண்டனை கொடுத்தால் படம் ஓடாதே!) நடைராஜாக்களாகச் செல்லும் இரு ஆசாமிகளுக்கும் வழியில் ஆபத்பாந்தவராகக் குரங்கு மார்க் டாய்லட் கம்பெனியின் அதிபர் பர்வதராஜா ஆபத்தில் சிக்கிக் கொள்கிறார். தண்ணீரில் விழுந்து இவர்களால் காப்பாற்றப்படக் காத்திருக்கிறார்! அவரைக் காப்பாற்றவே அவர்களுக்குக் கிடைத்த பரிசு: நாகேஷுக்குக் குரங்கு மார்க் அலங்காரப் பொருள்கள் விற்பனையாளர் உத்தியோகமும், அவர் தோழனுக்கு டிரைவர் வேலையும். டிரைவர் தேர்வின்போது தொழிலதிபர் பர்வதராஜாவின் கேள்வி: ''கம்பராமாயணம் இயற்றியது யாரு?''

சோப்பு சீப்பு கண்ணாடி

'சேல்ஸ்மன்' நாகேஷ் கல்லூரியில் படிக்கும் மாணவி லதா (அலேக் விஜய நிர்மலா) வீட்டுக்குச் சோப்பு சீப்பு கண்ணாடி வியாபாரத்துக்கு வருகிறார். அவரையறியாமல் அந்த வீட்டுக்குள் அடைபடுகிறார்! அதனால் அலேக் விஜயநிர்மலாவின் ஆட்டபாட்டங்களுக்கு ஈடு கொடுப்பதோடு முகமூடித் திருடர்கள், தீ விபத்து முதலிய 'அப்டுடேட் அயிட்டங்'களுக்கும் வழி வகுக்கிறார்!

மதுசூதனனாக வரும் நாகேஷ் அசல் குரங்கு மார்க் அலங்காரப் பொருள்கள் விற்பனையாளராக வந்து படத்துக்கு நகைச்சுவையும் விறுவிறுப்பும் தருகிறார். ''வாய்க்காலில் தண்ணீரை யாரும் கேட்டுக் கொண்டா









மொண்டு சாப்பிடுகிறோம்? நீர் தரையிலிருந்து மரத்துக்குத் தாவி, பிறகு இளநீருக்கும் செல்கிறது. இதற்கு மட்டும் கேட்டுக் கொண்டா சாப்பிடணும்? சும்மா பறித்துப் போடு!'' என்று வியாக்கியானம் செய்வதும், முகமூடித் திருடர்களிடம், ''ஏய்! நீங்க முகமூடித் திருடர்களா? கண்களை மட்டும் தானே மூடிக் கட்டியிருக்கிறீங்க. நீங்க கண் மூடித் திருடர்கள்!'' என்று அவர் அடித்து முழக்குவதும் வசனத்தின் நகைச்சுவைச் சிறப்புக்குச் சான்றுகள்!

'எலந்தப்பயம்' விஜயநிர்மலா இந்தப் படத்தில் ஜனரஞ்சகக் காட்சிகளை அள்ளித் தருகிறார். அத்தை வீட்டில் தூக்க மருந்து சாப்பிட்ட அவள் தன் வீட்டை அடைந்து, கழிநீர்க் குழாய் வழியாக மாடி ஏறிக் காதலனைச் சந்திப்பது அதிசயமாயிருக்கலாம். ஆனால் அநாவசியம்தான்!



அசல் வியாபாரி அப்புரங்கமாக எஸ். வி. சகஸ்ரநாமம் நடிக்கிறார். அவரைப் பைத்தியமாக அடித்த போது அவர் சமாளிக்கும் விதம் அபாரம்! 'சங்கடமான சமையல்' செய்யும் ஆறுமுகமாக வரும் ஏ. கருணாநிதி அப்பாவி அப்புரங்கத்தைப் பாடாய்ப்படுத்துகிறார்!— நம்மையும்கூடத்தான்!

டைரக்டர்கள் திருமலை மகாலிங்கம் நல்லதொரு ஹாஸ்யப் படத்தை வழங்கியிருக்கிறார்கள்.







மக்களை வளர்க்கும் மகராசி

சுமார் முப்பத்தி ஒரு வருடங்களுக்கு முன் ஏழு குழந்தைகளுக்குத் தாயாக விளங்கிய திருமதி சர்மா இன்று ஏறத்தாழ ஆயிரத்து இருநூற்று ஐம்பது குழந்தைகளுக்குத் தாயாக விளங்குகிறார்! இவைகளில் நானூறுக்கு மேற்பட்டவை இன்னும் மழலைப் பிராயத்திலேயே இருக்கின்றன. இந்த மழலை இன்பத்தில் திளைத்து நிற்கும் ஸ்ரீமதி சர்மா, தஞ்சை ஜில்லாவிலிருந்தோ, திருநெல்வேலிப் பகுதியிலிருந்தோ வந்தவரல்ல. ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர்!

எல்லென் தெய்ச் முல்லர் என்னும் பெண்மணிக்குச் சின்னஞ் சிறு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரும் துறையில் ஈடுபாடு அதிகம் உண்டு. அந்தத் துறையில் பயிற்சியும் பெற்றிருந்தார். இந்த ஈடுபாடு அந்தப் பெண்மணிக்குப் பாரம்பரியமாக வந்தது. இவருடைய தாயாரும் தகப்பனாரும் குழந்தைகள் கல்வித் துறையில் கவனம் செலுத்தி வந்தார்கள். இவருடைய பாட்டனாரோ பெரிய பேராசிரியர். இந்திய வேதாந்த சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்து அவை சம்பந்தமாகப் பல விரிவுரைகளையும் எழுதியிருந்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்தக் குடும்பத்தினருக்கும் பாரதத்திலிருந்து 1930ம் ஆண்டு வாக்கில் மேற்படிப்புக்காக ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்த பள்ளி உபாத்தியாயரான வி. என். சர்மாவுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. ஆந்திராவைச் சேர்ந்த திரு சர்மா அடையாறு தியாசாபிகல் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர். காலம் சென்ற திரு அருண்டேல், கல்வி நிபுணர் ஜி. வி. சுப்பாராவ் முதலியவர்களின் அன்பையும், மதிப்பையும், நட்பையும் பெற்று, அடையாறு, மதனப்பள்ளிப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர். டாக்டர் பட்டம் பெற ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தார்.





☐ குழந்தைகள் பூங்காப் பள்ளியில் சர்வகலாசாலை துணைவேந்தர் ஏ. எல். முதலியார் அவர்கள்.

☐ குழந்தைப் பள்ளியில் குதூகலிக்கும் மாணவ மாணவியர்.

அவர் படிப்பதற்குத் தேவையான பல புத்தகங்கள் எல்லன் தெய்ச் முல்லரின் வீட்டில் இருந்தன. அவள் பெற்றோரது அனுமதி பெற்றுச் சர்மா அந்தப் புத்தகங்களைப் படித்து டாக்டர் பட்டம் பெற்றார். அத்துடன் நிற்கவில்லை. எல்லனுக்குத் தம் மனைவி என்ற பட்டத்தையும் அளிக்க முன் வந்தார். ''முதலில் நான் உங்கள் வீட்டு வாசகசாலையை மணந்து கொண்டேன். அப்புறம்தான் உங்கள் மகளை மணந்தேன்'' என்று கூறினார் எல்லெனின் பெற்றோரிடம்.

அவர்கள் 'குழந்தைகளுக்கு அறிவை இயற்கையாகப் புகட்ட வேண்டும். அறிவுக்குப் பதிலாகச் சாமர்த்தியத்தை அவர்கள் மனத்தில் பலவந்தமாகப் புகுத்தக் கூடாது' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஹிட்லரின் கை ஓங்க ஆரம்பித்த காலத்தில் தங்கள் கொள்கைக்குப் பங்கம் வருமோ என்ற அச்சத்தில் தாய்நாட்டை விட்டு ஸ்விட்ஜர்லாந்து தேசத்





துக்குப் போக வேண்டிய அவசியம்கூட அவர்களுக்கு ஏற்பட்டது.

எல்லனின் தாயாருக்குக் குழந்தைக் கல்வித் துறையில் இருந்த திறமைபற்றிக் கேள்விப்பட்ட அண்ணல் காந்திஜி அந்த அம்மையாரைச் சந்திக்க விரும்பினார். அந்த அம்மையாரும் 1939ம் ஆண்டில் சில நாட்கள் சேவாகிராமத்துக்கு வந்து காந்திஜியுடன் தங்கியிருந்தார். தம்முடைய நூறுவது வயதில் 1965ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று அந்த அம்மையார் காலமானார்.

ஒண்டி மனிதராக ஜெர்மனிக்குப் போன ஓங்கோல்காரர் வி. என். சர்மா 1936ம் ஆண்டு நவம்பர் மாதம் உற்ற துணைவியுடன் பாரதத்துக்குத் திரும்பினார். ஸ்ரீமதி எல்லென் சர்மாவுக்கு உடனடியாக ஜெர்மன் மொழி ஆசிரியையாகப் பணியாற்றச் சென்னை சர்வ கலாசாலையிலிருந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்றுககொள்ள ஸ்ரீமதி சர்மா ஒரு நிபந்தனை விதித்தார். பாலர்களுக்கான ஒரு பள்ளியைத் தமது சொந்தப் பொறுப்பில் நடத்த சர்வகலாசாலைக்கு ஆட்சேபனை இல்லையென்றால் தமக்கு மொழி போதகராக வேலை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் இல்லையென்று தெரிவித்தார். இவ்விதமாகக் குழந்தைகள் பூங்காப் பள்ளி சென்னையில் தோன்றியது.

அன்று ஏற்றுக் கொண்ட சர்வகலாசாலைப் பணியை இன்றும் தொடர்ந்து செய்து வருகிறார் ஸ்ரீமதி சர்மா.

குழந்தைகள் பூங்காப் பள்ளி வளர சர்மா தம்பதி முழுமூச்சாக ஈடுபட்டார்கள். இருவரும் கல்வித் துறையில் ஈடுபாடு உள்ளவர்கள். இவர்களைப் பற்றி அறிந்த குடும்பத்தினரெல்லாம் தங்கள் குழந்தைகளை இவர்களிடம் ஒப்படைத்தார்கள். பல சந்தர்ப்பங்களில் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வந்த முதியோர்களில் சிலர் அந்தக் குழந்தைகளோடு தாங்களும் சேர்ந்து விளையாடத் தொடங்கினார்கள். குழந்தைகளோ பள்ளிக்கூட நேரம் முடிந்த பிறகுகூட தாய் தந்தையர், வீடு என்ற நினைவு தோன்றாமல் அங்கேயே இருப்பதில் ஆர்வம் காட்டினர். சூழ்நிலையும், சர்மா தம்பதிகள் காட்டிய அன்பும் அவர்களை அவ்வளவு குதூகலத்தில் ஆழ்த்தின.

முப்பது வருடங்களுக்கு முன் ஆரம்பித்த இன்பச் சூழ்நிலை இன்றைக்கும் அப்படியே நிலவி வருகிறது. அன்பு என்ற ஒரே அச்சில் இந்தப் பள்ளி சுழல்வதே காரணம்.

பணத்துக்குக் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுக்க நினைத்திருந்தால் ஸ்ரீமதி சர்மாவால் இன்று அடையாற்றிலோ, சாந்தோமிலோ பங்களா வாசம் நடத்த முடிந்திருக்கும். ஆனால் இன்றும் அவர் அந்த நாள் போலவே, எட்வர்டு எலியட்ஸ் சாலையில் உள்ள பள்ளிக்கூட மாடியிலேயே ஒரு பகுதியில் வசித்து வருகிறார். இன்று அவரை நாடி வருபவர் பெரும்பாலும் ஏழைத் தாய் தந்தை

யர்தான். காரணம், பணக்கார வீட்டுக் குழந்தைகளுக்கான பிரத்தியேக ஆங்கிலப் போதனைப் பள்ளி என்று அவர் தமது பள்ளிக்கு முத்திரை குத்த முன்வரவில்லை. ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டுக்கே இடமில்லாமல் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்கிறார். வசதியற்ற குழந்தைகளுக்குச் சாப்பாடும் போடுகிறார். அவர் வாழ்க்கை நடத்த அவருடைய சர்வகலாசாலைப் பணிதான் உதவுகிறது. டாக்டர் சர்மா விரும்பி யிருந்தால் பெரிய பதவிகளை ஏற்றுப் பணம் திரட்டியிருக்கலாம். ஆனால் அவர் தம் பட்டங்களைப் பச்சிளங் குழந்தைகளின் அறிவை வளர்க்க அர்ப்பணித்து விட்டார். அதே பள்ளிக் கூடக் கட்டிடத்தின் மொட்டை மாடியில் கூரைக் கொட்டகை போட்டுக் கொண்டு நேரம் கிடைத்தபோதெல்லாம் ஜெர்மானிய நூல்களைத் தெலுங்கில் மொழி பெயர்க்கிறார். அழைப்புக்கள் வரும்போது ஐரோப்பிய நாடுகளில் இந்தியக் கலாசாரத்தைப் பற்றியும், வேதாந்த தத்துவங்கள் பற்றியும் பிரசங்கம் செய்யக் கிளம்பி விடுகிறார்.

இப்போது பள்ளி நிர்வாகம் கொஞ்சம் கொஞ்சமாக அடுத்த பரம்பரைக்கு மாறிக் கொண்டிருக்கிறது.

நிர்வகிக்கிறார்: தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் பயிற்சியில் இடம் பெறுகின்றன. அனாதை என்று தெரிந்த குழந்தைகளுக்கு இருப்பிடமும் அளிக்கிறார். ஒரு ஹாஸ்டலும் இயங்குகிறது.

பள்ளிக்கூடம் வளர்கிற வேகத்துடன் பொருளாதார வேகம் வளர முடியாது என்று தெரியும். சர்க்கார் கொடுக்கும் கிராண்ட் தொகை பாதி வசதிகளுக்குக்கூட எட்டவில்லை. ஜெர்மனி தேசத்திலுள்ள பல நடுத்தரக் குடும்ப மக்கள் தலா இரண்டொரு குழந்தைகளைப் பராமரிக்க ஒப்புக்கொண்டு ஆசையுடன் பண உதவி செய்கிறார்கள். இந்த ஆதரவை மேலும் பெருக்கிக் கொண்டு வரத் தலைமை ஆசிரியை குமாரி சகுந்தலா ஜெர்மனி செல்லவிருக்கிறார். ஆனாலும், கட்டிட விஸ்தரிப்புச் செலவினாலோ, ஏற்கனவே வாங்கிய கட்டிடத்துக்கானகடன் தவணையைத் திருப்பவோ, சிரமம் தோன்றும்போது ஸ்ரீமதி சர்மாவின் முகத்தில் வேதனைக் குறிகள் படர்கின்றன.

இந்தப் பள்ளியில் கிண்டர் கார்டன் வகுப்புக்களில் படித்து இன்று உயர் பதவிகளில் இருக்கும் எத்தனையோ பேர்களில் சில



எங்கே முடியுமா ?

ஒரே மாதிரியாகத் தோற்றம் அளிக்கும் எட்டு பந்துகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று மட்டும் எடையில் சற்றுக் குறைவு. இந்த எடை குறைவாயுள்ள பந்தைக் கண்டுபிடிப்பதற்காக உங்களிடம் ஒரு தராசு கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்தத் தராசை நீங்கள் இரண்டே தடவைதான் பந்துகளை நிறுத்துப் பார்க்க உபயோகிக்கலாம். இந்த இரண்டே தடவைக்குள் அந்த எடை குறைவான பந்தை நீங்கள் கண்டு பிடித்துவிட வேண்டும். எங்கே முடியுமா ? முடியாவிட்டால் எதிர்ப் பக்கம் வழி சொல்லித் தரப்படுகிறது. பார்த்துக் கொள்ளவும்.

இதோ : விடை

முதலில் ஏதாவது ஆறு பந்துகளை எடுத்துக் கொண்டு, தராசின் ஒவ்வொரு தட்டிலும் மூன்று மூன்றாகப் போட்டு நிறுக்கவும். இரு தராசுத் தட்டுகளும் சம எடை காட்டினால், நிறுக்காமல் வைத்திருக்கும் மற்ற இரண்டு பந்துகளில் ஒன்றுதான் எடை குறைவானது. அவற்றைத் தராசை இரண்டாவது முறையாக உபயோகித்து, இலேசான பந்தைக் கண்டு பிடிக்கலாம். மூன்று மூன்று பந்துகளைப் போட்ட போது இரு தராசுத் தட்டுகளும் சம எடை காட்டவில்லையானால் அவற்றில் இலேசாக உயர்ந்து விளங்கும் தட்டிலுள்ள மூன்று பந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள். மற்ற தட்டில் உள்ளதைக் கீழே தள்ளிவிட்டு, இந்த மூன்றையும் ஒவ்வொரு தட்டுக்கும் ஒன்றாகப் போட்டுப் பார்க்கவும். இரண்டும் சம எடை காட்டினால், நிறுக்காது வைத்திருக்கும் மூன்றாவது பந்துதான் எடையில் குறைவு என்பது தெரிய வரும் !

— வி. வி.

ஆம். சர்மா தம்பதியின் இரண்டாவது பெண் குமாரி சகுந்தலா இந்தப் பள்ளியிலேயே பாலர் வகுப்புக்களில் புகுந்து இப்போது இதே பள்ளிக்குத் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். இவர் எல்லாக் குழந்தைகளுக்கும் 'அக்கா' தான். இந்த 'அக்கா'வைச் சுற்றி எப்போதுமே குழந்தைகள் கும்பல்தான். குறும்பு செய்யும் குழந்தைகளுக்குத் தண்டனை சாக்லேட்டோ பெப்பர்மின்டோ விழுங்குவதுதான். 'அக்கா நான் இந்தத் தவறு செய்துவிட்டேன், இனிமேல் செய்ய மாட்டேன்' என்று சொல்லும் குழந்தைக்கு வேறு என்ன தண்டனை கொடுப்பது?

கிண்டர் கார்டன் வகுப்புக்கள், கிண்டர் கார்டன் பாடத்துக்கான ஆசிரியப் பயிற்சி வகுப்புக்கள், உயர்நிலைப் பள்ளி வகுப்புக்கள் இவற்றைச் சுமார் அறுபத்திஐந்து ஆசிரிய ஆசிரியைகளின் உதவி கொண்டு ஸ்ரீமதி சர்மா

ராவது இந்தப் பள்ளியின் ஏழைக் குழந்தைகளைத் தலைக்கு நாலைந்து என்ற விகிதத்தில் பராமரிக்க முன்வந்தாலே போதும்! ஸ்ரீமதி சர்மாவின் அறிவு வளர்ச்சிப் பணி உற்சாகத்துடன் பல காலம் தொடர்ந்து நடக்கும்.


குழந்தைகள் என்ன கேள்விகள் கேட்டாலும் அவர்கள் புரிந்து கொள்ளும்படி பொறுமையாகப் பதில் சொல்ல வேண்டுமே தவிர மழுப்ப முயலக் கூடாது என்ற கொள்கையுடையவர் ஸ்ரீமதி சர்மா.

அவர் சிந்தனையெல்லாம் பாலர் பூங்காப் பள்ளி வளர்ச்சியில்தான்; அதன் குழந்தைகளின் மழலையும் இனிமையும் கலந்த மகிழ்ச்சியில்தான்.

சொந்த வாழ்க்கையில் அவர் மூன்று பெண்களுக்குத் தாய். ஆனால் நினைவிலும், செயலிலும் ஆயிரத்து இருநூற்று ஐம்பது குழந்தைகளுக்குத் தாயாக விளங்குகிறார்!

கொடுத்து வைத்தவர்! — மேனு

பதரும் கதிரும்



மணி உங்களைப் போல ஒரு புத்திசாலிப் பையன். விடுமுறையில் கிராமத்துக்கு வந்திருந்தான். அவன் தந்தை ஒரு நாள் தம்முடன் வயல் வெளிக்கு அழைத்துச் சென்றார். வயலில் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்த சமயம் அது. நெற் பயிர்களெல்லாம் நிலத்தில் சாய்ந்து கிடந்தன. அவற்றின் இடையிடையே சில தலை நிமிர்ந்து காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அப்படி நிமிர்ந்து நிற்கும் நெல்செடிகளின் கம்பீரம் மணியைக் கவர்ந்தது.

“அப்பா, இந்த நெற் பயிர்கள் நகரில் வாழும் பெரிய மனிதர்களைப் போல எப்படித் தலைநிமிர்ந்து நிற்கின்றன? சாதாரண மனிதர்களைப் போல மற்ற பயிர்கள் இவைகளின் காலடியில் விழுந்து கிடக்கின்றன” என்றான். மணியின் தந்தை பதில் கூறவில்லை. சிரித்துக் கொண்டார். பிறகு நிமிர்ந்து அசைந்தாடிக் கொண்டிருந்த நெற் பயிரின் நுனியிலுள்ள கதிரைக் கிள்ளி உள்ளங் கையில் வைத்துத் தேய்த்து ஊதினார். அத்தனையும் காற்றில் பறந்தன. காரணம் அவை தானியமற்ற பதர் — சாவி. அதே போலக் குனிந்து தரையில் தலை வணங்கிக் கிடக்கும் பயிரின் கதிர்களை எடுத்துத் தேய்த்தார். உள்ளங்கை நிறையப் பொன்னான நெல் மணிகள். ஊதிய போது ஓடவில்லை. தந்தை சொன்னார்.

“பார்த்தாயா, தம்பி! அறிவாளிகள், விஷயமறிந்தவர்கள் இப்படித்தான் பக்குவமடைந்து முற்றிய நெல் கதிர்களைக் கொண்ட பயிர்களைப் போலக் காணப்படுவார்கள். தகுதியில்லாதவர்கள், விஷயமற்றவர்கள்தான் அப்படித் தலைநிமிர்ந்து நிற்பார்கள். பதர்களைக் கதிராகக் கொண்ட இந்தச் செடிகளால் யாருக்கும் எவ்விதப் பயனுமில்லையோ அப்படித்தான் அந்தப் பகட்டுப் பேர்வழிகளாலும் யாருக்கும் ஒரு பயனுமில்லை.” இப்போது மணியின் உள்ளத்தைக் கவர்ந்த நெற் பயிர்கள் எதுவாக இருக்கும், நீங்களே சொல்லுங்கள்?

உன் கண் உன்னை ஏமாற்றினால்...!




ஒன்றரை அடி நீளமுள்ள ஒரு நூல்கயிற்றை எடுத்து அதன் ஒரு முனையை உங்கள் இரு கண்களுக்கும் மத்தியில் வைத்துக் கொண்டு அதன் வழியே கீழே உள்ள மறுமுனையைப் பாருங்கள். என்ன அதிசயம்! நீங்கள் இப்போது இரண்டு நூல்களைப் பிடித்துக் கொண்டிருப்பீர்கள்.

நாலு மூலைத் தாச்சி!

	4	
12	20	28
	36	

இங்குள்ள படத்தில் நான்கு மூலைக் கட்டங்களும் காலியாக இருக்கின்றன. இவைகளில் பொருத்தமான இல எண்களைப் புகுத்தினால் எந்தப் பக்கம் கூட்டினாலும் அறுபது வருமாம், இட்டு சொல்லுகிறான். அவன் கெட்டிக்காரன். பொய்யாக இருக்காது. நீங்களும்கூடக் கெட்டிக்காரர்கள்தானே? எங்கே?

007



ஜேம்ஸ் பாண்ட் பாலு

அப்பா வாங்கிவந்த மிட்டாய்களை அம்மா எங்கோ ஒளித்து வைத்து விட்டாள். ஜேம்ஸ்பாண்ட் பாலு அவைகளைத் தேடிக் கண்டுபிடிக்கக் கிளம்பிவிட்டான். அவனுக்கு முன்னால் நீங்கள் அந்த மிட்டாய் பாட்டில்களைச் சீசைப் பற்றி விடுங்கள் பார்க்கலாம்.

நீங்களே செய்யலாம்


தூரதிருஷ்டிக் கண்ணாடி


வெகு தூரத்தில் இருக்கும் பொருள்களை அருகில் கொண்டு வந்து காட்டும் கருவிக்குத்தான் தூரதிருஷ்டிக் கண்ணாடி-டெலஸ்கோப் - என்று பெயர். வான சாஸ்திரிகள் உபயோகப்படுத்தும் இந்த டெலஸ்கோப்பை நீங்களே மிகக் குறைந்த செலவில் செய்து கொள்ளலாம்.


இதற்காக உங்களுக்கு வேண்டியதெல்லாம் அட்டையாலான இரண்டு குழாய்கள். ஒன்றுக்குள் மற்றது நுழையும்படி இருக்க வேண்டும். கெட்டியான அட்டையை உருளை எதன்மீதாவது சுற்றி ஸெல்லோ டேப்பைக் கொண்டு மூலைகளை இணைத்து ஒட்டி இம்மாதிரியான குழாய்களைத் தயார் செய்யலாம். (படம் 1)


அடுத்து இரண்டு லென்ஸ்கள் தேவை. இரண்டும் வெவ்வேறு அளவில் இருக்க வேண்டும். சிறிய லென்ஸ் கனமாக இருக்கலாம். பெரிய லென்ஸ் அதே அமைப்பில் ஆனால் கனமின்றி ஒல்லியாக இருக்க வேண்டும். இம்மாதிரியான லென்ஸ்களைப் பழைய பூதக் கண்ணாடிகளிலும், காமிராக்களிலும் பெறலாம். இப்போது ஸெல்லோ டேப்பின் உதவியால் சின்னக் குழாயின் ஒரு பக்கத்தில் கனமான சிறிய லென்ஸையும், பெரிய குழாயின் ஒரு பக்கத்தில் மெலிந்த பெரிய லென்ஸையும் படம் 3ல் காட்டியபடி உறுதியாகப் பொருத்த வேண்டும். இதைச் செய்ய நிறையப் பொறுமை வேண்டும். இது முடிந்ததும் உங்கள் தூரதரிசினி தயாராகி விட்டது.

சிறிய குண்டு லென்ஸ் பொருத்தப்பட்ட பக்கத்தைக் கண்ணின் அருகே வைத்துக் கொண்டு அதைப் பெரிய குழாயினுள் முன்னும் பின்னும் நகர்த்திப் பொருள்களின் துல்லியமான காட்சியைக் கண்டு மகிழலாம். ஆனால் ஓர் எச்சரிக்கை! தூரதரிசினி மூலம் சூரியனை மட்டும் பார்க்காதீர்கள். அதனால் உங்கள் கண் பார்வை நிரந்தரமாகப் பாதிக்கப்படலாம்.









நாலு மூலைத் தாச்சி விடை:

32	4	24
12	20	28
16	36	8

பையன்: நம்ம வீட்டுக்கு முன்னாலே ஒரு வேடிக்கையான ஆள் அம்மா!

தாயார்: நிஜமாகவா? வேடிக்கைன்னு எப்படி?

பையன்: தரையிலே உட்கார்ந்து கொண்டு நான் எறிஞ்ச வாழைப் பழத் தோலைப் பார்த்துத் திட்டிக் கிட்டிருக்காரும்மா.



பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

அந்தப்புரத்திலிருந்து நண்பர்கள் இருவரும் வெளியே வந்தார்கள். உள்ளேயிருந்து, ஒரு பெண் குரல், ''கந்தமாறா! கந்தமாறா!'' என்று அழைத்தது.

''அம்மா என்னைக் கூப்பிடுகிறாள். இங்கேயே சற்று இரு! இதோ வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கந்தமாறன் உள்ளே போனான். பெண்களின் குரல்கள் பல சேர்ந்தாற்போல் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்டதும், கந்தமாறன் தட்டுத் தடுமாறி மறுமொழி கூறியதும் வந்தியத்தேவன் காதில் விழுந்தது. பின்னர் அந்தப் பெண்கள் கலகலவென்று சிரித்த ஒலியும் உள்ளேயிருந்து வந்தது.

தன்னைப் பற்றித்தான் அவ்விதம் அவர்கள் கேலி செய்து சிரிக்கிறார்களோ என்ற எண்ணம் வந்தியத்தேவனுக்கு வெட்கத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. கந்தமாறன் வெளியே வந்ததும் வந்தியத்தேவனின் கையைப் பிடித்துக் கொண்டு, ''வா! எங்கள் மாளிகையைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம்!'' என்று சொல்லி இழுத்துக் கொண்டு போனான்.

ஐந்தாம் அத்தியாயம். குரவைக் கூத்து.



கடம்பூர் மாளிகையின் நிலா முற்றங்கள், ஆடல் பாடல் அரங்கங்கள், பண்டக சாலைகள், பளிங்கு மண்டபங்கள், மாட கோபுரங்கள், ஸ்தூபி கலசங்கள், குதிரை லாயங்கள் ஆகியவற்றை வந்தியத்தேவனுக்குக் கந்தமாறன் காட்டிக் கொண்டு சென்றான்.

இடையில், வந்தியத்தேவன், ''கந்தமாறா! என்னை அந்தப்புர வாசலில் நிறுத்தி நீ மறுபடியும் உள்ளே போனபோது, அந்தப்புரத்தில் ஒரே சிரிப்பும் குதூகலமுமாயிருந்ததே, என்ன விசேஷம்? உன்னுடைய சிநேகிதனைப் பார்த்ததில் அவர்களுக்கு அவ்வளவு சந்தோஷமா?'' என்று கேட்டான்.



''உன்னைப் பார்த்ததில் அவர்களுக்கெல்லாம் சந்தோஷந்தான். உன்னை அம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் பிடித்திருக்கிறதாம். ஆனால் உன்னைக் குறித்து அவர்கள் சிரிக்கவில்லை......''

''பின்னே எதற்காகச் சிரித்தார்களாம்!''

''பழுவேட்டரையர் இருக்கிறார் அல்லவா? இத்தனை வயதுக்குப் பிறகு அவர் புதிதாக ஓர் இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். மூடு பல்லக்கில் வைத்து அவளை இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்.

ஆனால் அந்தப்புரத்துக்கு அவளை அனுப்பாமல் அவருடைய விடுதியிலேயே அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறாராம்! அந்தப் பெண்ணைப் பலகணி வழியாக எட்டிப் பார்த்துவிட்டு வந்த ஒரு தாதிப் பெண் அவள் அழகை வர்ணித்தாளாம். அதைக் குறித்துத்தான் சிரிப்பு! அவள் சிங்களப் பெண்ணோ, கலிங்கத்துப் பெண்ணோ அல்லது சேரநாட்டுப் பெண்ணோ என்று சர்ச்சை செய்கிறார்கள்! பழுவேட்டரையரின் முன்னோர்கள் சேர நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள் என்று உனக்குத் தெரியும் அல்லவா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன், நீதான் முன்னொரு தடவை சொல்லியிருக்கிறாய். இருக்கட்டும், கந்தமாறா! பழுவேட்டரையர் இந்த மர்மசுந்தரியான மங்கையை மணந்து எத்தனை காலம் ஆகிறது?''

''இரண்டு ஆண்டுக்குள்ளேதான் இருக்கும். மணம் செய்து கொண்டதிலிருந்து அவளைத் தனியாகச் சிறிது நேரங்கூட அவர் விட்டு வைப்பதில்லையாம்! எங்கே போனாலும் கூடப் பல்லக்கில் ஆசைநாயகியையும் அழைத்துப் போகிறார். இதைக் குறித்து நாடெங்கும் கொஞ்சம் பரிகாசப் பேச்சு நடந்து வருகிறது. வந்தியத்தேவா! ஒரு பிராயத்தைத் தாண்டியவர்களுக்கு இந்த மாதிரி ஸ்திரீ சபலம் ஏற்பட்டால் எல்லோருக்கும் சிறிது இளக்காரமாகத்தானே இருக்கும்?''

''காரணம் அது ஒன்றுமில்லை. உண்மைக் காரணத்தை நான் சொல்லட்டுமா, கந்தமாறா? பெண்களே எப்போதும் சற்றுப் பொறாமை பிடித்தவர்கள். உன் வீட்டுப் பெண்களைப் பற்றிக் குறைவாகச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே! பெண் உலகமே இப்படித்தான்! உன் குடும்பத்துப் பெண்கள் கருநிறத்து அழகிகள். பழுவேட்டரையரின் ஆசை நாயகியோ செக்கச் செவேலென்று பொன்னிறமாயிருக்கிறாள். ஆகையால் அவளை இவர்களுக்குப் பிடிக்கவில்லை! அது காரணமாக வேறு ஏதேதோ கதை கட்டிச் சொல்கிறார்கள்!....''

''அடே! இது என்ன விந்தை! உனக்கு எப்படி அவளுடைய நிறத்தைப் பற்றித் தெரியும்? அவளை நீ பார்த்திருக்கிறாயா, என்ன? எங்கே, எப்படிப் பார்த்தாய்? பழுவேட்டரையருக்கு மட்டும் இது தெரிந்தால், உன் உயிர் உன்னுடையது அல்ல!....''

''கந்தமாறா! இதற்கெல்லாம் நான் பயந்தவன் அல்ல. அது உனக்குத் தெரியும். மேலும் நான் அனுசிதமான காரியம் எதுவும் செய்யவும் இல்லை. வீர நாராயணபுரத்தில் பழுவேட்டரையரின் பரிவாரங்கள் சாலையோடு சென்றபோது கூட்டத்தோடு கூட்டமாய் நானும் சாலை ஓரமாக ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் எல்லாம் நீங்கள் அனுப்பி வைத்த மரியாதைகளாமே? அது உண்மையா?''

''ஆம், நாங்கள்தான் அனுப்பி வைத்தோம். அதனால் என்ன?....''

''அதனால் என்ன? ஒன்றுமில்லை. பழுவேட்டரையருக்கு நீங்கள் அளித்த வரவேற்பு மரியாதைகளையும் எனக்கு அளித்த வரவேற்பையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். வேறொன்றும் இல்லை!...''

கந்தமாறன் இலேசாகச் சிரித்துவிட்டு, ''இறைவிதிக்கும் அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை அவருக்குச் செலுத்தினோம். சுத்த வீரனுக்கு அளிக்க வேண்டிய வரவேற்பை உனக்கு அளித்தோம்! ஒரு காலத்தில், முருகன் அருளால், நீ இந்த வீட்டுக்கு மருமகப் பிள்ளையானால் தக்கவாறு மாப்பிள்ளை மரியாதை செய்து வரவேற்போம்!'' என்றான்.





பிறகு, ''வேறு என்னமோ சொல்ல வந்தாய்; அதற்குள் பேச்சு மாறிவிட்டது. ஆம், பழுவேட்டரையருடைய ஆசைநாயகி நல்ல சிவப்பு நிறம் என்று சொன்னாயே, அது எப்படி உனக்குத் தெரிந்தது?'' என்றான்.

''கடம்பூர் மாளிகையின் கரிய பெரிய மத்தகஜத்தின் மீது பழுவேட்டரையர், எருமைக் கடா மீது யமதர்மன் வருவது போல் வந்து கொண்டிருந்தார்! என்னுடைய ஞாபகமெல்லாம் அவர் மேலேதானிருந்தது. ஒரு காலத்தில் அவரைப் போல் நானும் ஆகவேண்டும் என்று மனோராஜ்யம் செய்து கொண்டிருந்த போது அடுத்தாற்போல் ஒரு மூடுபல்லக்கு வந்தது. மூடு பல்லக்கில் யார் வரக்கூடும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்த போதே, பல்லக்கின் திரையை உள்ளிருந்து ஒரு கை சிறிது விலக்கியது. விலக்கிய திரை வழியாக ஒரு முகம் தெரிந்தது. கையும் முகமும் நல்ல பொன்னிறமாயிருந்தன! அவ்வளவுதான் நான் பார்த்ததெல்லாம்! நீ இப்போது சொன்னதிலிருந்து அந்தப் பெண்தான் பழுவேட்டரையரின் ஆசை நாயகி என்று ஊகிக்கிறேன்.''

''வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். ஆண் பிள்ளை எவனும் அந்தப் பழுவூர் இளைய ராணியைக் கண்ணாலும் பார்த்ததில்லை என்று பேச்சு. ஒரு விநாடி நேரமாவது அவள் கரத்தையும் முகத்தையும் நீ பார்த்தாயல்லவா? பார்த்த வரையில் அவள் எந்த தேசத்திலே பிறந்த சுந்தரியாயிருக்கலாம் என்று உனக்கு ஏதாவது உத்தேசம் தோன்றுகிறதா?'' என்று கந்தமாறன் கேட்டான்.

''அச்சமயம் நான் அதைப் பற்றி யோசிக்கவில்லை. இப்போது எண்ணிப் பார்க்கும்போது, அவள் ஒரு வேளை காஷ்மீர தேசத்துப் பெண்ணாயிருக்கலாம்; அல்லது கடல்களுக்கு அப்பாலுள்ள சாவகம், கடாரம், யவனம், மிசிரம் முதலிய நாடுகளிலிருந்து வந்த பெண்ணரசியாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஒருவேளை அரபு தேசத்துப் பெண்ணாக இருந்தாலும் இருக்கலாம். அந்த நாட்டிலேதான் பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையில் முகமூடி போட்டே வைத்திருப்பார்களாம்!....''

* * *

அச்சமயம் எங்கேயோ சமீபத்திலிருந்து வாத்தியங்களின் முழக்கம் கேட்கத் தொடங்கியது. சல்லி, கரடி, பறை, புல்லாங்குழல், உடுக்கு ஆகியவை சேர்ந்து சப்தித்தன.

''இது என்ன முழக்கம்?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''குரவைக்கூத்து நடக்கப் போகிறது! அதற்கு ஆரம்ப முழக்கம் இது! நீ குரவைக் கூத்து பார்க்க விரும்புகிறாயா? அல்லது சீக்கிரம் உணவு அருந்திவிட்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்குகிறாயா?''

ஆழ்வார்க்கடியான் குரவைக் கூத்தைப் பற்றிக் குறிப்பிட்டது அச்சமயம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது.

''குரவைக்கூத்து நான் பார்த்ததேயில்லை; கட்டாயம் பார்க்க வேண்டும்'' என்றான். அந்த நண்பர்கள் இன்னும் சில அடி தூரம் சென்று ஒரு திருப்பத்தில் திரும்பியதும் குரவைக் கூத்து மேடை அவர்களுடைய கண்களுக்குப் புலனாயிற்று. மேடைக்கு முன்னால் சபை கூடவும் தொடங்கி விட்டது.

* * *

சுற்றிலும் அரண்மனைச் சுவரும் கோட்டை கொத்தளங்களின் மதிளும் சூழ்ந்த இடத்தில், வெண்மணல் விரிந்த விசாலமான முற்றத்தில் குரவைக் கூத்து மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையில் கோழியைப் போலும் மயிலைப் போலும் அன்னத்தைப் போலும் சித்திரங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள். செந்நெல்லை வறுத்த வெள்ளிய பொரிகள், மஞ்சள் கலந்த தினையரிசிகள், பலநிற மலர்கள், குன்றி

மணிகள் முதலியவற்றினாலும் அந்த மேடையை அழகுபடுத்தியிருந்தார்கள். குத்து விளக்குகளுடன் தீவர்த்திகளும் சேர்ந்து எரிந்து இருளை விரட்ட முயன்றன. ஆனால் நறுமண அகில் புகையுடன் தீவர்த்தி புகையும் சேர்ந்து மூடு பனியைப்போல் பரவி, தீபங்களின் ஒலியை மங்கச் செய்தன. மேடைக்கு எதிரிலும் பக்கங்களிலும் வாத்தியக்காரர்கள் உட்கார்ந்து அவ ரவர்களுடைய வாத்தியங்களை ஆவேச மாக முழக்கினார்கள். மலர் மணம், அகில் மணம், வாத்திய முழக்கம் எல்லாமாகச் சேர்ந்து வந்தியத்தேவ னுடைய தலை சுற்றும்படி செய்தன.

முக்கிய விருந்தாளிகள் அனைவரும் வந்து சேர்ந்ததும், குரவைக் கூத்து ஆடும் பெண்கள் ஒன்பது பேர் மேடைக்கு வந்தார்கள். ஆட்டத்துக் குத் தகுந்தவாறு உடம்பை இறுக்கி ஆடை அணிந்து, உடம்போடு ஒட்டிய ஆபரணங்களைப் பூண்டு, கால்களில் சிலம்பு அணிந்து, கண்ணி, கடம்பம், காந்தள், குறிஞ்சி, செவ்வலரி ஆகிய முருகனுக்கு உகந்த மலர்களை அவர்கள் சூடியிருந்தார்கள். மேற்கூறிய மலர் களினால் கதம்பமாகத் தொடுத்த ஒரு நீண்ட மலர்மாலையினால் ஒருவரை யொருவர் பிணைத்துக் கொண்டவாறு, அவர்கள் மேடையில் வந்து நின் றார்கள். சிலர் கைகளில் சந்தன மரத்தி னால் செய்து வர்ணம் கொடுத்த அழகிய பச்சைக் கிளிகளை லாகவமாக ஏந்திக் கொண்டிருந்தார்கள்.

சபையோருக்கு வணக்கம் செய்து விட்டுப் பாடவும் ஆடவும் தொடங்கி னார்கள். முருகனுடைய புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முருகனுடைய வீரச் செயல்களைப் பாடினார்கள். சூரபத்மன், கஜமுகன் முதலிய அசுர கணங்களைக் கொன்று கடல் நீரை வற்றச் செய்த வெற்றி வேலின் திறத்தைப் பாடினார்கள். தேவ லோகத்துக் கன்னியர் பலர் முருகனை மணந்து கொள்ளத் தவம் கிடந்து வருகையில், அந்தச் சிவகுமாரன் மண் ணுலகத்தில் தமிழகத்துக்கு வந்து, காட்டில் தினைப்புனம் காத்து நின்ற மலைக் குறவர் மகளை மணந்து கொண்ட தைப் புகழ்ந்து பாடினார்கள். வேல னுடைய கருணைத் திறத்தைக் கொண் டாடினார்கள். இத்தகைய பாடலும் ஆடலும் பறை ஒலியும் குழல் ஒலியு மாகச் சேர்ந்து பார்த்திருந்தவர்களை யெல்லாம் வெறி கொள்ளச் செய்தன.

"பசியும் பிணியும் பகையும் அழிக!
மழையும் வளமும் தனமும் பெருக!"



என்ற வாழ்த்துக்களுடன் குரவைக் கூத்து முடிந்தது. பெண்கள் மேடையி லிருந்து இறங்கிச் சென்றார்கள்.

* * *

பின்னர் **'தேவராளன்' 'தேவராட்டி'** என்னும் ஆடவனும் பெண்ணும் வேலனாட்டம் ஆடுவதற்காக மேடை மீது வந்து நின்றனர். அவர்கள் இரத்த நிறமுள்ள ஆடைகளை உடுத்தி யிருந்தனர். செக்கச் சிவந்த இரத்த நிறமுள்ள செவ்வலரிப் பூமாலைகளைச் சூட்டிக் கொண்டிருந்தனர். நெற்றி யில் செந்நிறக் குங்குமத்தை அப்பிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வாய்களும் வெற்றிலைப் பாக்கு மென் றதினால் சிவந்து இரத்த நிறமாகக் காணப்பட்டன. கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்திருந்தன.

முதலில் சாந்தமாகவே ஆட்டம் ஆரம்பித்தது. தனித் தனியாகவும் கைகளைக் கோத்துக் கொண்டும் ஆடி னார்கள். நேரமாக ஆக, ஆட்டத்தில் வெறி மிகுந்தது. மேடையிலே ஒரு பக் கத்தில் சாத்தியிருந்த வேலைத் தேவ ராட்டி கையில் எடுத்துக் கொண்டாள். தேவராளன் அதை அவள் கையி லிருந்து பிடுங்க முயன்றான். தேவ ராட்டி தடை செய்தாள். இறுதியில் தேவராளன் மேடை அதிரும்படியாக ஒரு பெரிய குதி குதித்து, ஒரு பெரிய தாண்டல் தாண்டி, தேவராட்டி கையி லிருந்த வேலைப் பிடுங்கிக் கொண்டான். தேவராட்டி அந்த வேலைக் கண்டு அஞ்சிய பாவனையுடனே மேடையி லிருந்து இறங்கி விட்டாள்.

பிறகு, தேவராளன் தனியே மேடை மீது நின்று கையில் வேல் பிடித்து வெறியாட்டம் ஆடினான். சூரன் முதலிய அசுர கணங்கள் தவிடு பொடி யாகி விழுந்தனர். அறுக்கப்பட்ட சூரன் தலை திரும்பத் திரும்ப முளைத் தது. முளைக்க முளைக்க வேலனுடைய உக்கிரம் அதிகமாக வளர்ந்தது. அவ னுடைய கண்ணிலிருந்து தீப்பொறி பறந்தது. கடைசியில் சூரபதுமன்

இறந்து விழுந்தான். தேவராளனும் கைவேலைக் கீழே போட்டான்.

இப்போது மற்ற வாத்தியங்கள் எல்லாம் நின்று விட்டன. உடுக்கின் சத்தம் மட்டும் கேட்டது. மேடைக்கு அருகே நின்று பூசாரி ஆவேசமாக உடுக்கு அடித்தான். தேவராளன் உடம்பில் ஒவ்வோர் அணுவும் பதறி ஆடியது. ''சந்நதம் வந்து விட்டது'' என்று சபையில் ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பூசாரி ஆவேசம் வந்து ஆடிய தேவராளனைப் பார்த்து, ''வேலா! முருகா! தேவ சேனாபதி! கந்தா! சூரசம்ஹாரா! அடியார்களுக்கு அருள் வாக்குச் சொல்ல வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டான்.

''கேளடா! சொல்லுகிறேன்! என்ன வேண்டுமோ, கேள்!'' என்று சந்நதம் வந்தவன் கூவினான்.

''மழை பொழியுமா? வெள்ளம் பெருகுமா? நாடு செழிக்குமா? நினைத்த காரியம் கைகூடுமா?'' என்று பூசாரி கேட்டான்.

''மழை பொழியும்! வெள்ளம் பெருகும்! நாடு செழிக்கும்! நினைத்த காரியம் கைகூடும்! ஆனால், என் அன்னைக்கு நீங்கள் பூசை போடவில்லை. துர்க்கை பலி கேட்கிறாள்! பத்திரகாளி பலி கேட்கிறாள். மகிடாசுரனை வதைத்த சண்டிகேசுவரி பலி கேட்கிறாள்!.....'' என்று சந்நதக்காரன் ஆவேசத்துடன் ஆடிக் கொண்டே அலறினான்.

''என்ன பலி வேண்டும்?'' என்று பூசாரி கேட்டான்.

''கேட்டால் கொடுப்பீர்களா?'' என்றான் வெறியாடியவன்.

''கொடுப்போம்; கட்டாயம் கொடுப்போம்!'' என்றான் பூசாரி.

''மன்னர் குலத்து இரத்தம் கேட்கிறாள். ஆயிரங்கால அரசர் குலத்து இரத்தம் கேட்கிறாள்!'' என்று வெறியாடியவன் கோர பயங்கரக் குரலில் கூவினான்.

மேடைக்கு முன்னால் வீற்றிருந்த பழுவேட்டரையர், சம்புவரையர், மழவரையர் முதலிய பிரமுகர்கள் ஒருவருடைய முகத்தை ஒருவர் நோக்கினார்கள். அவர்களுடைய செக்கச் சிவந்த வெறி கொண்ட கண்கள் சங்கேதமாகப் பேசிக் கொண்டன.

சம்புவரையர் பூசாரியைப் பார்த்துத் தலையை அசைத்து சமிக்ஞை செய்தார்.

பூசாரி உடுக்கு அடிப்பதை நிறுத்தினான். வெறியாட்டம் ஆடிய தேவராளன் அடியற்ற மரம்போல் மேடை மீது விழுந்தான். தேவராட்டி ஓடி வந்து அவனைத் தூக்கி எடுத்துக் கொண்டு போனாள்.

சபை மௌனமாகக் கலைந்தது. வெளியில் எங்கேயோ தூரத்தில் நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது.

இத்தனை நேரம் பார்த்துக் கேட்டவற்றினால் பரபரப்புக் குள்ளாகியிருந்த வந்தியத்தேவன், நரிகள் ஊளையிடும் சத்தம் வந்த திசையை நோக்கினான். அங்கே, அம்மாளிகையின் வெளி மதிள் சுவரின் மீது ஒரு தலை தெரிந்தது. அது ஆழ்வார்க்கடியானுடைய தலை தான்! ஒரு கணம் வந்தியத்தேவன் ஒரு பயங்கர உணர்ச்சிக்கு உள்ளானான். ஆழ்வார்க் கடியானுடைய தலையை வெட்டி அந்த மதிள் மேல் வைத்திருந்தது போன்ற பிரமை உண்டாயிற்று. கண்ணிமைகளை மூடித் திறந்து பார்த்தபோது அந்தத் தலையை அங்கே காணவில்லை! அத்தகைய வீண் சித்தப் பிரமைக்குத் தான் உள்ளானது குறித்து வெட்கமடைந்தான். இதுவரை அநுபவித்து அறியாத வேறு பல வகை உணர்ச்சிகளும் அவன் உள்ளத்தைக் கலங்கச் செய்தன.

ஆறாம் அத்தியாயம்

நடுநிசிக் கூட்டம்

குரவைக் கூத்தும் வெறியாட்டுக்கும் பின்னர், வந்திருந்த விருந்தினருக்குப் பெருந்தர விருந்து நடைபெற்றது. வல்லவரையனுக்கு விருந்து ருசிக்கவில்லை. அவன் உடம்பு களைத்திருந்தது: உள்ளம் கலங்கியிருந்தது. ஆயினும் அவன் பக்கத்திலிருந்த அவனுடைய நண்பன் கந்தமாறன் அங்கிருந்த மற்ற விருந்தாளிகள் யார் யார் என்பதைப் பெருமிதத்துடன் எடுத்துக் கூறினான்.

பழுவேட்டரையரையும், சம்புவரையரையுந் தவிர அங்கே மழபாடித் தென்னவன் மழவராயர் வந்திருந்தார்; குன்றத்தூர்ப் பெருநிலக்கிழார் வந்திருந்தார்; மும்முடிப் பல்லவரையர் வந்திருந்தார். மற்றும், தான்தோங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையரையர், தேவசேனாபதிப் பூவரையர், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார், கொல்லி



CMTM-10-129-TM

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.



உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!


ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!



எடுப்பான புதிய டின்!



மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.C.S TAM.

மலைப் பெருநில வேளார் முதலியோரை இன்னின்னார் என்று கந்தமாறன் தன் நண்பனுடைய காதோடு சொல்லிப் பிறர் அறியாதபடி சுட்டிக் காட்டித் தெரியப்படுத்தினான்.

இந்தப் பிரமுகர்கள் சாமான்யப்பட்டவர்கள் அல்ல; எளிதாக ஒருங்கு சேர்ந்து காணக் கூடியவர்களுமல்ல. அநேகமாக ஒவ்வொருவரும் குறுநில மன்னர்கள். அல்லது குறுநில மன்னருக்குரிய மரியாதையைத் தங்கள் வீரச் செயல்களினால் அடைந்தவர்கள். ராஜா அல்லது அரசர் என்பது மருவி அக்காலத்தில் அரையர் என்று வழங்கி வந்தது. சிற்றரசர்களுக்கும், சிற்றரசர்களுக்குச் சமமான சிறப்பு வாய்ந்தவர்களுக்கும் அரையர் என்ற பட்டப் பெயர் சேர்த்து வழங்கப்பட்டது. அவரவர்களுடைய ஊரை மட்டும் கூறி அரையர் என்று சேர்த்துச் சொல்லும் மரபும் இருந்தது.

அந்த நாளில் சிற்றரசர்கள் என்றால், பிறப்பினால் மட்டும் 'அரசர்' பட்டம் பெற்று அரண்மனைச் சுக போகங்களில் திளைத்து வாழ்ந்திருப்பவர்கள் அல்ல. போர்க்களத்தில் முன்னணியில் நின்று போரிடச் சித்தமாயுள்ள வீராதி வீரர்கள்தான் தங்கள் அரசுரிமையை நீடித்துக் காப்பாற்றிக் கொள்ள முடியும். எனவே, ஒவ்வொருவரும் பற்பல போர்க்களங்களில் போரிட்டுப் புகழுடன் காயங்களையும் அடைந்தவர்களாகவே இருப்பார்கள். இன்று அத்தனை பேரும் பழையாறைச் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆட்சிக்கு அடங்கித் தத்தம் எல்லைக்குள் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். சிலர் சோழப் பேரரசில் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளாகவும் பதவி வகித்து வந்தார்கள்.

இவ்வளவு முக்கியமான சோழ சாம்ராஜ்யப் பிரமுகர்கள் எல்லாரையும் ஓரிடத்தில் பார்த்தது பற்றி வல்லவரையன் நியாயமாக உவகை கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனுடைய உள்ளத்தில் உவகை ஏற்படவில்லை. "இவ்வளவு பேரும் எதற்காக இங்கே கூடியிருக்கிறார்கள்!" என்ற எண்ணம் அவனுக்கு அடிக்கடி தோன்றியது. ஏதேதோ தெளிவில்லாத ஐயங்கள் அவன் உள்ளத்தில் தோன்றி அலைத்தன.

மனத்தில் இத்தகைய குழப்பத்துடனேயே வல்லவரையன் தனக்கென்று கந்தமாறன் சித்தப்படுத்திக் கொடுத்திருந்த தனி இடத்தில் படுக்கச் சென்றான். விருந்தினர் பலர் வந்திருந்தபடியால் வல்லவரையனுக்கு அம்மாபெரும் மாளிகையின் மேல்மாடத்தில் ஒரு மூலையிலிருந்த திறந்த மண்டபமே படுப்பதற்குக் கிடைத்தது. "நீ மிகவும் களைத்திருக்கிறாய்; ஆகையினால் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. மற்ற விருந்தாளிகளைக் கவனித்துவிட்டு நான் உன் பக்கமே வந்து படுத்துக் கொள்கிறேன்" என்று கந்தமாறன் சொல்லி விட்டுப் போனான்.

* * *

படுத்தவுடனே வந்தியத்தேவனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. மிக விரைவில் நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள். ஆனாலும் என்ன பயன்? மனம் என்பது ஒன்று இருக்கிறதே, அதை நித்திராதேவியினால்கூடக் கட்டுக்குள் வைக்க முடிவதில்லை. உடல் அசைவற்றுக் கிடந்தாலும், கண்கள் மூடியிருந்தாலும், மனத்தின் ஆழத்தில் பதிந்து கிடக்கும் எண்ணங்கள் கனவாகப் பரிணமிக்கின்றன. பொருளில்லாத, அறிவுக்குப் பொருத்தமில்லாத பற்பல நிகழ்ச்சிகளும் அநுபவங்களும் அந்தக் கனவுலோகத்தில் ஏற்படுகின்றன.

எங்கேயோ வெகுதூரத்திலிருந்து ஒரு நரி ஊளையிடும் சத்தம் கேட்டது. ஒரு நரி, பத்து நரியாகி, நூறு நரியாகி, ஏகமாக ஊளையிட்டன! ஊளையிட்டுக் கொண்டே வந்தியத்தேவனை நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தன. காரிருளில் அந்த நரிகளின் கண்கள் சிறிய சிறிய நெருப்புத் தணல்களைப் போல் ஜொலித்துக் கொண்டு அவனை அணுகி வந்தன.

மறுபக்கம் திரும்பி ஓடித் தப்பிக்கலாம் என்று வந்தியத்தேவன் பார்த்தான். அவன் பார்த்த மறு திசையில் பத்து, நூறு, ஆயிரம் நாய்கள் ஒரே மந்தையாகக் குரைத்துக் கொண்டு பாய்ந்து ஓடி வந்தன. அந்த வேட்டை நாய்களின் கண்கள் அனல் பொறிகளைப் போல் ஜொலித்தன.

நரிகளுக்கும் நாய்களுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டால் தன்னுடைய கதி என்னவாகும் என்று எண்ணி வந்தியத்தேவன் நடுநடுங்கினான். நல்ல வேளை, எதிரே ஒரு கோயில் தெரிந்தது. ஓட்டமாக ஓடித் திறந்திருந்த கோயிலுக்குள் புகுந்து வாசற்கதவையும் தாளிட்டான். திரும்பிப் பார்த்தால் அது காளி கோயில் என்பது தெரிந்தது. அகோரமாக வாயைத் திறந்து கொண்டிருந்த காளி மாதாவின் சிலைக்குப் பின்னாலிருந்து பூசாரி ஒருவன் வெளிக் கிளம்பி வந்தான். அவன் கையில் ஒரு பயங்கர

மான வெட்டரிவாள் இருந்தது. ''வந்தாயா? வா!'' என்று சொல்லிக் கொண்டு பூசாரி அருகில் நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தான்.

''நீ பிறந்த அரச குலத்தின் வரலாறு என்ன? எத்தனை ஆண்டுகளாக உன்குலத்தினர் அரசு புரிகின்றனர்? உண்மையைச் சொல்!'' என்று பூசாரி கேட்டான்.

''வாணர் குலத்து வல்லவரையர் முந்நூறு ஆண்டு அரசு புரிந்தவர்; என் தந்தையின் காலத்தில் வைதும்பராயர்களால் அரசை இழந்தோம்'' என்றான் வந்தியத்தேவன்.

''அப்படியானால், நீ தகுந்த பலி அல்ல! ஓடிப் போ!'' என்றான் பூசாரி.

திடீரென்று காளி மாதாவின் இடத்தில் கண்ணன் காட்சி அளித்தான். கண்ணன் சந்நிதியில் இரண்டு பெண்கள் கையில் பூமாலையுடன் ஆண்டாள் பாசுரம் பாடிக் கொண்டு வந்து நடனம் ஆடினார்கள். இதை வல்லவரையன் பார்த்துப் பரவசமடைந்திருக்கையில் அவனுக்குப் பின் புறத்தில், ''கண்டோம், கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்'' என்ற பாடலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பாடியவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான். இல்லை. ஆழ்வார்க்கடியானுடைய தலை பாடியது! அந்தத் தலை மட்டும் பலி பீடத்தில் வைக்கப் பட்டிருந்தது!



இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் வல்லவரையன் திரும்பினான். தூணில் முட்டிக் கொண்டான். கனவு கலைந்தது. கண்கள் திறந்தன. ஆனால் கனவையும் நனவையும் ஒன்றாகப் பிணைத்த ஒரு காட்சியை அவன் காண நேர்ந்தது.

அவன் படுத்திருந்த இடத்துக்கு நேர் எதிர்ப்புறத்தில் கடம்பூர் மாளிகைச் சுற்று மதிளின் மேலே ஒரு தலை தெரிந்தது. அது, அந்த ஆழ்வார்க் கடியான் நம்பியின் தலைதான். இந்தத் தடவை அது கனவல்ல, வெறும் பிரமையும் அல்லவென்பது நிச்சயம். ஏனெனில், எத்தனை நேரம் பார்த்தாலும் அந்தத் தலை அங்கேயே இருந்தது. அது வெறுந் தலை மட்டுமல்ல, தலைக்குப் பின்னாலே உடம்பு இருக்கிறது என்பதையும் எளிதில் ஊகிக்கக் கூடியதாயிருந்தது. ஏனெனில், ஆழ்வார்க்கடியானுடைய கைகள் அந்த மதிள் ஓரத்தின் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்தன. அதோடு, அவன் வெகு கவனமாக மதிளுக்குக் கீழே உட்புறத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் அவ்வளவு கவனமாக அங்கே என்னத்தைப் பார்க்கிறான்....! இதில் ஏதோ வஞ்சகச் சூழ்ச்சி இருக்கவே வேண்டும். ஆழ்வார்க்கடியான் நல்ல நோக்கத்துடன் அங்கு வந்திருக்க முடியாது. ஏதோ துஷ்ட நோக்கத்துடன் தீய செயல் புரிவதற்கே வந்திருக்கிறான். அவன் அவ்விதம் தீச்செயல் புரியாமல் தடுப்பது கந்தமாறனின் உயிர் நண்பனாகிய தன் கடமையல்லவா? தனக்கு அன்புடன் ஒரு வேளை அன்னம் அளித்தவர்களின் வீட்டுக்கு நேரக்கூடிய தீங்கைத் தடுக்காமல் தான் சும்மாப் படுத்துக் கொண்டிருப்பதா?

வல்லவரையன் துள்ளி எழுந்தான். பக்கத்தில் கழற்றி வைத்திருந்த உறையுடன் சேர்ந்த கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். ஆழ்வார்க்கடியான் தலை காணப்பட்ட திக்கை நோக்கி நடந்தான்.

மாளிகை மேல்மாடத்தில் ஒரு மூலையிலிருந்த மண்டபத்தில் அல்லவா வல்லவரையன் படுத்திருந்தான்? அங்கிருந்து புறப்பட்டு மதிள் சுவரை நோக்கி நடந்தபோது, மேல்மாடத்தை அலங்கரித்த மண்டபச் சிகரங்கள், மேடைகள், விமான ஸ்தூபிகள், தூண்கள் ஆகியவற்றைக் கடந்தும், தாண்டியும், சுற்றி வளைத்தும் நடக்க வேண்டியதா யிருந்தது. சற்று தூரம் அவ்விதம் நடந்த பிறகு, திடீரென்று எங்கிருந்தோ பேச்சுக் குரல் வந்ததைக் கேட்டு வல்லவரையன் தயங்கி நின்றான். அங்கிருந்த ஒரு தூணைப் பிடித்துக் கொண்டும், தூணின் மறைவில் நின்றபடி எட்டிப் பார்த்தான். கீழே, குறுகலான முற்றம் ஒன்றில், மூன்று பக்கமும் நெடுஞ்சுவர்கள் சூழ்ந்திருந்த இடத்தில் பத்துப் பன்னிரண்டு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பாதிமதியின் வெளிச்சத்தை நெடுஞ் சுவர்கள் மறைத்தன. ஆனால் ஒரு சுவரில் பதித்திருந்த இரும்பு அகல் விளக்கில்

எரிந்த தீபம் கொஞ்சம் வெளிச்சம் தந்தது. அங்கிருந்தவர்கள் அத்தனை பேரும் அன்று இரவு விருந்தின்போது அவன் பார்த்த பிரமுகர்கள்தான்; சிற்றரசர்களும் சோழ சாம்ராஜ்ய அதிகாரிகளுந்தான். அவர்கள் ஏதோ மிக முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கலந்தாலோசிக்கவே நள்ளிரவு நேரத்தில் அங்கே கூடியிருக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைத்தான் ஆழ்வார்க்கடியான் மதில் சுவர் மீதிலிருந்து அவ்வளவு கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வருகிறான். ஆழ்வார்க்கடியான் மிகப் பொல்லாத கெட்டிக்காரன் என்பதில் ஐயமில்லை; அவன் இருக்குமிடத்திலிருந்து கீழே கூடிப் பேசுகிறவர்களை ஒருவாறு பார்க்க முடியும்; அவர்களுடைய பேச்சை நன்றாய்க் கேட்க முடியும். ஆனால் கீழேயுள்ளவர்கள் ஆழ்வார்க்கடியானைப் பார்க்க முடியாது. அந்த இடத்தில் மாளிகைச் சுவர்களும் மதில் சுவர்களும் அவ்வாறு அமைந்திருந்தன. அத்தகைய இடத்தை ஆழ்வார்க்கடியான் எப்படியோ கண்டு பிடித்துக் கொண்டு வந்திருக்கிறான்! கெட்டிக்காரன்தான்; சந்தேகமில்லை! ஆனால் அவனுடைய கெட்டிக்காரத்தனமெல்லாம் இந்த வாணர் குலத்து வந்தியத்தேவனிடம் பலிக்காது! அந்த வேஷதாரி வைஷ்ணவனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து.... ஆனால் அப்படி அவனைப் பிடிப்பதாயிருந்தால், கீழே கூடியுள்ளவர்களுடைய கவனத்தைக் கவராமல் அவன் உள்ள மதில் சுவரைத் தான் அணுக முடியாது. அப்படி அவர்கள் பார்க்கும்படி தான் நடந்து போவதில் ஏதேனும் அபாயம் இருக்கலாம். "இன்றைக்கு நான் பார்த்து இவன் இங்கே வந்திருக்க வேண்டியதில்லை!" என்று சம்புவரையர் கூறியது அவன் நினைவுக்கு வந்தது. இவர்கள் எல்லாரும் ஏதோ முக்கிய காரியமாகக் கலந்தாலோசிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு விருப்பமில்லை என்பது தெளிவு. அப்படியிருக்கும்போது, தன்னைத் திடீரென்று அவர்கள் பார்த்தால், தன்பேரில் சந்தேகப்பட்டு விடலாம் அல்லவா? ஆழ்வார்க்கடியானைப் பற்றி அவர்களுக்குத் தான் சொல்வதற்குள் அவன் மதிள் சுவரிலிருந்து வெளிப்புறம் குதித்து ஓடி விடுவான். ஆகையால், தன் பேரில் சந்தேகம் ஏற்படுவதுதான் மிச்சமாகும். "படுத்திருந்தவன் இங்கு எதற்காக வந்தாய்?" என்றால் என்ன விடை சொல்வது? கந்தமாறனின் நிலைமையைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவதாகவே முடியும். ஆகா! அதோ கந்தமாறன் இந்தக் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான். அவனும் இந்தக் கூட்டத்தாரின் ஆலோசனையில் கலந்து கொண்டிருக்கிறான் போலும்! காலையில் கந்தமாறனைக் கேட்டால், எல்லாம் தெரிந்து விடுகிறது.

அச்சமயம் அக் கூட்டத்தாருக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கு வந்தியத்தேவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. ஆ! இந்தப் பல்லக்கு பழுவேட்டரையருடன் அவருடைய யானையைத் தொடர்ந்து வந்த பல்லக்கு அல்லவா? அதற்குள்ளே யிருந்த பெண், ஒரு கணம் திரையை நீக்கி வெளியே பார்த்த பெண், இப்போது அந்த மாளிகையில்



எந்தப் பகுதியில் இருக்கிறாளோ? அந்தப்புரத்துக்குக்கூட அவளை இந்தக் கிழவர் அனுப்பவில்லையாமே? கொஞ்சம் வயதானவர்கள் இளம் பெண்களை மணந்து கொண்டாலே இந்தச் சங்கடந்தான். சந்தேகம் அவர்கள் பிராணனை வாங்குகிறது. ஒரு நிமிஷம் கூடத் தங்களுடைய இளம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை. ஒரு வேளை, இப்போதுகூட இந்தப் பல்லக்கிலேயே பழுவேட்டரையருடைய இளம் மனைவி இருக்கிறாளோ, என்னமோ? ஆகா! இந்த வீராதி வீரரின் தலைவிதியைப் பார்! இந்த வயதில் ஓர் இளம் பெண்ணிடம் அகப்பட்டுக் கொண்டு அவளுக்கு அடிமையாகித் தவிக்கிறார்! அப்படியொன்றும் அவள் ரதியோ, மேனகை ரம்பையோ இல்லை! வந்தியத்தேவன் ஒருகணம் அவளைப் பார்த்தபோது

ஏற்பட்ட அருவருப்பு உணர்ச்சியை அவன் மறக்கவில்லை. அத்தகையவளிடம் இந்த வீரப் பழுவேட்டரையருக்கு என்ன மோகமோ தெரியவில்லை. அதைவிட அதிசயமானது ஆழ்வார்க்கடியானது பைத்தியம். இந்தப் பல்லக்கு இங்கே வைத்திருப்பதினாலேதான் அவனும் சுவர் மேல் காத்திருக்கிறான் போலும்! ஆனால் அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவோ என்னமோ, நமக்கு என்ன தெரியும்? அவள் ஒரு வேளை அவனுடைய சகோதரியாக இருக்கலாம். அல்லது காதலியாகவும் இருக்கலாம். பழுவேட்டரையர் பலவந்தமாக அவளைக் கவர்ந்து கொண்டு போயிருக்கலாம்! அவ்வாறு அவர் செய்யக் கூடியவர்தான். அதனால் அவளைப் பார்த்துப் பேச ஒரு சந்தர்ப்பத்தை ஆழ்வார்க்கடியான் எதிர்பார்த்து இப்படியெல்லாம் அலைகிறான் போலும்! இதைப் பற்றி நமக்கு என்ன வந்தது? பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கலாம்.

இப்படி அந்த இளைஞன் முடிவு செய்த சமயத்தில் கீழே நடந்த பேச்சில் தன்னுடைய பெயர் அடிபடுவதைக் கேட்டான். உடனே சற்றுக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

''உம்முடைய குமாரனுடைய சிநேகிதன் என்று ஒரு பிள்ளை வந்திருந்தானே? அவன் எங்கே படுத்திருக்கிறான்? நம்முடைய பேச்சு எதுவும் அவனுடைய காதில் விழுந்துவிடக் கூடாது. அவன் வடதிசை மாதண்ட நாயகரின் கீழ்ப் பணி செய்யும் ஆள் என்பது நினைவிருக்க வேண்டும். நம்முடைய திட்டம் உறுதிப்பட்டு நிறைவேறும் காலம் வருவதற்குள் வேறு யாருக்கும் இதைப் பற்றித் தெரியக் கூடாது. அந்தப் பிள்ளைக்கு ஏதாவது கொஞ்சம் தகவல் தெரிந்துவிட்டது என்ற சந்தேகம் இருந்தால்கூட அவனை இந்தக் கோட்டையிலிருந்து வெளியே அனுப்பக் கூடாது. ஒரேயடியாய்... அவனை வேலை தீர்த்துவிடுவது உசிதமாயிருக்கும்....''

இதைக் கேட்ட வந்தியத்தேவனுக்கு எப்படி இருந்திருக்குமென்று நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். ஆனாலும் அந்த இடத்தை விட்டு அவன் நகரவில்லை. அவர்களுடைய பேச்சை முழுதும் கேட்டே விடுவது என்று உறுதி செய்து கொண்டான். வடதிசை மாதண்ட நாயகர் யார்? சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மூத்த குமாரர். அடுத்தபடி சோழ சிம்மாசனம் ஏற வேண்டிய பட்டத்து இளவரசர். அவரிடம் தான் வேலை பார்ப்பதில் இவர்களுக்கு என்ன ஆட்சேபம்? அவருக்குத் தெரியக்கூடாத விஷயம் இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்?

அச்சமயம் கந்தமாறன் தன் சிநேகிதனுக்குப் பரிந்து பேசியது வல்லவரையனின் காதில் விழுந்தது.

''மேல்மாடத்து மூலை மண்டபத்தில் வந்தியத்தேவன் படுத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கூட்டத்தின் பேச்சு அவன் காதில் விழப்போவதில்லை. தனக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் அவன் தலையிடுகிறவனும் அல்ல. அப்படியே அவன் ஏதாவது தெரிந்து கொண்டாலும், அதனால் உங்கள் யோசனைக்குப் பாதகம் ஒன்றும் நேராது. அதற்கு நான் பொறுப்பு!'' என்றான் கந்தமாறன்.

''உனக்கு அவனிடம் அவ்வளவு நம்பிக்கை இருப்பது குறித்து எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் எங்களில் யாருக்கும் அவனை முன்பின் தெரியாது. ஆகையினால்தான் எச்சரிக்கை செய்தேன். நாம் இப்போது பேசப் போகிறதோ, ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் உரிமை பற்றிய விஷயம். அஜாக்கிரதை காரணமாக ஒரு வார்த்தை வெளியில் போனாலும் அதனால் பயங்கரமான விபரீதங்கள் ஏற்படலாம். இது உங்கள் எல்லாருக்குமே நினைவிருக்க வேண்டும்!'' என்றார் பழுவேட்டரையர்.

(தொடரும்)





It's the cloth that matters!

Buying an umbrella? Make sure it works!
(and is colour-fast, strong, keeps its shape)
It's easy—make sure the cloth is Century's!

Century's umbrella cloth is used for all the best
umbrellas made in India because umbrella
manufacturers know that it is the cloth that matters.
Century's umbrella cloth starts right with superior
cotton and a special construction which makes
the fabric strong and not only water-proof but
shower-proof. The fabric is dyed with a special
process which makes it guaranteed colour-fast.
it is finally mercerized and schreiner
calenderized to give that smart silky finish.
At every stage of manufacture, the fabric
goes through rigid quality control tests.
The result is a cloth that really protects you
from rain or sun.

Umbrella shops everywhere stock umbrellas made with Century's cloth: buy one of these—they are the best.

Century's
UMBRELLA CLOTH
your guarantee
for quality

குடும்பப் பிரச்னை

அம்மாவும் ஆபீசுக்குப் போகிறாள்!

''ஒரு நாள் அம்மா ஆபீசுக்குப் போகவில்லை என்றால், என் மூன்றாவது பையனுக்கு ஏற்படும் சந்தோஷத்துக்கு அளவே இராது. இரண்டாவது வகுப்பில் படிக்கிறான். 'அம்மாவுடன் ஒரு நாள் முழுதும் சேர்ந்து வீட்டில் இருக்கப் போகிறோம் என்ற நினைவு அவ்வளவு இனிக்கிறது. அவனுக்கு. கணவன், மனைவி, இருவரும் உத்தியோகம் செய்கிறவர்களாக இருந்தால், குழந்தைகளுக்கு அம்மாவைப் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும், அருகிலேயே இருக்க வேண்டும் என்று ஏக்கம் பிறப்பது இயற்கைதானே?'' என்றார் திரு சங்கர சுப்பிரமணியன். சென்னை அஞ்சல் தணிக்கை அலுவலகத்தில் மேல்பிரிவு குமாஸ்தாவாகப் பணியாற்றி வருகிறார். நான்கு குழந்தைகள் (மூன்று பிள்ளைகள் ஒரு பெண்). இவரது மனைவி ஸ்ரீமதி மைதிலி டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் பணியாற்றுபவர்.

► ''திருமணத்துக்குப் பிறகு நீங்கள் வேலையில் சேர்ந்தீர்களா? அல்லது திருமணத்துக்கு முன்பே உங்களுக்கு வேலை கிடைத்துவிட்டதா?'' என்று கேட்டதற்கு ஸ்ரீமதி மைதிலி கூறினார்: ''1956ம் ஆண்டு எங்க திருமணம் நிகழ்ந்தது. மறு ஆண்டு எனக்கு வளைகாப்பு முடிந்த கையோடு வேலையில் அமர்ந்தேன். அதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பே மனுச் செய்திருந்தேன். அப்போது என் தகப்பனார் இருந்தார். அவர் விருப்பத்துக்கு இணங்கவே தான் டெலிபோன் இலாகாவில் வேலைக்கு மனுப் போட்டேன். வேலை கிடைத்த மூன்றாவது நாளே நான் பிரசவத்துக்காக (Maternity) லீவு போட்டு விட்டேன்!'' இப்படிச் சிரித்தவாறு கூறினார் மைதிலி.



''உங்கள் கணவர், நீங்கள் ஆக இருவரும் சம்பாதிப்பது உங்கள் குடும்ப நலனுக்கு இன்றியமையாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள், இல்லையா?'' என்றேன்.

''நிச்சயமாக. எங்க திருமணத்தின் போது இவர் லோயர் டிவிஷன் கிளார்க்தான். நான் வேலைக்குப் போகா விட்டால் அந்தச் சம்பளத்தில் எப்படிக் காலம் தள்ளுவது? வீட்டு வாடகை ஏறக்குறைய ரூ. 65 ஆகிவிடுகிறது. நாலு குழந்தைகளை வைத்துக் கொண்டு இவருடைய சம்பளத்தில் குடும்பம் செய்வது மிகவும் சிரமமாயிருக்கும்.''

''நீங்கள் டெலிபோன் இலாகாவில் பணியாற்றுவதால் இரவு நேரங்களிலும் வேலைக்குச் செல்லவேண்டி யிருக்குமே? அப்போது குழந்தைகளை யார் பொறுப்பில் விட்டுச் செல்லுவீர்கள்? பகல் வேளைகளில் உங்களுக்கு 'டியூட்டி' இருந்தால், அதே நேரத்துக்கு உங்கள் கணவரும் ஆபீசுக்குப் போய் விடுவாரே? குழந்தைகளைப் பராமரிப்பது ஒரு பிரச்னையாகி விடுமே?'' என்றேன்.

''கொஞ்சம் சிரமந்தான். இரவு, காலை, மாலை, பிற்பகல் இப்படியாகப் பல்வேறு நேரங்களில் நான் வேலைக்குச் செல்ல வேண்டி யிருக்கும். குழந்தைகள் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறார்களோ, அம்மாவை நினைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்துகொள்ளுகிறார்களோ என்று மனம் அலை பாயும். எனக்குக் கல்யாணமாகி ஆறு வருடங்கள் வரை என் மாமியார் இருந்தார். குழந்தையைப் பற்றிய கவலையின்றி நான் வேலைக்குப் போக முடிந்தது. வீட்டில் பெரியவர்களாக ஒருவரும் இல்லை என்றால், கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போவது எவ்வளவு சங்கடமான காரியம் என்பது என் மாமியார் காலமான பிறகுதான் நன்கு விளங்கியது.



படம்: அம்மா ஆபீசுக்குப் போனாலும் அனுசரித்துக்கொண்டு போகும் குழந்தைகள்

''வேலைக்காரியின் பொறுப்பிலே தான் குழந்தைகளை விட்டுச் செல்வேன். அதிர்ஷ்டவசமாக நல்ல வேலைக்காரி கிடைத்தாளோ, பிழைத்தேன். குழந்தையை அவள் தன்னுடைய வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போய் விடுவாள். நான் வேலையிலிருந்து திரும்பியதும் வீட்டில்கொண்டு வந்து விடுவாள். இத்தகைய நல்ல குணமும் மனமும் உள்ள வேலைக்காரி வாய்த்திராவிட்டால் நான் மிகவும் சிரமப்பட் டிருப்பேன். குழந்தை ஓரளவு

வளர்ந்துவிட்ட பிறகு, பக்கத்துப் போர்ஷனில் குடியிருந்த பெண்மணியிடம் விட்டுவிட்டு ஆபீஸ் போவேன். குழந்தையை மிக்க ஆசையோடு வைத்துக் கொள்வாள் அந்தத் தோழி. எல்லாருக்குமே இந்த வாய்ப்புக் கிடைக்குமா? என்னுடைய மூன்றுவது பையனுக்குச் சின்னக் குழந்தையாக இருக்கும் போது அடிக்கடி காய்ச்சல் வரும். அந்தக் குழந்தையை ஒரு வருட காலம் குடித்தனக்காரப் பெண்மணிதான் பொறுப்பாகக் கவனித்துக் கொண்டாள். அந்த உதவியை நான் என்றுமே மறப்பதற்கில்லை'' என்று நன்றி ததும்பக் கூறினள் மைதிலி.

'' வீட்டு வேலைகளிலும் குழந்தைகளைப் பராமரிப்பதிலும் உங்கள் கணவர் என்ன என்ன வகைகளில் உதவுவார் ?'' என்று கேட்டதும் திரு சங்கரசுப்பிரமணியன் குறுக்கிட்டு, ''நான் எந்த உதவியும் செய்வதில்லை என்பதுதான் உண்மை. மைதிலிக்கு உடம்பு சரியில்லை என்றால் ஏதோ ஒரு ரசம், சாதம் சமைத்து விடுவேன். குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்தால் டாக்டரிடம் அழைத்துச் செல்வேன். வேறு எந்த உதவியையும் என்னிடம் அவள் எதிர்பார்ப்பதில்லை. வீட்டு வேலைகளையெல்லாம் மைதிலி என் கண்ணில் காட்டுவதேயில்லை. பொறுப்பாகச் செய்ய மாட்டேன் என்பது அவள் எண்ணம். அதுவும் சரிதான்!'' என்றார்.

''என்னதான் உறவினர்களோ நண்பர்களோ கவனித்தாலும் கைக்குழந்தைக்குத் தாயின் கவனிப்புக்கு ஈடாகுமா?''

''ஆகாதுதான். உறவினர்கள் என்ன, கணவரிடமேகூடக் கைக்குழந்தையை ஒப்படைத்துவிட்டுச் சென்றாலும் மனத்துக்குச் சமாதானமாக இராதுதான். சில மாதங்கள் வரை கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கும். ஆனால், இதற்காகப் பார்த்தால் குடும்பத்தில் மாதம் சுமார் முந்நூறு ரூபாய் — நான் வாங்கும் சம்பளம் — துண்டு விழுமே ? அதை வேறு எவ்விதத்தில் ஈடு செய்யமுடியும்? குழந்தைகள் பெரியவர்களாகி விட்டால், சிரமம் மறைந்துவிடும். இருவரும் சம்பாதித்தால், குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதி அளிக்க முடியும். அவர்கள் ஆசைப்படுகிற மாதிரி ஆடைகள் வாங்கிக் கொடுக்கலாம். இப்போது பாருங்கள் ! என் மூத்த பையன் பாலசங்கர்—ஒன்பது வயதாகிறது இவனுக்கு—மிருதங்கம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டான். ஐந்து, ஆறு வயதிலிருந்தே வீட்டிலிருக்கும் காலி 'டின்'களை வைத்துக் கொண்டு மிருதங்கம் வாசிப்பதாகப் பாவித்துச் சத்தம் செய்து கொண்டிருப்பான். அவன் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அவனுக்கு ஒரு மிருதங்கம் வாங்கிக் கொடுத்து டியூஷனுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒன்றரை வருடங்களாகப் பயின்று வருகிறான். என் கணவர் சம்பளத்தைக் கொண்டுதான் குடும்பம் நடத்த வேண்டும் என்ற நிலை இருந்தால், இவனது ஆசை நிறைவேறியிருக்காது!'' என்றார் மைதிலி.

''குழந்தைகள் தவறாமல் பள்ளிக்குச் செல்கிறார்களா, நன்றாகப் படிக்கிறார்களா என்பதை நீங்கள் கண்காணிப்பதுண்டா ? உங்கள் மனைவிக்கு இதைக் கவனிக்க அவகாசம் இராதே ?'' என்று கேட்டதற்குத் திரு சங்கரசுப்பிரமணியம் கூறினர் : ''எப்போதாவது ஒழிந்த நேரத்தில் விசாரிப்பேன். என் மனைவி அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தால் 'அலுப்பாக இருக்கிறது' என்பாள். அவள் வேலைக்குப் போகாமல் வீட்டோடு இருந்தால், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க அவகாசம் கிடைக்கும். வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு ஆபீஸ் வேலைகளையும் கவனிப்பதால், குழந்தைகள் பள்ளிப் பாடம் பற்றி ஏதாவது விளக்கம் கேட்டால் அவளுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். அப்படியிருந்தும் அவ்வப்போது ஒழிந்த நேரத்தில் அவள்தான் குழந்தைகளுக்கு ஏதாவது சொல்லிக் கொடுப்பாள். மூத்த பையன், 'அம்மா ! நான் ஓர் ஆவர்த்தனம் வாசிக்கிறேன். நீ தாளம் போடுகிறாயா?' என்று மிருதங்கத்தை எடுத்து வைத்துக் கொள்வான். மறுத்துச் சொல்ல மைதிலிக்கு மனம் வராது. தன்னுடைய



சிரமத்தைப் பொருட்படுத்தாமல் பையனின் கோரிக்கைக்கு இணங்குவாள்.''

''உங்கள் கணவர் வீடு திரும்பும் நேரத்துக்குள் நீங்கள் ஆபீசுக்குக் கிளம்பும்படி உங்கள் 'டியூட்டி' அமைந்தால்? அப்போது வரும் கணவருக்குக் காப்பி, பலகாரம் கொடுத்து உபசரிக்க முடியவில்லையே என்று நீங்கள் குறைப்பட்டதுண்டா ?'' என்று ஸ்ரீமதி மைதிலியைக் கேட்டேன்.

அதற்கு அவர் சிரித்தவாறு, '' இவர் ஆபீஸ் விட்டதும் நேரே வீடு வந்து சேருவதில்லை. நாடகம் பார்க்கப் போய்விடுவார். அல்லது ஏதாவது சபா வேலை என்று போய்விட்டு, இரவு எட்டு மணிக்கு வந்து சேருவார். அமெச்சூர் நடிகர்கள், தொழில் நடிகர்கள் சங்கீத சபைக்காரர்கள் எல்லாரும் இவருக்கு நெருங்கிய நண்பர்கள். இவர் ஒழுங்கான நேரத்துக்கு வீடு திரும்பாமல் இருப்பதால் எனக்கு அந்தக் குறையே இல்லை'' என்றார்.

''பெண்கள் வேலைக்குச் செல்லுவதால் படித்த ஆண்களுக்கு வேலை கிடைக்காமல் போய்விடுகிறது...... என்று பொதுவாகப்

புகார் சொல்லப்படுகிறதே?'' என்று கேட்டதற்குத் திரு சங்கரசுப்பிரமணியன் கூறுவது:

''அதில் ஓரளவு நியாயம் இல்லாமலில்லை. என்னைப் போன்ற குறைந்த சம்பளக்காரர்கள் மனைவியை வேலைக்கு அனுப்புவதில் தவறில்லை. ஆனால் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் ஆண்கள் தங்கள் மனைவியை வேலைக்கு அனுப்புவதைத் தவிர்க்கலாம். அதிலும் டாக்டர்கள், பள்ளி ஆசிரியை முதலிய வேலைகளுக்கு அனுப்புவதில் தவறில்லை. குமாஸ்தா வேலைக்கு அனுப்பாமல் இருக்கலாம்.''

''வேறு ஏதாவது சொந்த அசௌகரியங்கள் உண்டா ?''

''நான் ஆபீசுக்குக் கிளம்பிச் செல்லுமுன் என் மனைவி புறப்பட வேண்டுமானால், நானே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட வேண்டியிருக்கிறது. மனைவியின் கையால் சாப்பாடு போட்டுச் சாப்பிட முடியவில்லையே என்று குறையாகத்தான் இருக்கிறது. அந்த குறையைப் பெரிதாக மதித்தால் குடும்ப வருவாய் குறைந்து விடுகிறது. கடன், உடன் வாங்காமல் குடும்பத்தை நிர்வகிக்க முடிகிறதே, என்று திருப்தியடைகிறேன்'' என்றார் சங்கரசுப்பிரமணியன்.

''சில சமயங்களில் குழந்தைகளுக்குக்கூட சாப்பாடு போடாமல் நான் ஆபீசுக்குக் கிளம்ப நேரிடுகிறது. பெண் குழந்தைக்குத் தலை வாரிப் பின்னிவிட அவகாசம் இருப்பதில்லை. எனக்கு மாலை அல்லது இரவு நேரத்தில் 'டியூட்டி' அமைந்தால், காலையில் பள்ளிக்கூடம் சென்ற குழந்தைகளை மறு நாள் காலை வரை பார்க்க முடியாமல் போய்விடும்.... குழந்தைகளுக்கு அந்த ஏக்கம் இன்னும் கூடுதலாகவே இருக்கும். ஆனால், ஒன்று. குழந்தைகள் வீட்டு நிலைமையைப் புரிந்து கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் எல்லாம் அமைதியாகவே இருக்கும். 'அம்மா ஆபீசுக்குப் போகிறாள்' என்றால் என் குழந்தைகள் எவ்விதத் தடையும் சொல்லுவதில்லை. ஆனால் வேறு எங்கேயாவது நான் வெளியே கிளம்பினால், அவர்களுக்கு அதில் சம்மதமில்லை. நியாயந்தானே ?''

''நீங்கள் இருவரும் சம்பாதிப்பதால், கணிசமாக ஏதாவது சேமித்து வைக்க முடியுமே?'' என்று கேட்டேன்.

''வேளச்சேரி அருகில் வீடு கட்ட மனை வாங்கியிருக்கிறேன். வீடு எப்போது கட்டப் போகிறேனோ தெரியாது. வீட்டு வாடகை மாதந்தோறும் கொடுக்கும் போது சொந்த வீடு வேண்டும் என்ற ஆவல் தோன்றுகிறது. ஆனால் வீடு கட்டுவது சுலபமாக இருக்கிறதா? ஏதோ இந்த அளவுக்குக் குழந்தைகளுக்கு யாதொரு குறையும் வைக்காமல், கடன் வாங்காமல் குடித்தனம் செய்ய முடிகிறதே என்பதில் நான் என் மனைவி இருவருமே நிறைவு காண்கிறோம். பணப் பிரச்னை ஒன்றுதான் பெரும் பிரச்னை. மனைவி ஆபீசுக்குப் போவதன் மூலம் அது தீர்ந்துவிட்டால், மற்ற சில்லறைப் பிரச்னைகள் எல்லாம் தாமாகத் தீர்வுகண்டு விடும்'' என்றார் திரு சங்கரசுப்பிரமணியம்.

—'பாணன்'

ஓர் அன்பளிப்பு

புதிய நேரடிச் சந்தாதாரர்களுக்கு 'பிரபல நட்சத்திரம்' என்னும் இந்தச் சிறுகதைத் தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்ததும் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே இந்த நல்வாய்ப்பை அன்பர்கள் பலர் பயன்படுத்திக் கொண்டனர். வேறு பல வாசகர்கள் இந்த ஜூலை — ஆகஸ்டு மாதங்களில்தான் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்றும் அதனால் சம்பளத்துக்காகவும் புத்தகங்களுக்காகவும் இம்மாதங்களில் ஏகமாகச் செலவாகிறதென்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். இன்னும் ஒரு மாத காலத்துக்கு இந்த விசேஷச் சலுகையை நீடித்தால் பிரபல நட்சத்திரம் சிறுகதைத் தொகுப்பைத் தாங்களும் பெற்று மகிழலாமே என்று ஆசையுடன் விண்ணப்பித்திருக்கிறார்கள்.



இவர்களது வேண்டுகோளுக்கிணங்க, இந்த விசேஷச் சலுகையை செப்டம்பர் முப்பதாம் தேதிவரை நீடித்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய நேரடிச் சந்தாதாரர்கள் மட்டுமின்றி, ஏற்கெனவே நமது காரியாலயத்தில் கல்கிக்குச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களும் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் பெற முடியும். அதற்கு அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குள் தங்கள் சந்தாவை ஒரு வருடத்துக்குப் புதுப்பித்துக் கொண்டால் போதும்.

ஓர் ஆண்டுச் சந்தாவை மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு நேரடியாக மேற்படி தேதிக்குள் அனுப்ப வேண்டுகிறோம். சந்தாத் தொகை அனுப்பும்போது ''கல்கி சந்தா - புத்தக அன்பளிப்புத் திட்டம்'' எனத் தவறாது குறிப்பிடவும்.

ஆண்டுச் சந்தா: **இந்தியா: ரூ. 20. வெளிநாடுகள்: ரூ. 40.**
இலங்கை: (இலங்கை நாணய மதிப்புப்படி) ரூ. 21.

முதல் இரண்டு இதழ்களில் பொன்னியின் செல்வன் கதையைப் படிக்கத் தவறியவர்கள் இந்தக் கதைப் பகுதியை மட்டும் உள்ளூர் கல்கி ஏஜெண்டிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.



ஓநாய்க் கோட்டை
32
'குதிரைப் பாய்ச்சல் ஈட்டி வீச்சு' என்பது, இரு குதிரைகள் பூட்டிய தேரிலே ஈட்டி ஏந்திய இரு வீரர் இருப்பர். குற்றவாளியின் கைகளைக் கட்டி மைதானத்திலே நிறுத்தி வைப்பார்கள். தேரும் அதில் உள்ள ஈட்டிகளும் அவனை நோக்கிப் பாய்ந்து வரும். இந்தக் கொடிய தண்டனையிலிருந்து தப்பவே முடியாது......
கதை வாண்டுமாமா.
சித்திரம் ரமணி..
தூமகேதுவின் உருமாற்றத்தைக் கண்ட ஆனந்தனுக்கு வியப்பாக இருந்தாலும் வெறுப்பை வெளிக் காட்டாதிருக்க முடியவில்லை...
உன் துரோகத்துக்கான பரிசுதானா இந்தச் சுந்தர முகம்?....
ஏளனம் வேண்டாம். உன் இறைவனை வேண்டிக் கொள். இன்னும் சற்று நேரத்தில் உங்கள் வாழ்வு முடியப் போகிறது.
கந்தனும் ஆனந்தனும் ஈட்டி வீச்சை ஏற்கக் கொண்டு வரப்பட்டார்கள்.....
அவர்களின் கரங்களைக் கட்டிக் களப்பலிக்குத் தயாராக்கும் கடமையை நானே செய்கிறேன். ஓநாய்த் தலைவர் எனக்கு அளித்த புனர் வாழ்வுக்கு நான் என் நன்றியைச் செலுத்தியாக வேண்டும்...
அவ்விருவரையும் பலிக்குத் தயாராக்கும் பொறுப்பைத் தூமகேதுவிடமே விடுங்கள்..
மரண வலையைக் கண்டு களிக்க ஓநாயர்கள் ஆரவாரமிட்டபடி ஒதுங்கிப் போனார்கள். தூமகேது ஆனந்தனின் அருகில் வந்தான். வெறுப்போடு நோக்கிய அவர்களின் காதருகே தூமகேதுவின் குரல் கிசுகிசுத்தது.
ஆனந்தா, என்னை மன்னித்து விடு. விகாரமுகம் மறைவதற்காக இதுவரை நான் ஆடியது நாடகம். சுய நலம்தான். என்ன தெரிகிறது? இதோ வாள். உன் கட்டுக்களைப் போக்கு.
தூமகேது, சுயகாரியப் புலியே. இந்த உன் வார்த்தைகளை எப்படி நம்புவது?
இரைந்து பேசாதே. என்னை நம்பு. தேரிலே நாலிரண்டு ஈட்டி வீரர்களை ஏமாறுவதற்கு அனுப்பு. மற்றவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன். கட்டுண்டவர்களைப் போல இருங்கள்...
கொடியவர்களால் கொம்பூட்டப்பட்ட குதிரைகள் வெறி கொண்டு திசையில் ஈட்டி ஏந்திய வீரர்களைத் தாங்கிய தேரை இழுத்துக் கொண்டு கிளம்பியது இடி ஓசையுடன்.
குறி தவறி விடாதீர்கள். ஓநாய்த் தேவனின் புனித ஆலயத்தை அழித்த பயவர்களின் ரத்தத்தால் உங்கள் ஈட்டி முனை நனைக்கப்பட வேண்டும்.


ஆனந்தா! தூமகேதுவை இன்னுமும் நம்புகிறாயா? அதோ நம்மை நோக்கிப் பாய்ந்து வருகிறது தேர்.
கந்தா, நம்பிக்கையில்தான் இந்த உலகமே இயங்குகிறது. உயிர் காத்துக் கொள்ள உடைவாளைக் கொடுத்தவனை நம்பாதிருக்கலாமா..? ம்.. ம்..புல் தரையில் உருண்டு ஒதுங்கிக் கொள்.
புழுதியைக் கிளப்பியபடி புயல் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. ஈட்டித் தேர்...
தூமகேதுவை எந்த அளவிற்கு நம்புவது..? அதோ.. தேர்.. இரு குதிரை களுக்கு மிடையே தாவிப் பாய்ந்து.....
போர்க் கலையிலே வல்லவனான ஆனந்தன் துணிச்சலுடன் அதே சமயம் லாகவத்தோடு தன்னை நோக்கிக் கொல்ல வந்த தேர் மீது பாய்ந்து ஏறிப் பற்றிக் கொண்டான்...
ஈட்டி ஏந்திய ஓநாய்கள் இச் செயலைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை..
ஆ.. ஐயோ!
தேரின் வேகம், ஆனந்தனின் துணிச்சல், தேரோட்டியின் பிரமிப்பு இவைகளிடையே ஈட்டி வீரர்கள் செயலிழந்தார் கள். ஆனந்தனின் கைவாள் மூவரையும்.......



வெறி கொண்ட குதிரைகள் தறிகெட்டோட ஒரு பாறையின் மீது சக்கரம் ஏறி.....
புல் தரையில் உருண்டார்கள். ஆனால் உயிர் பிழைத்தது ஆனந்தன் ஒருவன் தான்! ஆனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை....
தேர் உருண்ட அதே வேளையில் தாமகேது மின்னல் வேகத்தில் செயல்பட்டான். கந்தன் போரிட ஒரு வாளை அவன் பக்கம் வீசினான். தாமகேதுவின் வாளும் சுழன்று விளையாடியது...
கந்தா, முடிந்தவரை கொன்று குவி. உன் வலிமையை யெல்லாம் காட்டிப் போரிடு.
வாழ்வு அல்லது சாவு.. ஓநாய்களை ஒழித்த பின் தான் ஓய்வு எனக்கு.
இந்த வேளையில் ஓநாய்த் தலைவனின் நிலை?
மோசம் போனோம்.. ஏமாந்து போனோம்.. துரோகி தாமகேது வஞ்சித்து விட்டான் நம்மை. கைதிகளின் கரங்களைக் கட்டவில்லை. அவர்களுக்கு ஆயுதமும் கொடுத்துத் தாவும்... ஐயோ! குறி பார்த்து அம்பெய்து கொல்லுங்கள்.
ஓலமிட்ட ஓநாய்த் தலைவனின் பார்வையில் தூரத்தே புல் வெளியில் மயங்கிக் கிடக்கும் ஆனந்தனின் உருவம் படுகிறது. ஏமாற்றமும் கோபமும் வெறியாக மாறிய நிலையில் ஓடுகிறான் ஆனந்தனை நோக்கி..
என் கூட்டத்தையே புனிதமான எங்கள் தேவனின் ஆலயத்தையே அழித்த உன்னைக் கொன்றுதான் ஓநாய்த் தேவனின் கோபம் தணியும்.
வெறி கொண்டவனின் ஓங்கிய குத்துவாள் தனியு முன்பு தாமகேதுவின் கண்களில் அந்தக் காட்சி படுகிறது...
ஐயோ, ஆனந்தன்..! கொடியவனே.. இதோ என் ஈட்டி உன் உயிரைக் குடிக்கட்டும்.


ஆ...வ்...வ் ஐயோ!
ஒழிந்தான் ஓநாய்த் தலைவன்.
தலைவனை இழந்த ஓநாய்கள் திக் பிரமை யடைந்து சிதறி ஓடின. அதே சமயம் மங்கள தூர்க்கத்துப் போர்ப் படை தங்கள் மன்னர் ஆனந்தரைப் பற்றிய தகவல் ஏதுமில்லையே என்ற கவலையோடு தேடி வருகிறது....
கலந்தோறும் ஓநாய்களைக் கந்தனும் தாமகேதுவும் மங்கள தூர்க்கத்துப்படைகளும் சூழ்ந்து கொண்டு — கொன்று குவிக்கின்றனர்...
கோரமும் கொடுமையும் நிறைந்த கூட்டம் ஒழிக்கப்பட்டு விட்டது. சேனாபதியாரே சமயத்தில் நீங்களும் வந்தது தான் ஆச்சரியம், ஆண்டவன் செயல்.
கந்தர்வ புரியைச் சூட்டெரித்துச் சிம்ம வர்மரின் கொட்டத்தை அடக்க வேண்டும்...
தாங்கள் நாடு திரும்பாததும், கந்தர்வ புரி மன்னர் சிம்மவர்மரின் சமாதானம் எங்களுக்குத் திருப்தியளிக்காததாலும் தேடிக் கொண்டு கிளம்பினோம் அரசே!
ஹேமதியைக் காண வேண்டும் இல்லையா? என் இருப்பிடம் போவோம்.
கந்தா, கானக வாழ்க்கையைக் கைவிட மனமில்லாத உன்னை வற்புறுத்தவும் எனக்கு விருப்பமில்லை. சென்று வருகிறோம். விடை கொடு..
எங்கிருந்தாலும் உனக்கு என் உதவி உண்டு. கந்தர்வபுரியினால் ஏதாவது தொல்லையானால் சொல்லியனுப்பு. என் கானகத்துப் படையோடு வந்து அந்தப் பேராசையே பொய்யாக்கி விடுகிறேன்..
ஓநாய்க் கோட்டையைத் தகர்த்து அந்தக் கூட்டத்தை ஒழித்துக் கட்டி வெற்றி வாகையோடு திரும்பும் ஆனந்தனுக்கும் கந்தனுக்கும் நாமும் விடை கொடுப்போம்..
முற்றும்..



மகாபாரதம் — ராஜாஜி

உத்தரன் ''சரி'' என்று சொன்னவுடன் உத்தரை நடனசாலைக்கு ஓடிப் போய்அருச்சுனனாகிய பிருகன்னளையிடம் விஷயத்தைத் தெரியப்படுத்தினாள்.

''பிருகன்னளையே! எனது பிதாவினுடைய தனத்தையும் பசுக்களையும் கௌரவர்கள் கவர்ந்து கொண்டு போகிறார்கள். அரசன் நகரத்தில் இல்லாத சமயம் பார்த்து இந்தத் துஷ்டர்கள் வந்திருக்கிறார்கள். நீ அருச்சுனனுக்கு ரதம் ஓட்டி யிருக்கிறாய் என்றும் யுத்தப் பயிற்சி பெற்றிருக்கிறாய் என்றும் ஸைரந்திரி சொல்லுகிறாள். ராஜகுமாரனுக்கு நீ சாரதியாகச் செல்ல வேண்டும்'' என்று வேண்டினாள்.

அருச்சுனன் கொஞ்ச நேரம் தயங்குவதைப்போல் காட்டிக் கொண்டான்; பிறகு ஒப்புக் கொண்டான். கவசத்தைப் பெற்றுக்கொண்டு யாதொன்றும் தெரியாததுபோலத் தலைகீழாக அணிந்து கொள்ளப் போனான். அந்தப்புரத்திலிருந்த ஸ்திரீகள் அதைக் கண்டு சிரித்தார்கள். இவ்வாறு கொஞ்ச நேரம் வேடிக்கை செய்த பிறகு பிருகன்னளை குதிரைகளைப் பிடித்துத் தேரில் பூட்டும்போது தேர்ச்சி பெற்ற சாரதியைப் போலவே தோன்றினாள். கடிவாளம் பிடித்துக் குதிரைகளையும் நன்றாகவே ஓட்டினாள். உத்தரனும் ஏறிச் சிம்மக் கொடி பறக்க ரதம் சென்றது.

''இராஜ குமாரன் வெற்றி பெறுவான். எதிரிகள் அணிந்திருக்கும் வஸ்திரங்களைப் பறித்துக் கொண்டு வந்து வெற்றிப் பரிசாக உங்களுக்கெல்லாம் தருவான்'' என்று பிருகன்னளை ஸ்திரீகளுக்குச் சொல்லியபோது அந்தப்புரப் பெண்கள் எல்லோரும் ஜயகோஷம் செய்தார்கள்.

46. உத்தரன்

பிருகன்னளையைத் தேர்ப் பாகனாக அமைத்துக் கொண்டு விராடனுடைய மகன் உத்தரன் நகரத்திலிருந்து உற்சாகமாகவே புறப்பட்டான். ''வேகமாக ஓட்டு! கௌரவர்கள் பசுக்களை வளைத்து ஓட்டிக் கொண்டு போகும் திசையை நோக்கிச் செலுத்து!'' என்று சொன்னான்.

குதிரைகளும் வேகமாகச் சென்றன. கௌரவ சேனை கண்ணுக்குத் தென்பட்டது. ஆகாயம் அளாவிய புழுதிக்குப் பின் நான்கு திசைகளையும் அடைத்துக் கொண்டு கடல் போல் பரவி நின்றது அந்தச் சேனை. பீஷ்மரும் துரோணரும், கிருபரும், துரியோதனனும், கர்ணனும் அணிவகுத்து நடத்தும் பிரும்மாண்டமான படையைக் கண்டான்.

அப்போது உத்தரனுக்குத் தன்னையும் அறியாமல் நடுக்கமும், மயிர்க்கூச்சமும் உண்டாகி, பயத்தினால் இரு கண்களையும் கைகளால் மூடிக்கொண்டான். அவனால் தாங்க முடியவில்லை.

''இவ்வளவு பெரிய படையை நான் எவ்வாறு எதிர்ப்பேன்? கௌரவர்களோடு போர் புரிவதற்கு நான் திறமை உள்ளவன் அல்ல. என்னுடைய பிதாவான அரசர் நம்முடைய சேனை முழுவதையும் திரட்டிக் கொண்டு சுசர்மனை எதிர்க்கப் போய்விட்டார். நகரத்தைக் காப்பின்றிச் செய்து விட்டார். எனக்குப் படையுமில்லை! படைத் தலைவர்களுமில்லை. ஒருவிதத் துணையுமில்லை! உலகப் பிரசித்தி யடைந்திருக்கும் இந்த வீரர்களை நான் எவ்வாறு எதிர்ப்பேன்? பிருகன்னளையே! தேரைத் திருப்பு!'' என்றான்.

பிருகன்னளை சிரித்தாள். ''உத்தரனே! ராஜ குமாரனே! ஸ்திரீகளுக்கு



முன் தற்புகழ்ச்சி பேசிவிட்டு என்னையும் அழைத்துக் கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டாய். பிரதிக்ஞை செய்துவிட்டுத் தேரின் மீது ஏறினாய். ஊர் ஜனங்கள் உன்னை நம்பியிருக்கிறார்கள். ஸைரந்திரியும் என்னைப் புகழ்ந்து நீயும் ஒப்புக் கொண்டு நான் உன்னுடன் வந்து விட்டேன். பசுக்களை மீட்காமல் ஊர் திரும்பினோமானால் எல்லோரும் பரிகசிப்பார்கள். நான் திரும்ப முடியாது. நீ உறுதியாக நின்று யுத்தம் செய். பயப்பட வேண்டாம்'' என்று சொல்லித் தேரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டே போனாள். பகைவர்களுடைய சேனைக்கு அருகே வந்ததும் உத்தரனுடைய பயமும் முன்னை விட அதிகரித்தது.

''முடியவே முடியாது. கௌரவர்கள் பசுக்களை இஷ்டப்படி கொண்டு போகட்டும். ஸ்திரீகள் என்னைப் பரிகாசம் செய்தாலும் செய்யட்டும். யுத்தத்தினால் என்ன பயன்? ஒரு லாபமுமில்லை. நான் திரும்பித்தான் போவேன். நீ தேரைத் திருப்பு. இல்லாவிட்டால் நானே தனியாக நடந்து போவேன்'' என்று சொல்லி உத்தரன் அம்புகளையும் வில்லையும் எறிந்து விட்டுத் தேரினின்றும் கீழே குதித்து, பயத்தினால் ஆவேசமாகிப் பைத்தியக்காரனைப்போல் நகரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

இது கதையில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் நடக்கும்தான். உத்தரன் மட்டுமே இப்படிச் செய்தான் என்று யாரும் எண்ணக் கூடாது. இப்போது நடக்கும் யுத்தங்களிலும் கூட இம்மாதிரி அநேக வீரர்களுக்கு முதன் முதலில் கிலி பிடித்து அடக்க முடியாத பயம் மேலிடுவதுண்டு. பல யுத்த வீரர்கள் அதைப் பற்றி எழுதியும் சொல்லியும் இருக்கிறார்கள்.

பயம் என்பது ஒரு தனிப்பட்ட உடல் வேகம். வீரர்களும் அதனுடன் போரிட்டிருக்கிறார்கள். முடிவில் அதை ஆத்ம சக்தியினால் துரத்தி



விட்டு வெற்றியோடு விளங்கியிருக்கிறார்கள்.

''ராஜ குமாரா! நில்! ஓடாதே!! க்ஷத்திரியன் இவ்வாறு செய்யலாகாது'' என்று சொல்லி ஓடும் உத்தரனை அர்ச்சுனன் துரத்திக் கொண்டு போனான். தொங்கும் தலைப் பின்னல் ஆட உடுத்தியிருந்த புடவையும் வீசி வீசி ஆடப் பிருகன்னளையானவள் உத்தரனைத் துரத்திக் கொண்டு போனாள்! உத்தரன் அவள் கைக்குச் சிக்காமல் புலம்பிக் கொண்டு இங்கும் அங்கும் ஓடினான். எதிரில் கௌரவ சேனையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்தக் காட்சி மிக வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

''இது யார்? புருஷனைப் போலும் காணப்படுகிறாள். ஆனால் ஸ்திரீ வேஷமாகவும் இருக்கிறது. ஒருவேளை அருச்சுனனாக இருக்கலாமோ?'' என்று துரோணர் சந்தேகித்தார்.

கர்ணன், ''இவனாவது அர்ச்சுனனாவது? இருந்தாலும் என்ன? மற்ற பாண்டவர்கள் இல்லாமல் அர்ச்சுனன் மட்டும் வந்து நம்மை என்ன செய்துவிட முடியும்? விராட ராஜன் தன் குமாரனைத் தனியாக ஊரில் விட்டு விட்டுச் சேனை முழுவதையும் கூட்டிக் கொண்டு சுசர்மனோடு யுத்தம் செய்யப் போய் விட்டிருக்கிறான். சிறுவனை ராஜகுமாரன் அந்தப்புரத்தில் பணிவிடை செய்யும் அலியைத் தனக்குச் சாரதியாக அமைத்துக் கொண்டு தனியாக வந்திருக்கிறான். இவ்வளவே விஷயம்'' என்றான்.

''என்னைப் பிடிக்க வேண்டாம். உனக்குப் பணம் தருவேன். புடவைகள் தருவேன். வேண்டியதை யெல்லாம் உனக்குக் கொடுப்பேன். நான் ஊருக்குத் திரும்பிப் போகிறேன். நீ நல்லவள்; என்னை விட்டுவிடு. என் தாயாருக்கு ஒருவனே மகன். நான் சிறுவன். தாயாரின் பக்கத்தில் படுத்து வளர்ந்தவன். எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டும், கூச்சலிட்டுக் கொண்டும், உத்தரன் பிருகன்னளைக்குச் சிக்காமல் இங்குமிங்கும் ஓடினான்.

பிருகன்னளையும் அவனை விட்டபாடில்லை. துரத்திப் பிடித்து அவனைத் தேரின் மேல் பலாத்காரமாக ஏற்றினாள்.

''அறிவின்மையால் வீரியம் பேசினேன். ஐயோ! நான் என்ன செய்வேன்? என் விதியோ?'' என்று உத்தரன் அழுதான்.

''ராஜகுமாரனே! பயப்பட வேண்டாம். இந்தக் கௌரவர்களோடு போர் புரிவேன். குதிரைகளை மட்டும் நீ பார்த்துக்கொள். நீ தேரை ஓட்டினாயானால் மீதியை நான் செய்து முடிப்பேன். உனக்கு ஜயம் உண்டாகும். நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஓடிப் போவதனால் உனக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. என்னுடைய முயற்சியால் இந்தச் சேனை தோல்வியடைந்து சிதறி ஓடும். நான் உன்னுடைய பசுக்களை மீட்டுக் கொண்டு வருவேன். உனக்குப் புகழ் உண்டாகும்'' என்று சொல்லி அருச்சுனன் உத்தரனை ரதத்தின் மேல் ஏற்றிக் குதிரைக் கடிவாளங்களை அவன் கையில் கொடுத்தான். மயானத்தில் உள்ள வன்னி மரத்துப் பக்கம் தேரை நடத்தச் சொன்னான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த துரோணர், இவன் அருச்சுனனே என்று மனத்தில் தீர்மானித்துப் பீஷ்மருக்கும் குறிப்பாகச் சொன்னார். துரியோதனன் கர்ணனைப் பார்த்து ''இவன் யாராக இருந்தால் நமக்கு என்ன கவலை? பார்த்தனாக இருந்தால் நம்முடைய காரியம் நிறைவேறினதாகவே முடியும். பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷங்கள் காட்டுக்குப் போக வேண்டியதாகும்'' என்றான்.

வன்னி மரத்தண்டை வந்ததும் பிருகன்னளை உத்தரனைப் பார்த்து, ''விராட புத்திரனே! உனக்கு ஜயம்! குதிரைகளை விட்டு விட்டு இறங்கி, இந்த மரத்தின் மீது ஏறி, மேலே கட்டியிருக்கும் ஆயுதங்களைக் கொண்டு வா'' என்றாள்.

உத்தரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. திகைத்து நின்றான். மறுபடியும் அருச்சுனனை அந்தப் பிருகன்னளை, ''ரதத்திலிருக்கும் இந்த ஆயுதங்கள் எனக்குப் போதியவை யல்ல. இந்த மரத்தின் மேல் பாண்டவர்களுடைய திவ்விய ஆயுதங்கள் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுத்து வா'' என்றாள்.

''இந்த வன்னி மரத்தில் கட்டித் தொங்குவது வேடக் கிழவியின் சவம் என்றல்லவா சொல்கிறார்கள்? சவத்தை நான் எவ்வாறு தொடுவேன்? இந்த மாதிரியான காரியத்தை என்னைச் செய்யச் சொல்லுகிறாயே?'' என்றான் உத்தரன் மிக்க வருத்தத்துடன்.

''கட்டித் தொங்குவது சவமல்ல உத்தரனே! அது பாண்டவர்களுடைய ஆயுதங்கள் என்பது எனக்குத் தெரியும். தைரியமாக மரத்தின் மீது ஏறி அதைக் கொண்டு வா! தாமதம் செய்யாதே!'' என்றான் அருச்சுனன்.

தடுத்து ஒன்றும் செய்ய முடியாதவனாகி உத்தரன் பிருகன்னளை சொன்னபடி மரத்தின் மீது ஏறி, கட்டியிருந்த மூட்டையை அருவருப்புடன் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான். தோல்

ASP/LT-2D/67 TAM

யார் சொன்னது லக்மே டால்கம் விலையுயர்ந்தது என்று?

தூவித் தூவி மகிழுங்கள் மேனிமுழுதும்!



தூவித் தூவி
மகிழுங்கள் ஆசை
தீர. மகரந்த மாரி
பொழியட்டும்
மெய்குளிர.
நாளெல்லாம் நேசக்
கதை சொல்லும் நறு
மணம். விரும்பிய
மாத்திரத்தில் கைக்
கெட்டும் விலைநயம்.
லக்மே டால்கம்- உரிமை
கொள்வீர்கள் உடலார.
உபயோகித்து மகிழ்ச்சிச்
சுழலிலே திளைக்க 'லக்மே
கரமான' நறுமணவகை
கள் நான்கு: லேவெண்
டர், நிர்வாண், வெட்டி
வேர், சந்தனம்.

லக்மே
டால்கம்

இருமலா?

க்ளைகோடின்

சாப்பிட்டதும் போய்விட்டதே!



சற்று முன்புதான் அவள் இருமலால் தவித்துக் கொண்டிருந்தாள் என்றால் நம்புவீர்களா? பிறகு க்ளைகோடின் சாப்பிட்டாள். க்ளைகோடின் அவள் இருமலை வெகுசீக்கிரம் பூரணமாக நிறுத்திவிட்டது

பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!

பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலிருந்தும் இருமலை விரட்டியடிக்க மருத்துவரீதியாக அங்கீகரிக்கப்பட்ட க்ளைகோடின் புதிய ஃபார்முலா செயல்படுவது எப்படி என்று பாருங்கள்:

தொண்டையில்—
சளி அடைப்பை அகற்றி, எரிச்சலைச் சமனப்படுத்துகிறது.

நுரையீரல்களில்—
அடைத்துக் கொண்டிருக்கும் கோழையைத் தளர்த்தி, சளியை வெளியேற்றுகிறது.



மூளையில்—
இருமல் கேந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

மார்பில்—
இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது.



க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இருமல்களுக்கு, மிக அதிகமாக விற்பனையாகும் வீட்டு நிவாரணி

Alembic

அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கோ. லிட்., பரோடா-3

everest/352e/AWC tm

மூட்டையை அவிழ்த்ததும் சூரியன் போல் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டு ஆயுதங்கள் காணப்பட்டன.

உத்தரன் அவற்றின் ஒளியைக் கண்டு பிரமித்துக் கண்களை மூடிக் கொண்டான். பின்னர் தைரியமடைந்து மகிழ்ச்சியோடு அவற்றை யெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். அந்த ஸ்பரிசத்தினாலேயே உத்தரன் வீரியத்தை அடைந்தான்.

''சாரதியே! இது என்ன ஆச்சரியம்? இந்த விற்களும் அம்புகளும் கத்திகளும் பாண்டவர்களுடையது என்கிறாயே! அவர்கள் ராஜ்யத்தை இழந்து, கானகம் சென்று காணாமல் மறைந்தார்களே? பாண்டவர்களை நீ அறிவாயா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?'' என்று உற்சாகமாகக் கேட்டான்.

அப்போது அருச்சுனன் விராடன் மகனுக்குத் தான் யாரென்பதையும், தன் சகோதரர்களைப் பற்றியும் திரௌபதியைப் பற்றியும் எல்லாம் சொன்னான். ''அரசனுக்குப் பணிவிடை செய்து வந்த கங்கரே தருமபுத்திரர். உன் பிதாவுக்கு ருசியான ஆகார வகைகளைப் பக்குவம் செய்து வந்த சமையற்கார வல்லனே பீமசேனன். எவளை அவமானப்படுத்தினதால் கீசகன் இறந்தானோ அந்த ஸைரந்திரியே புகழ் பெற்ற பாஞ்சாலி என்று அறிவாய்! குதிரைகளைக் கட்டுகிற தாமக்கிரந்தியும், பசுக்களைக் காக்கும் தந்திரீபாலனும் நகுல சகதேவர்கள் என்று அறிவாய். நானே தனஞ்சயன்! நீ பயப்பட வேண்டாம், ராஜ குமாரனே! என்னுடைய வீரியத்தை இப்போது பார்ப்பாய். பீஷ்மரும் துரோணரும் அசுவத்தாமரும் பார்த்துக் கொண்டிருக்க இந்தக் கௌரவ சேனையைத் தோற்கடித்துப் பசுக்களை மீட்டுக் கொண்டு வருவேன். நீயும் புகழ் பெறுவாய்'' என்றான்.

அப்போது உத்தரன் கைகூப்பி வணங்கி, ''பார்த்தனே! நான் பாக்கியவான் ஆனேன், புகழ் பெற்ற தனஞ்சயனையா நான் இப்போது என் கண்களால் பார்க்கிறேன், விஜயனா என்னை வீரனாக்கினான்! அறியாமையால் செய்யப்பட்ட என் பிழையைப் பொறுக்க வேண்டும்!'' என்றான்.

பெருஞ் சேனையைப் பார்த்து உத்தரன் பயந்து போகாமல் இருக்கவும் அவனுக்குப் பூர்ண தைரியம் உண்டாவதற்காகவும் அருச்சுனன் தான் செய்த பல வீரச் செயல்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு போனான். பிறகு கௌரவ சேனையின் முன் தேரை நிறுத்திக் கீழே இறங்கிக் கடவுளை வணங்கிக் கையிலுள்ள சங்கு வளையல்களைக் கழற்றி விட்டுத் தோல் கையுறைகளைப் போட்டுக் கொண்டான். தொங்கும் தன் தலைமயிரைத் தூக்கி வஸ்திரத்தினால் கட்டி முடிந்து கொண்டு, கிழக்கு முகமாக நின்று அஸ்திரங்களைத் தியானம் செய்துவிட்டுத் தேரில் ஏறிக் காண்டீபத்தை ஏந்தினான். அதில் நாண் ஏற்றி மூன்று தடவை இழுத்து விட்டான். அதனாலுண்டான பேரொலி எட்டுத் திக்குகளிலும் எதிரொலி உண்டாக்கிற்று. கௌரவர்களுடைய சேனையிலிருந்த வீரர்கள் அதைக் கேட்டதும், ''இது காண்டீபம்'' என்று கத்தினார்கள். அருச்சுனன் தன் உருவம் நன்றாக விளங்கத் தேரின் மேல் நின்று தேவதத்தம் என்கிற தன்னுடைய சங்கை வாயில் வைத்து ஊதினான். கௌரவப் படை நடுங்கிற்று.

''பாண்டவர்கள் வந்துவிட்டார்கள்'' என்று சேனை முழுவதும் பரபரத்தது.

அந்தப்புரப் பெண்களின் முன் சூரனைப் போல் பேசி, சேனையைக் கண்டதும் பயந்து ஓடிய உத்தரனுடைய கதை பாரதத்தில் அமைந்திருப்பது ஹாஸ்யத்துக்காக மட்டிலுமல்ல.

குணங்களைப் படைத்தவர்கள் அத்தகைய குணங்கள் இல்லாதவர்களைப் பார்த்து வெறுப்பது மனித சுபாவம். வீரியம் படைத்தவர்கள் வீரியம் காட்ட முடியாமல் பயப்படும் ஜனங்களைப் பார்த்து இகழ்வது சகஜம். ஆனால் தனஞ்சயன் அவ்வாறு செய்யவில்லை. மகாத்மாவும் உண்மை வீரனுமான அவன் உத்தரனுடைய நிலையைக் கண்டு அவனுக்கு வேண்டியதைச் செய்து, அவனையும் வீரனாக்கினான். தான் படைத்த தைரியத்துக்குத் தன் பிறவிக் குணமே காரணம் என்று அறிந்து அகம்பாவத்தை அகற்றிய அருச்சுனன் தைரியம் இழந்த உத்தரனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து அவனுக்கும் புகழ் சம்பாதித்துக் கொடுத்தான்.

இதுவே தனஞ்சயனுடைய தனிப் பண்பு. தன்னுடைய சக்தியை அளவு கடந்து உபயோகிக்க மாட்டான். கிட்டிய சௌகரியங்களைப் பயன்படுத்திக் கொண்டு வெறுக்கத் தக்க செயல்களை அருச்சுனன் ஒரு நாளும் செய்ய மாட்டான். அவன் பெற்ற பல பெயர்களில் பீபத்ஸு என்பதும் ஒரு பெயர். தகாத செயல்களைச் செய்ய மாட்டான்; கூச்சப்படுவான் என்பது அதன் பொருள்.

அருச்சுனனால் வீரனாக்கப்பட்ட உத்தரன் பிறகு பெரிய குருக்ஷேத்திர யுத்தத்தில் யானைமேல் சென்று சல்யனை எதிர்த்து வீர சுவர்க்க மடைந்தானென்பது பின்னால் சொல்லப்படும். **(தொடரும்)**



சேலைக்கு வேலை இல்லையா?

"வர வரத் தமிழ்ப் படங்களில் சேலைக்கு வேலையில்லாமல் போய் விடுகிறது. நேற்றைக்கு நான் பார்த்த ஒரு தமிழ்ப் படத்தில் வரும் ஒரு பெண், படம் முழுக்கக் கவுனும், ஜீன்ஸும், ஸ்கர்ட்டும் அணிந்து காட்சியளித்தாள். கடைசியாக ஒரே ஒரு காட்சியில் மட்டும் அவள் புடவை அணிந்து வருகிறாள். அது கற்பழிக்கப்பட்டு வீட்டை விட்டு வெளியேறும் காட்சி! 'மானம் காக்கத்தான் புடவை' என்பார்கள். ஆனால் இன்று 'மானம் போன பின்னர்தான் புடவை' என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது போலும்! - சௌந்தரா கைலாசம்

இது பற்றி ஸ்ரீமதி சந்தியா (குமாரி ஜெயலலிதாவின் தாயார்) கூறியதாவது:

உடை விஷயங்களில் நடிகையருக்கு என்று தனிப்பட்ட அபிப்பிராயம் எதுவும் கிடையாது. எல்லாம் படத் தயாரிப்பாளர்கள், டைரக்டர்களுடையதே. வீட்டில் இருக்கும் போதும், வெளியே செல்லும் போதும், விழாக்களில் பங்கு கொள்ளும் போதும் மட்டும் நடிகையர் தங்கள் விருப்பத்துக் கேற்ப ஆடை உடுத்த முடிகிறது. உடை விஷயத்தில் நடிகையரின் அபிப்பிராயங்களுக்குத் திரையுலகில் மதிப்பில்லை. மேற்கொண்டு வற்புறுத்திச் சொன்னால் அந்த நடிகை சினிமாவில் நடிக்கும் வாய்ப்பையே இழக்க வேண்டியதுதான்.

உதாரணமாக 'அதே கண்கள்' படத்தில் கீதாஞ்சலி நடிக்கும் பாத்திரத்தை முதலில் 'ஷீலா'வுக்குத்தான் கொடுத்தார்கள். அப்படத்தில் நீச்சல் உடையுடன் நடிக்கும்படியான ஒரு காட்சியை உருவாக்கியிருந்தார்கள். இந்தக் காட்சியில் தான் நீச்சல் உடையுடன் நடிக்க முடியாது என்று 'ஷீலா' மறுக்கவே 'ஷீலாவை' நீக்கிவிட்டுக் கீதாஞ்சலியை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? படத் தயாரிப்பாளர்களின் விருப்பத்துக் கேற்பத்தான் உடை உடுத்த வேண்டியிருக்கிறது. மறுத்தால், அதே உடையைத் துணிந்து அணிந்து நடிக்க வேறு பல நடிகைகள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நடிகை இப்படி உடை உடுத்துகிறாளே, அப்படி உடுத்துகிறாளே என்றெல்லாம் சில ரசிகர்கள் குறை கூறுகிறார்கள். நடிகையரைக் குறைகூறிப் பயனே இல்லை. இதை ரசிகர்கள் உணர வேண்டும்.

திரையுலகில் நுழைய விரும்பும் எத்தனையோ இளம் நடிகைகள் எந்த வேடத்திலும், எந்த உடையிலும், எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயார் என்று அறிவித்து, பேட்டி கொடுத்து, சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பொழுது ஜெயலலிதா போன்ற ஒரு நடிகை தனக்குக் கிடைத்திருக்கும் ஒரு நிலையான இடத்தை, இந்த உடை விஷயத்தில் கெடுபிடி ஏற்படுத்தி, விட்டு விலக முடியுமா?

"அன்று கண்ட முகம்" படத்தில் ஒரு கனவுக் காட்சியில் ஜெயலலிதா ஜீன்ஸ் உடையை அணிந்து நடிக்க வேண்டியிருந்தது. அந்த உடையை அவள் வீட்டிலிருந்தே அணிந்து கொண்டு போனாள். அந்த உடையை அவள் உடுத்திக் கொண்ட பொழுது ஆபாசமாகவேயில்லை. ஆனால் படமெடுக்கும் பொழுது மின்விளக்குகளிடையே செட்டில் டான்ஸ் ஆடும் பொழுது சற்று ஆபாசமாகத்தான் படமெடுத்தார்கள். படமெடுத்த பிறகு எங்களுக்குப் போட்டுக் காண்பித்தார்கள். ஆபாசமாகத்தான் இருந்தது.

படங்கள்:

ஸோபியா லாரென் புடவை கட்டிக் கொள்வாரா?......

டீன் மார்ட்டின் வேஷ்டி உடுத்திக் கொள்வாரா?......

உடனே நாங்கள் படத் தயாரிப்பாளர்களிடத்தில், ''இந்த உடை உடுத்தி டான்ஸ் ஆடும்பொழுது ஆபாசமாக இருக்கிறது. இந்தக் காட்சியை வெட்டி எறிந்து விடுங்கள்'' என்றோம். வேறு உடையில், வேறு கால்ஷீட் கொடுப்பதாக ஜெயலலிதா ஒப்புக் கொண்டாள். ஆனால் எங்கள் ஆலோசனையை அவர்கள் ஏற்க வேயில்லை. அதற்குப் பிறகு இம் மாதிரியான உடை விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறோம். படத் தயாரிப்பாளர்களின் அபிப்பிராயத்தின்படி என் மகள் உடை உடுத்தினாலும், அவ்வுடை ஆபாசத்தை மிகைப்படுத்தாமல் இருக்க எங்களால் முடிந்த அளவு பாதுகாத்துக் கொள்கிறோம்.

மக்களுடைய ரசனையும் ஆடைக் குறைப்பை ரசிக்கும் ரசனையாகவே

சினிமா
சிந்தனை

இருக்கிறது. அவர்களின் ரசனை மாறினால்தான் உடை விஷயத்தில் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்களைத் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் மாற்றிக் கொள்ளுவார்கள். மேநாட்டு ''நைட் சீரியஸ்' படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. நல்ல வசூல் கிடைத்தது. இதைப் பார்த்து விட்டுத் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் இங்கும் நடிகையர் மேனாட்டு உடையையே அணிந்து நடிக்க வேண்டும் என்கிறார்கள். பணம் போட்டுப் படமெடுக்கும் தயாரிப்பாளர்கள் எதிர்பார்ப்பது வசூலைத் தானே? அதனால் நடிகையர் அவர்கள் விருப்பத்துக்கேற்பஉடையுடுத்த வேண்டியிருக்கிறது.

ஒரு படத்தில் ஒரு நடிகை நடிக்கிறாள் என்றால் அந்தப் படத்தில் அவள் ஒவ்வொரு காட்சியிலும் என்னென்ன உடை உடுத்த வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரித்துக் கொடுப்பார்கள். அதன்படி அவள் சம்பந்தப்பட்ட படத்தில் உடுத்த வேண்டிய ஆடைகளின் கலர்களை, டிசைன்களைத் தேர்ந்தெடுக்கலாம். இந்த உரிமை மட்டுமே அவளுக்குண்டு. மற்றப்படி தயாரிப்பாளருடைய விருப்பம்தான்.

புடவை கட்டி, தமிழ் நாட்டுப் பண்புக்கேற்றபடி படங்கள் தயாரித்த காலம் ஒன்று இருந்தது. அப்பொழுதெல்லாம் குடும்பக் கதைகளும், பக்திக் கதைகளும்தான் எடுத்தார்கள். இப்பொழுது மக்களிடையே ரசனை மாறியுள்ளது. குடும்ப, பக்திப் படங்களுக்கு வரவேற்புக் குறைந்துள்ளது. ஆகவே, தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களில் நடிகையரை ஜீன்ஸ், ஸ்கர்ட், மினிஸ்கர்ட், நீச்சல் உடை போன்ற மேனாட்டுப் பாணியை ஒட்டி ஆடை அணியச் செய்து படமெடுக்கிறார்கள். இம்மாதிரி எடுத்த தமிழ்ப் படங்களுக்கு ரசிகர்களிடையே நல்ல ஆதரவு இருக்கவே இதையே தொடர்ந்து படத் தயாரிப்பாளர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

சினிமாக் கலை என்பது ஒரு வியாபாரமே. இந்த வியாபாரத்தில் மக்களுடைய அபிப்பிராயமும், ரசனையும்தான் முக்கியமானது. அவர்களது ரசனை மாறினால்தான் தமிழ்ப்பட உலகில் உடை விஷயத்தில் மாறுதல் ஏற்படும். நடிகைகளைக் குறை கூறிப் பயனில்லை.

பேட்டி — **திரைத் தருவி**



20. ஆற்றில் ஒரு கால்! சேற்றில் ஒரு கால்!

தன் தலைமையனுக்கு விரோதமாகவே போய், சீலியாவுக்காகவே வசந்தனை முடித்து விடுமளவுக்குத் திறமையும், பாசமும் ராகவனுக்கு இருக்கவே செய்தன. ஆனால் அதற்கு லிஸ்ஸி ஒருபோதும் ஒப்பப் போவதில்லை. அன்று துளசிக்கு வாழ்வில்லையானால் என் மகளுக்கும் வாழ்வில்லை என்று கூறிய தாய், குழலிக்கு முடிக்க வேண்டியவனை, தன் மகளுக்குப் பறித்துக் கொள்ளும் பாதகத்துக்குத் துணிய மாட்டாள். இது அந்தக் குடும்பத்துக்குப் புரியும் இரண்டாவது துரோகம் என்று எண்ணி மறுத்து விடுவாள். அதை எதிர்த்து அதனால் நேரப் போகும் முழுச் சலசலப்புக்கும் சீலியாவால் ஈடு கொடுக்கமுடியுமா? அது அப்பட்டமான சுயநலமில்லையா? அது முடியுமா? ''முடியாது, முடியாது... அடி சீலியா! உன் உள்ளத்தை ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிடு. அங்கு அன்பு உயிர்க்க இனி இடம் இல்லை. ஆசைகள் தழைக்க இனி உரமில்லை! இன்பம் பிழைக்கவோ ஒரு மயிரிழை நம்பிக்கை கூட இல்லை!''

உலகில் தத்துவங்கள் பூக்கும்போது அவை துன்பத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மலருகின்றன. ஆனால் முடிவில் இன்பத்தைக் காட்டும் அவை. இந்தக் காதல் என்னும் மாயை, ஆகாயத் தாமரையாக விரிந்து அதன் ஆயிரக் கணக்கான இதழ்களிலும் இன்பமது ஏந்தித் தகதகாய்த்து ஒளிர்ந்து நிற்கும். ஆனால் ஒவ்வொரு தேன் துளியும் கசப்பை ஊக்குவிக் நம் துன்பங்களாகி விடும்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை. என்றாலும் டாக்டர்களுக்கு விடுமுறையும், ஓய்வும் சம்பிரதாயத்தை ஒட்டி அமைவதில்லை. வைகறையிலேயே எழுந்து, படுக்கையில் உட்கார்ந்து, கடிகாரத்தைப் பார்த்தாள் சீலியா. மணி ஐந்து. அதேபோது துளசி காப்பிக் கோப்பையை ஏந்தியவாறே அவள் அருகில் வந்தாள். அவளையே கண் கொட்டாமல் பார்த்த சீலியா, அவளைத் தன்னருகே இழுத்து அமரவைத்தாள். துளசி காப்பிக் கோப்பையை முக்காலி மீது வைத்து விட்டுச் சீலியாவை அணைத்துக்கொண்டாள். அவள் மார்பில் சாய்ந்த சீலியாவின் கண்கள் விம்மிப் புனல் உதிர்க்கத் துடித்தன. இந்த மௌனமான அணைப்பிலும், ஆறுதலிலுமே அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர், கூறவேண்டிய குறைகளும், ஆறுதலும் பரிமாறிக் கொண்டாற்போல் ஆகிவிட்டது. லிஸ்ஸி அங்கே வரவே கலைந்த அந்த உறவுக் காட்சி கடமைகளுக்கு ஏகியது.



இனிக்கும் நினைவுகள்

கோமகள்

ராகவனிடம் போய் ஒரு தலையசைப்பினாலேயே தான் ஹாஸ்டலுக்குப் போவதைத் தெரிவித்துவிட்டு நகர்ந்தாள் சீலியா. காதலின் தோல்வியை நினைத்துக் குழம்பிய லிஸ்ஸி அவள் காதருகே குனிந்து ''உனக்காகவே உன் அப்பா வாழ்கிறார், நினைவிருக்கட்டும்'' என்று முணுமுணுத்தாள். அவள் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளாததே அவள் அன்பின் பிரதிபலிப்பை விளக்குவது போலிருந்தது.

வார்டு அட்டெண்ட் பண்ணுவதற்கே கொஞ்சம் நேரமாகி விட்டிருந்தது. அப்புறம் ஓ. பி. அங்கு வசந்தனைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு அவள் உள்ளம் நடுங்கியது. நேற்றிருந்த



உணர்வெங்கே? நேற்றிருந்த சுமுகச் சூழல் இன்று இப்படித் தலைகீழாகி விட்டதே! மின்னல் போல் உள்ளம் சுற்றி வந்த துயரத்தை வெல்லும் வழி அவளுக்குப் புலப்படவில்லை.

அவள் வசந்தனை நோக்கி வழக்கம் போல் வணக்கம் கூறவில்லை.

ஆனால் வசந்தன், ''குட்மார்னிங் சிலியா!'' என்று உற்சாகமும் உள்ளத்தை வெல்லும் உரிமை கலந்த குதூகலமும் தொனிக்கக் கூறினான்.

''மார்னிங்!'' என்று முணு முணுத்தாள் அவள்.

அன்று அவளுக்கு ஓ. பி. கொஞ்சம் முன்னதாகவே முடிந்தது. என்றும் போல் அன்று சிலியா வசந்தனுக்காகத் தாமதிக்கவில்லை. விருட்டென எழுந்து அவனிடம் சொல்லிக் கொண்டு போவதால் நீளும் மற்ற பேச்சுக்களுக்கு ஈடு கொடுக்கும் தெம்பில்லாதவளாய் நடந்தாள். கொஞ்ச நேரம் கழித்தே சிலியா போனதை அறிந்த வசந்தனை ஒரு விந்தை ஆட்கொண்டது. 'இன்றைக்கு என்ன என்றும் இல்லாத திருநாள்!' என்று எண்ணிக் கொண்டான்.

சிலியா நேரே தன் அறைக்கு வந்தாள். நல்ல வேளையாக அங்கு பாரதி இல்லை. அவள் இல்லாததே அப்போது மனத்துக்கு ஆறுதலாக இருந்தது. தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று தாளிட்டுக் கொண்டாள். சட்டென்று அறையின் சூழல் அழுகையை மூட்டி

சுத்தமான
மனம் கவரும் வெண்மைக்கு





சிங்கம் மார்க்
விக்டோரியா
ப்ளூ ஓ ஓ பி (OOB)
(மிகச் சிறந்த நீலம்)

சிறிதளவே விக்டோரியா ப்ளூ ஓ ஓ பி உபயோகித்ததில் உங்கள் ஆடைகளுக்குத்தான் என்ன வெண்மை! ஆடைகளை பளபளப் பான வெண்மையாக்குகிறது. உங்களுடைய சட்டைகள், வேஷ்டிகள், விரிப்புகள் முதலியவைகளை அதிக வெண்மையுடன் வைக்க இதுவே சிறந்த சிக்கனமான முறை.

தயாரிப்பாளர்கள்: அல்ட்ராமரீன் & பிக்மென்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், மதராஸ் 53

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: கெம்டைஸ் ட்ரேடிங் கம்பெனி, 318, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ் 1

VAPI:UP:2/68

விட்டது. கட்டிலில் படுத்து மனம் திருமட்டும் விம்மினாள்.

அந்த அறையில் அவள் ஆசை ஆசையாக வளர்த்த கனவுகள், கற்பனைகள் எல்லாம் எப்படி முடிந்து விட்டன! பாரதி வாய்க்கு வாய் இந்த அன்பைப் பற்றி நம்பிக்கை இல்லாமல் பேசியது கடைசியில் நிஜமாகி விட்டதே! கணணியமாகப் பழகவில்லை என்று அவள் குற்றம் சாட்டினாளே, அது எத்தனை உண்மை! கல்வியின் அறியாமை என்று அதை எத்தனை அழகாகச் சொன்னாள்? மனம் என்பது மாபெரும் செல்வமில்லையா? இனம் தெரியாமல் அதை இயக்கியதனால் பேதைமைப் புண் அல்லவா ஏற்பட்டுவிட்டது! தன் இயல்பின் வரம்பைக் கடந்ததற்கு இப்படியும் ஒரு தண்டனையோ?

''டொக், டொக்!''

கதவு இடிக்கும் சப்தம் கேட்டது. யார், பாரதியா? சீலியா எழுந்து முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டு கதவைத் திறந்தாள்.

எதிரே ஒரு பெண் நின்றிருந்தாள்.

''ஹவுஸ் ஸர்ஜன் க்வார்ட்டர்ஸிலிருந்து உங்களுக்கு ஃபோன் வந்திருக்கிறது. வசந்தன் என்பவர் உங்களிடம் மிகவும் அவசரமாகப் பேச வேண்டுமாம்...'' என்றாள் அவள்.

முற்றிலும் விளங்காத, புதிய ஒன்றை ஏற்கத் தயங்குபவள் போல் சீலியா தவித்தாள். எண்ணமும் செயலும் பரபரக்க மனம் ஓட விழைந்தது. 'ஏன் இந்தச் சோகம் எல்லாம்? நான் போய் இப்போதே வசந்தனுடன் பேசினால், இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடாதோ? அப்புறம் வெற்றிக் களிப்பில் மிதப்பவர்கள் எல்லாம் துடித்துவிட வேண்டாமோ? நான் ஏன் இப்படி வாடவேண்டும்?'

முன்னேறிய அவள் சட்டெனத் தயங்கினாள். ''நீலா! நான் அறையில் இல்லை என்று சொல்லிவிடு...'' என்றாள்.

அவள் தலையசைத்துவிட்டுக் கீழே சென்றாள். பிறரது இன்ப துன்பங்களைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை. அவளது வேலை ஃபோன் கொடுக்கும் குரலுக்குத் தக்க பதில் தருவதுதானே?

சட்டென்று சீலியாவை இருள் சூழ்ந்தாற்போலிருந்தது.... என்ன? அவளும் மற்றவர்கள் சம்மதத்துக்கு விட்டுக் கொடுத்துவிட்டாளா? அவனை மறக்க ஒப்புக் கொண்டு விட்டாளா? வசந்தன் அழைத்து அவள் குரல் கொடுக்க மறுத்துவிட்டாளா? அவன் கேட்டு இவள் மறுப்பதா? இது நடக்கக்கூடிய காரியமா? இதோ நடந்து விட்டதே! அவ்வளவுதானா? ஒவ்வொன்றாக அறிமுகமான உறவின் தொங்கு பாலங்கள் ஒவ்வொரு இழையாக நைந்து வருகிறதோ?...

சீலியா கதவை மூடும் நினைவின்றிப் படுக்கையில் வந்து விழுந்தாள். வசந்தன் காத்திருந்து ஏமாறும் நெஞ்சத் துடிப்பு அவளுக்குப் புரிவது போலிருந்தது.

''ஓ! வந்தாகிவிட்டதா?'' என்று ஆரவாரத்தோடு வந்த பாரதி சட்டென்று பிரமிப்பில் சிலையாக நின்றாள்.

சீலியாவின் கன்னங்களில் கண்ணீர்க் கறைகள். ஏன், என்ன வந்தது அவளுக்கு?

''என்ன சீலியா இது? எப்போது வந்தே நீ? ஏன் அறையிலேயே அடைந்து கிடக்கிறே? தலையெல்லாம் கலைந்து; முகத்தைப் பார்க்கச் சகிக்கலியே!''

சீலியா இதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை. வாயைத் திறந்தாலே கதறிவிடுவோமோ என்ற அச்சம்! பாரதி அவளருகில் வந்து உட்கார்ந்தாள். ''உடம்பு ஏதும் சரியில்லையா? நீ எப்போதும் இப்படி இருக்க மாட்டாயே!'' என்றாள்.

''ஒன்றுமில்லை!'' மிகுந்த பிரயாசையோடுதான் அவள் இந்தச் சொற்களைச் சொன்னாள்.

பாரதி கேலிக் குரலில் ஆரம்பித்தாள்: ''ஓ! புரிந்துவிட்டது சீலியா! புரிந்து விட்டது! நீ தலையணைக்குள் வைத்திருந்த வாழ்த்தட்டையைக் காணாமல் தானே தவிக்கிறாய்?''

சீலியா அதரங்களைக் கடித்தவாறே முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டாள்.

''இதோ உனக்கு இரட்டிப்பு மகிழ்வூட்டுகிறேன், பார். நேற்று மாலையே இதைக் கடையில் வாங்கி வந்தேன்...'' என்றவாறே தன் பெட்டியிலிருந்து ஒரு கண்ணாடி அடுக்கை எடுத்தாள். அதை விரித்தபோது மூன்று கண்ணாடிகளை மடக்கி வைக்கும்படி அது அமைந்திருப்பது தெரிந்தது. அதை மேசை மீது நிற்க வைக்கும்படியும் சிறு ஸ்டாண்ட் பொருத்தியிருந்தது. அதைப் பாரதி பிரித்து மேசை மீது வைத்து விட்டு, சீலியாவின் முகத்தை அந்தப் பக்கம் திருப்பினாள். முதல் கண்ணாடியில் சீலியாவின் புகைப்படம் சிரித்தது. நடுக் கண்ணாடியில் வசந்தன் அனுப்பியிருந்த நவராத்திரி வாழ்த்தட்டை.. மூன்றாவதாக இருந்த கண்ணாடி காலியாக இருந்தது.

''அந்தக் கடைசிக் கண்ணாடி வசந்தனின் புகைப்படத்துக்கு!'' என்று அவள் காதோடு பாரதி கூறிய கணமே சீலியா தன்னை அடக்க மாட்டாமல் வெடித்துக் கதறிவிட்டாள்.



அளவுகோல் - சர்க்கரை

இங்கிலாந்தில் உங்களை விருந்துக்கு அழைக்கும் வீட்டில், "தேநீருக்கு இன்னும் சர்க்கரை போட வேண்டும் என்று நீங்கள் கேட்டால் ஒரு தேக்கரண்டி நிறையச் சர்க்கரையை எடுத்துக் கொடுப்பார்கள். அதே கேள்வியை அயர்லாந்தில் கேட்டால் சர்க்கரைக் கிண்ணம் முழுமையையும் உங்கள்முன் நகர்த்து வார்கள். அதே மாதிரி ஸ்காட்லாந்தில் கேட்டால், "அப்படியா? சர்க்கரை போதவில்லையா? தேநீர்க் கோப்பையை நன்றாகக் கலக்கினீர்களோ?" என்று கேட்பார்கள்.

-- ஸ்விஷர் கூடேங் என்ற ஸ்விஸ் நாட்டுப் பத்திரிகையில் ஓர் அநுபவசாலி. -- வி. வி.

''ஏன், ஏன் சீலியா? எதற்காக இப்படி அழுகிறாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' குழம்பினாள் பாரதி.

அவள் காரணம் கேட்பதும், இவள் குழம்பி அழுவதுமாக வெகுநேரம் கடந்தபின் சீலியா ஒருவாறாகத் திக்கித் திணறி எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். பாரதி பிரமையோடு கேட்டுக் கொண்டிருந்தாள். ''அது தெரியாமல்.... உன்னை எப்படியெல்லாமோ கேலி செய்து விட்டேனே.... உன் மனம் எப்படி நொந்திருக்கும்....'' பாரதியின் உருகும் குரலும், அவள் துயரத்தை உணர்ந்து புரிந்துகொண்ட பச்சாத்தாபமும் சீலியாவை நோக வைத்தன.

''அது எப்படிச் சாத்தியம்? என்னால் நம்ப முடியவில்லையே.... இது இப்படிப் பிறர் தலையீட்டால் முறிய முடியுமா?''

''விதியின் கரங்களால் நிர்த்தாட்சிண்யமாகப் பிரிக்கப்பட்டு விட்டதே... ஒரே கணத்தில்....! எல்லாம் ஒரே தினத்தில்! குருவிக் கூட்டைப் பிரித்தெறிந்துவிடும் குரங்கு போல் விதி விளையாடிவிட்டது! அதன் குரூரத்தில் தெரிந்தே பலியாகிவிட்டேன் நான்...''

பாரதி அவள் நடுங்கும் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

''இனி என் வாழ்வுக்கு அர்த்தமேயில்லை. பிறர் உணர முடியாத ரகசியமாகவாவது என் வாழ்வின் தோல்வி அமைந்ததா? இதோ என் உண்மைகள் முழுதும் வெளிவந்துவிட்டன. இனி என்னைச் சூழ்ந்த உலகமும், என்னை மதித்து வந்த உலகமும் 'பூ, சீலியா! இவ்வளவுதானா?' என்று தூற்றப் போகிறது....''

''நீ அதை எண்ணி வருந்துகிறாயா? நமக்கே நமக்கு என்று ஏற்பட்ட எல்லாமே க்ஷணத்தில் அழிந்துவிடுகிறது. அதற்கப்புறமும் நாம் அந்தச் சாம்பலில் அடி வைத்துக் கொண்டு விரக்தியைத் துறந்துவிட்டு வாழவே செய்கிறோம். நீ... கேவலம்! உன்னைச் சுற்றிய சிறு உலகம் தூற்றப் போகிறதே என்று கவலைப்படுகிறாய்? இந்த உலகத்துக்காக இத்தனை பயப்பட வேண்டுமா நீ? உலகம் இன்னும் பெரியது சீலியா....!''

''அது எத்தனை பெரிதாக இருந்தால் எனக்கு என்ன, பாரதி? என் வரையில் அது சிறுத்து ஒடுங்கிவிட்டது. எனது சின்னஞ்சிறு உலகில் இனி உண்பதும், உறக்கம் வராமல் தவிப்பதும் தவிர வேறு எதுவும் நிகழப் போவதில்லை.......''

''மை காட்! இதென்ன முடிவு, சீலியா? இன்னும் பெரிய பெரிய தோல்விகளையெல்லாம் காலமும், சூழ்நிலையும் இருந்த இடம் தெரியாமல் ஜீரணிக்க வைத்துவிடும். தெரிகிறதா? நீ இதற்கே இப்படி இடிந்துவிடாதே!''

''இதற்கே என்றால்....? இந்தத் தோல்வியை வெகு சாதாரணமாக மதிப்பிட்டு விட்டாய் நீ. காலம் மாற்ற முடியாத, மாற்றக் கூடாத மனமும் தனியாக் உண்டு, பாரதி. அப்போது அந்த உள்ளமே அழிந்தால்தான் உண்டு....''

''இதெல்லாம் வெறும் உணர்ச்சிமயமான பேச்சுக்கள். இந்தக் கணத்தோடு இதையெல்லாம் நீ மறந்துவிட முடியும் என்கிறேன் நான்....''

''பாரதி! உனக்கு எத்தனை கல் நெஞ்சு! என்னை உணர்ந்த நீயா பேசுகிறாய்? அந்த நினைவுப் பின்னல்களைச் சுவையாக்கக்கூடும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எதைத் தள்ளுவது, எதைக் கொள்ளுவது? கடந்துவிட்ட ஒன்று பலவாகத் தோன்றிப் பரிமளிக்கவும், பலவும் ஒன்றாகத் தோன்றிச் சிலிர்க்க வைக்கவும் தூண்டும் அந்தச் சக்தியை அழிக்கும் திறன் ஏது? இப்போது மடிந்துவிட்ட உணர்வுகள் உயிர் பெற்று வாட்டுகின்றன. உயிர்த்துவந்த உள்ளம் மாண்டு விட்டதே....!''

''இந்த மாதிரி பிரமைகளும் தவறான கற்பனைகளுமே வாழ்க்கையின் சாபக்கேடு....!''

''ஐயோ, பாரதி! என் உணர்ச்சிகளையெல்லாம் நீ பிரமைகள் என்று சொல்கிறாய்?.... இல்லை.... இல்லை, பாரதி! என்னால் அவரை மறக்கவோ, முழுவதும் துறக்கவோ ஒருநாளும் ஆகாது பாரதி.... எனக்கு நன்றாகப் புரிகிறது. அது என்னால் முடியாது...''

தவறாது உபயோகித்தால் போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர் யாவரிடமிருந்தும் தாமாகவே தேடி வந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன. இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

''நான்கு வருடங்களாகத் தவறாது நான் போர்ஹான்ஸ் பற்பசை உபயோகித்து வருகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு என் பற்கள் சீர்கெட்டு, துர்நாற்றத்தோடு அடிக்கடி இரத்தமும் வடிந்தது... ஒரு டாக்டர் 'போர்ஹான்ஸ் பற்பசை' உபயோகிக்குமாறு சிபாரிசு செய்தார்...பல் நோய்கள் அகன்று, என் பற்கள் இப்போது மிக நன்றாக உள்ளன''.

—'ராமு' கடப்பா.

''கடந்த மூன்று வருடங்களாக உங்கள் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிப்பதால், என் ஈறுகள் வலுவடைந்து ஆரோக்கியமாக விளங்குகின்றன. எனக்கு முன்பு ஈறுக் கோளாறுகளினால் அவதியிருந்தது. ...உங்கள் பற்பசையின் உதவியால் மட்டுமே இப்போது என்னால் சுகமடைய முடிந்தது''.

—டி. என். தாஸ், ஷிகார்பூர்.

போர்ஹான்ஸ்

பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்.... உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! ''பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை'' என்ற வண்ணப் புத்தகம். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப்புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 10 பைசா தபால் தலைகளை, இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டென்ட்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1.

௯௪

பெயர் ____________________

விலாசம் ____________________

____

மொழி ____________________

35F-202 TAM

"இது என்ன கண்மூடித்தனமான துயரம்? இந்த உலகிலேயே இந்த வசந்தன் ஒருவன்தான் உனக்கு இதமானவன் என்று முடிவுகட்டிவிட்டாயா? இதைப் போன்ற வாலிப ஆசைகள் அர்த்தமற்றவை..."

"பாரதி! தயவுசெய்து கிழான பதங்களையெல்லாம் பிரயோகிக்காதே. எனக்கு என் உணர்ச்சியைத் தவிர வேறு எதையும் உவமை சொல்லத் தெரியாது. அது உனக்கு ஒரு நாளும் புரியாது. நான் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறேன். என்னை மேலும் மேலும் ரணமாக்காதே, தயவுசெய்."

கடைசியாகப் பாரதி ஒரு பெருமூச்சோடு மெல்லிய குரலில் பேசினாள்: "உன் துயரம் எனக்குத் தாளவில்லை. எப்படி இருந்தாலும் மேலே முயற்சி செய்யவும் வழியில்லை என்னும்போ.."

"டொக், டொக்." — கதவிடிப்பைத் தொடர்ந்து சீலியா எழுந்து ஓடினாள். "நீலா! ப்ளீஸ்! இன்று வசந்தனிடமிருந்து எத்தனை 'கால்' வந்தாலும் நான் இல்லை என்றே சொல்லி விடு" என்றாள்.

கதவடைப்பைத் தொடர்ந்து சீலியாவுக்கும், பாரதிக்குமிடையே எவ்விதப் பேச்சும் எழவில்லை. இருவருமே வெவ்வேறு கோணங்களில் ஒருவருக்கொருவர் இதமாகி மௌனமாக நின்றனர்.

"சீலியா!"

மலை வாயில் மாலைக் கதிரவன் விழுந்த போது, பாரதியின் விரல்கள் சீலியாவின் தோளைத் தீண்டின. "உன்னைப் பார்க்க வசந்தன் வந்திருக்கிறாராம்!" என்றாள்.

"என்னைப் பார்க்கவா?"

"ஏன், வரக்கூடாதா?"

"அவரிடம் நான் இல்லை என்று சொல்லி விடுவதுதானே?"

"முட்டாள் பெண்ணே! நீதான் அவரை எதிர்நோக்கி உட்கார்ந்திருக்கிறாயே! இந்த உன் பகட்டான வெறுப்பெல்லாம் நீ அவரைப் பற்றிக் கூறும் அன்பு மொழிகள் என்று எனக்குத் தெரியாதா? என்னை ஏமாற்றாதே! ஒன்று வருந்துவதை ஒழித்துவிடு. அதன் மூலம் அவரை மறந்துவிடு. இல்லை, இதே நிமிடம் கீழே போய் உன் பிரேமையின் பலத்தைக் கொண்டு, உன் காரியத்தைச் சாதித்துக் கொள். இரண்டுமே உன்னால் முடியாதென்றால், நீ இந்த உலகில் இருப்பதற்கே லாயக்கில்லை." பாரதியின் வாயிலிருந்து சொற்கள் சற்று அழுத்தமாகவே வந்தன.

"நான் இந்த உலகில் யாருக்குமே வேண்டப்படாதவள்......."



1912ல் உட்ரோவில்ஸன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டதும், முதல் காரியமாக இந்தச் செய்தியைத் தமது அத்தைகளில் மூத்தவரிடம் சொல்லி அவருடைய பாராட்டுதலைப் பெற்று வரச் சென்றார். அந்த அத்தைக்கு வயது ஆகிவிட்டிருந்ததோடு காதும் செவிடு. ஒரு குழாயின் உதவியால்தான் பிறர் நெருங்கி வந்து கூறுவதைக் கேட்க முடியும்.

வில்ஸனைக் கண்டதும், "என்ன சேதி? இப்போது ஏதாவது வேலைவெட்டி பார்க்கிறாயா? இல்லை, வழக்கம் போல் சும்மா சுற்றிக் கொண்டுதான் இருக்கிறாயா?" என்று கேட்டாள் அத்தை.

"இப்போது பிரசிடெண்ட் ஆகியிருக்கிறேன்" என்றார் வில்சன், இரைந்து அந்தக் குழாயினுள்.

"என்ன? பிரசிடெண்டா? எதற்கு?" என்று வினவினாள் அத்தை.

"அமெரிக்காவுக்கு!" என்று பதில் அளித்தார் வில்ஸன்.

அத்தையின் முகத்தில் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு: "தத்துப்பித்தென்று சும்மா உளறாதே. போ!" என்று சொல்லி விட்டுக் குழாயைக் கீழே வைத்து விட்டாள்.

ஆதாரம்: "காரனெட்"
தகவல்: வி. வி.

"இதோ பார் சீலியா! நீ செய்வது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. ஒன்று எல்லோருக்காகவும் விட்டுக் கொடுக்க வேண்டுமானால் உள்ளத்தைத் துப்புரவாகத் துடைத்துக் கொள். ஒன்றுமே நடக்கவில்லை என்று கருதிக் கொள். இல்லையானால் மற்றவர்களின் உணர்வை நீ மதிக்காதே. உன் வரை உன் வாழ்வை அமைத்துக் கொள்ள முயற்சி செய். அவரும் ஒத்து வரலாம். இல்லாவிட்டால் இவ்வளவு போன் செய்வாரா? அல்லது நேரில்தான் வருவாரா? இரண்டிலொன்றை அவரிடமும் கூறிவிட்டேன். ஆற்றில் ஒரு காலும், சேற்றில் ஒரு காலும் ஏன்? என்னைக் கேட்டால் போனிலே சொல்லியிருந்தால் கூட அவர் நேரில் வந்திருக்கமாட்டார். உனக்குப் பாதி ஆசை அவர் நேரில் வரவேண்டும் என்றிருக்கிறது. இப்போது நேரில் வந்ததும் போகச் சொல்கிறாய். அவருக்கு உன்னைப் புரிய வைத்துத்தான் போகச் சொல்லேன்."

சீலியா அதை ஏற்றுக் கொண்டாற் போல் கீழே இறங்கிச் சென்றாள். புதிய ஆடை உடுத்திக் கொண்டு, அதைச் சரி செய்தவாறே நடக்கும் சீலியா, கசங்கிய ஆடைகளைச் சரிப்படுத்தாமலேயே நடந்தாள். வசந்தனைக் கண்டதும் கூந்தலைச் சரி செய்து கொள்ளப் பரபரக்கும் கைகள் வெறுமனே கிடந்தன.

வசந்தனருகே வந்ததும் அவளது கால்கள் நடுங்கி விழுந்துவிடும்போல் படபடத்தன.

''என்ன சீலியா, ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

இதற்குச் சீலியா பதில் கூறவில்லை.

அவளது விபரீத மௌனத்துக்கும், செயலுக்கும் வசந்தன் அர்த்தம் விளங்காமல் விழித்தான். ஏன் இப்படி அவள் தவிக்கிறாள்?

''உட்காரேன் சீலியா. ஏன் இப்படி நின்று கொண்டே இருக்கிறாய்?''

அவள் பதுமை போல் அமர்ந்தாள். 'எதுவும் என்னைக் கேட்டுவிடாதீர்கள்' என்பது போல் பார்வை நடுங்கியது. அவளது தவிப்பை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆதுரத்துடன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டான். அவளது நடுங்கும் விரல்கள் அவன் பிடிக்குள் அடங்கிய கணமே தம்மை விடுவித்துக்கொண்டன. முதன் முதலில் அவள் கைகளை வசந்தன் பற்றியபோதுகூட இப்படி அவள் விடுவித்துக் கொண்டதுண்டு. ஆனால் அதற்கும், இதற்கும் எத்தனை வேற்றுமை! எத்தனை வித்தியாசம்! முன்பெல்லாம் அந்த விடுவிப்பில் அச்சமோ, குழப்பமோ கலந்திருக்காது. 'நான் விடுவித்துக் கொண்டாலும் நீ பற்றிக் கொள்' என்று ரகசியச் சைகை காட்டிக் கொண்டிருக்கும்! இப்போது அவள் கைகளை விடுவித்துக் கொண்டது அப்படிப்பட்டதில்லை. இது மலரைப் பறிக்கும்போதே காம்பு ஒடிந்த உதறல். இனி மறுபடியும் தீண்ட முயலாதே என்ற எச்சரிக்கையின் கடுமை!

தன்னை விட்டு அவள் விலகிவிட்டாற் போலிருந்தது. ஏதோ மர்மமான வேதனையில் அவன் முகம் சுருங்கியது. பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்றே அவனுக்குத் தெரியவில்லை. அவளோ பேசும் வழியாகத் தெரியவில்லை.

''நேற்றிரவு விருந்து முடிந்ததும் உங்கப்பாவுக்கு என்னை அறிமுகப் படுத்தி வைக்கிறேன் என்றாயே....பிறகு உன்னை அங்கு காணவே இல்லையே....''

''அதற்குத்தான் அவசியமில்லாமல் போய் விட்டதே!'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''மீனாட்சிசுந்தரம் உன் பெரியப்பா தான் என்று என்னிடம் கூறவே இல்லையே நீ!''

அவள் விழிகள் அவனைக் கூர்ந்து நோக்கின. 'இவருக்கு ஒன்றுமே தெரியாதா? ஒன்றையுமே இவரிடம் சொல்லவில்லையா? இதை முதன் முதலில் நான்தானா அவரிடம் சொல்ல வேண்டும்....?'

''கூறி விடுகிறேன். எல்லாவற்றையுமே கூறிவிடுகிறேன், இப்போது....''

''உன் குரல் ஏன் இப்படி நடுங்குகிறது, சீலியா? நீ மிகவும் பலஹீனமடைந்திருக்கிறாய்......''

''எனது பலஹீனம் நான் கொண்ட அன்பு ஒன்றுதான்....'' அவள் அதரங்களின் நடுக்கமும், கண்களின் பனிப்பும் அவன் உள்ளத்தில் தீயாகத் தகித்தன.

''நீ.... நீ என்னிடம் எதையோ மறைக்கிறாய் சீலியா! காலையில் வார்டில் நிற்க மனமின்றி ஓடி வந்தாய். 'போன்' எடுக்கவே மறுத்துவிட்டாய். நேரில் வந்தும் உன் சுமுகமான வரவேற்பைக் காணோம். இந்த மாற்றங்களுக்கெல்லாம் காரணம் புரியவில்லையே! எனக்குக்கூடத் தெரியாமல் என்னைப் பற்றியே நீ ஏதோ தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறாய்.....''

எல்லாவற்றையும் கூறிவிடவேண்டுமென்று கொஞ்ச நேரத்துக்குமுன் எண்ணிய எண்ணமெல்லாம் சொல்லும் திறன் அழிந்து விட்டன. ''உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? என்னை என்னை... ஒன்றுமே கேட்காதீர்கள்!''

சீலியாவின் அந்தக் குரலின் மன்றாடல் அவனுக்கு மர்மமாக இருந்தது. பார்வை தாழ்ந்து பகிரங்க அன்பை மறைத்துக் கொண்டது. அகத்தூடு ஒரு வேதனையான பிடிவாதம் இழையோடியது. வாயில் சிக்காமல் தவிக்கும் உணர்வுகள், கசப்பை விழுங்கி மறைக்கப் பார்த்தன.

''ஏன்? நமக்குள் இந்த அந்நியம் எல்லாம் ஏன்? இதையெல்லாம் கடந்து எல்லை தாண்டி விட்ட நட்பல்லவா நம்முடையது!''

''நட்பு! நட்பாகவே முடிந்துவிட வேண்டிய நட்புதான்.....''

நொந்து போன மனத்தின் ரணமான புண்களாக வெளிவந்தன வார்த்தைகள்.

நீரோட்டத்தினுள் திணறுவதுபோல் அவன் மெல்லிய குரலில் கேட்டான். ''நீயாக எதையும் சொல்லப் போவதில்லையா சீலியா? எனக்கு உன் துயரத்தை உணர்ந்து ஆறுதல் கூற முடியவில்லை.....''

''நீங்கள் எனக்கு ஆறுதல் கூறுவதா? அது.... அது ஒரு நாளும் முடியப் போவதில்லை.....''

''என்னால் உனக்கு ஆறுதல் அளிக்க முடியாதா? அந்தத் துயரம் என்னவாக இருக்கும்?''

யோசனையோடு அவள் முகத்தைக் கூர்ந்துபார்த்தான் வசந்தன். **(தொடரும்)**

தாலிப் பொலிப்பு

பூவரச இலையைப் புறம் பார்த்து உதறித் தன்னுடைய சுங்கடி முந்தானையில் அழுந்தத் துடைத்துவிட்டு, அதில் வேக்காளத் தூளைக் கொட்டித் துளியளவு கொம்புத் தேனை விட்டுக் குழைத்து, மருந்து வழிந்துவிடாமல் பூவரச இலையை லாகவமாகப் பிடித்துக் கொண்டு, ''மச்சான், இந்தாங்க மருந்து; நாக்காலே சப்பிச் சாப்பிட்டுப்புடுங்க'' என்று அன்பின் பாசத்தோடு பதனமாக அழைத்த வண்ணம் சொக்கனின் நெற்றியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே உசுப்பினாள் காத்தாயி. 'ராவு ஒரு கடுத்தம் வைத்தியரோட காய்ச்சல் சூரணத்தைக் குடுத்துங்கூட, இன்னமும் மச்சானுக்குக் காய்ச்சல் பொறி பறக்குதே?'

அன்பின் மெல்லுணர்வு தீண்டியதை உணர்ந்து கொண்ட சொக்கன், ''ஐயோ, ஆத்தா!'' என்று முனகிக்கொண்டே கண்களை மலர விழித்துப் பார்த்துவிட்டு, அதே சடுதியில் மீண்டும் கண்களை மூடியபடி புரண்டு படுத்தான்.

கணப்பை மிதித்துவிட்ட மாதிரி காத்தாயி துணுக்குற்றாள்; உயிர்ப் பொறியில் தீக்கங்கு பட்டுவிட்டது போலத் துடித்தாள்; உதறல் எடுத்துத் துடித்துக் கொண்டிருந்த ஆசை மச்சானின் பாதங்களை மூடிக் கந்தல் சேலையை இழுத்து விட்டாள் அவள். 'ராக்காச்சித் தாயே! எம்புட்டுத் தாலியைக் காப்பாத்திப்பிடு, ஆத்தா! மேலைக்குச் சித்திரா பருவத்துக்கு வந்து மச்சான் பால் காவடி எடுக்கச் செஞ்சுப்பிடறேன்' என்று இதயத்தை ஊராளும் தாயிடம் சமர்ப்பித்தவளாக 'நேந்து'கொண்டாள். இமை வரம்பில் வரம்பின்றி உதிர்ந்தன கண்ணீர்த் துளிகள். மார்பகத்தின் மையத்தில் பதிந்திருந்த தங்கத் தாலிச் சரடு எம்பி எம்பித் தாழ்ந்தது. ''மச்சான்!... எம்மச்சானே!'' என்று மறுதப்படி அலட்டினாள், அழுத்தம் பதித்து.

குரலின் அழுத்தத்தைக் கேட்டதும், கனுக் கண்டு விழித்த பாங்கில் சொக்கன் திடுக்கிட்டு விழித்தான். எட்டடிக் குச்சின் உச்சியில் பிய்ந்திருந்த பனை ஓலை வழியாக உதயத்தின் வெங்கதிர்கள் பாய்ந்து அவன் முகத்தில் விழுந்து சிதறின. எச்சில் துப்பிக் காயும் நேரத்துக்கு அவனது கண்கள் கூசின. ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான் அவன். அவனுடைய பார்வையில், காத்தாயி குந்தியிருந்த காட்சி தட்டுப்பட்டது. ''மருந்தா, புள்ளே?'' என்று கேட்டான்.

காத்தாயி செருமினாள்: ''ஆமா, மச்சான். இதைச் சாப்பிட்டுப்புடுங்க. அந்திக்குள்ளாறக் குணம் தெரியும்னு வைத்தியர் ஐயா சொன்னாரு. இந்தாங்க... ஊஸ்! நீங்க அப்படியே கிடங்க. நான் வாரு பார்த்துத் தரேன். நாக்காலே சப்பி உள்ளுக்கு இறக்கிப்பிடுங்க'' என்று கெஞ்சினாள் கொண்டவள்.

பாளம் பாளமாக வெடித்திருந்த அவன் உதடுகளில் பையப் பையப் புன்சிரிப்பு ஊர்ந்து வந்தது. ''கொண்டா'' என்றான். குரல் உடைந்திருந்தது. சிக்குப் படிந்திருந்த கிராப்பு முடிகள் இளங் காற்றில் அலைந்தன. வெளுப்புத் தட்டிய நாக்கை நீட்டி, அதோடு பூவரச இலை மருந்தை ஒட்டி, சப்பிச் சப்பிச் சாப்பிட்டான். வாய்க் கசப்பு, தேனின் சுவையையும் மறக்கடித்தது போலும்! இராத்திரிக் காய்ச்சலில் ஆள் எப்படி உரு மாறிப் போய்விட்டான் பாவம்!

நழுவிய இலையைக் கையேந்திப் பற்றியவளாகக் காத்தாயி அங்கிருந்தபடியே எச்சில் இலையைக் குறி பார்த்து வாசலுக்கு வீசினாள். மின்னிக் கொண்டிருந்த தங்கத் தாலிச் சரட்டில் தன்னைக் கொண்டவனின் பார்வை பதிந்திருந்த துப்பு அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

''ஏ புள்ளே காத்தி!... ஒந்தாலி பத்திரமா யிருக்கும். இலேசம் காட்டாதே!'' என்று இணைந்து விருந்து பேசுவதொப்பப் பேசினான் அவன். தன் உயிருக்கு உத்தாரணம் கொடுத்து, அவளது உயிரின் உயிர்ப்புக்கு ஊட்டம் ஊட்டிய அமுத வாக்கலவா அப்பேச்சு!

பால் வார்த்தாற் போலிருந்தது தாலி ஏந்தியவளுக்கு. ஆனந்தம் கண்ணீராக உருகியது. தாலி கொடுத்தவனின் சிரிப்பு அவளையும் சிரிக்க வைத்தது. ''ஏலே காத்தாயி! ஒனக்கு என்னைக் காட்டிலும் இந்தத் தாலி



தான் ஒசத்தி. இந்த எருக்கலக்கோட்டையிலேயும் இதைச் சுத்தியுள்ள பதினறுகரை ஜாதிக் கட்டிலேயும் இந்தத் தாலிதான் ஒரு பொண்ணுக்கு மிகுந்த மதிப்பையும் மருவாதையையும் கொடுக்க வல்லது. ஒண்ணு ரெண்டு இனம் கணக்கிலே, நம்ப அம்பலக்காரர் வகையிலே, அறுத்துக் கட்டற வளமை இடையாது. அந்த மட்டுக்கும் புருசன் பொஞ்சாதி ஆகிப்பிட்ட ஜதைக்குள்ளாற ஏற்பட்டுப் பக்குவப்படுகிற பாசமும் நேசமும் தயவும், தன்மையும் இருக்கே. அதுகளுக்கெல்லாம் ஈடு எடுப்புக்கு நிற்கிறது சாமியே தான்!... ஆனபடியாலே, ஒங் கழுத்திலே இருக்கிற இந்தத் தங்கத் தாலிச் சரடுதான் இனிமேலுக்கு என்னோட உசிருக்குண்டான நேருத்திரமான சாட்சியாக்கும்!'' என்று சொக்கன் சாந்தி கல்யாணத்தன்று எடுத்த எடுப்பில் மொழிந்த சொற்கள் அவன் மனக்குகையின் உயிர்ச் சித்திரங்களாகப் பேசின. தன்வயமிழந்த இன்பத் தனிப்பில் தாலியில் பதிந்திருந்த கண்களை மேலே உயர்த்தினான்.

சொக்கன் காய்ச்சலின் விளைவாகக் கரணை தப்பிய நிலையில் நித்திரை வசப்பட்டிருந்தான் — அப்பொழுது!

சன்னாப்புடன் காலை நேரத்து வெய்யில் எரித்தாலும், கார்த்திகைக் கூதல் மட்டும் அதன் சுயரூபத்தைக் காட்டாமல் தப்பவில்லை.

வெளித் தாழ்வாரத்தில் ஈச்சந் தட்டி அடைப்புத் தடுத்து அமைத்துக் கொடுத்திருந்த அடுப்படியில் இருந்தபடியே காத்தாயி



தன் அன்பு மச்சானையும் அடுப்பையும் மாறி மாறிப் பார்த்தாள். உலை நீர் கொதித்துக் கொண்டிருந்தது. தட்டிப் புடைத்துத் துப்புரவாக்கி வைத்திருந்த அரிசி நொய்யை— அரிசிக் குறுணையை உலைப் பானையில் கொட்டிவிட்டு, சுளகைத் தரையில் போட்டாள். சவுக்குச் சுள்ளிகளை வசம் பார்த்துத் தள்ளிவிட்டாள். நெருப்பு பற்றி எரிந்தது. 'இன்னையத் தேதி வரைக்கும் — மச்சானுக்கு வாழ்க்கைப்பட்டு ஏழெட்டு மாசம் ஓடிப் போயிட்ட இந்த நாள் பரியந்தம் ஓர் இனுக்கு வெத்திலைச் சருகுகூட அந்நியம் அசலிலேயும் சரி, சொந்தம் சோபாரிலேயும் சரி, கைநீட்டி வாங்கினதில்லை. இனிமேல் எப்பிடி நடக்குமோ தெரியலை !' — அழுத்தமான நினைவுகள் அமைதிகெட்டு நெடுமூச் செறிந்தன. முக்கி முனகிக் கொண்டு கை கால்களை உதறியபடி புரண்ட கணவனின் உடல்நிலை அவளைப் பாடாகப் படுத்தியது. இனம் புரியாத பயம் அரவமாக அவளது உள் மனத்தில் நெளிந்தது. இளமையின் கட்டுவிடாத மேனி புல்லரித்தது. 'மச்சானுக்குக் காய்ச்சல் முத்தி அவுகளுக்கு ஏதாச்சும் ஆயிட்டா?' கேள்வியே விதியாகி அவளது வினையைத் தொட்டு விளையாடியிருக்க வேண்டும். இல்லையெனில், அவள் ஏன் அப்படித் தேம்பித் தேம்பி அழப்போகிறாள்!

''காத்தாயி !''

சொக்கன்தான் அழைத்தான். குரலில் ஜீவனே இல்லையே !

''இந்தாலே பத்தியக் கஞ்சியை எடுத்துக்கிட்டு வந்திடுறேனுங்க, மச்சான்!'' என்று சுயப் பிரக்ஞையைப் பெற்றுச் சொல்லிய வண்ணம், உலையில் அகப்பையை விட்டு எடுத்துப் பதம் பார்த்தாள் காத்தாயி. இன்னும் ஒரு 'கொதி' இருந்தால் தேவலாம் என்று கணித்து, விளாரிச்சருகில் ஒரு கொத்தை அள்ளி அடுப்புக்குள் திணித்தாள். பொங்கல் கலயத்தில் இருந்த எலுமிச்சை ஊறுகாயில் ஒரு துண்டம் எடுத்துப் பீங்கான் கிண்ணத்தில் வைத்தாள். கஞ்சியை ஊற்ற ஈயக் குவளை ஒன்றையும் எடுத்தாள். அவசரம் அவசரமாகக் குனிந்தபடி கஞ்சிப் பானையை இறக்க முனைந்த போது, அடுப்புக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த சவுக்குக் கழியில் அவளுடைய தாலிச் சரடு பின்னிக் கொண்டது. அதைக் கவனிக்கவில்லை அவள். பானையைத் தூக்கி அடைதுணியின் உதவி கொண்டு இறக்கி வைத்த போது, பானையுடன் சவுக்குக் கழியும் தாலியுடன் பின்னிக் கொண்ட நிலையில் அவள் கழுத்தோடு கழுத்தாக ஒட்டிக் கொண்டது. சவுக்கின் தீப்பட்ட பகுதி அவள் கழுத்தைச் சுட்டுவிட்டது. 'ஆத்தாடி!' என்று பற்களைக் கடித்துக் கொண்டே, 'கலவடை'யில் கஞ்சிப் பானையைச் சரி செய்து வைத்துவிட்டு, பின் வசமாகக் கால்களை இழுத்து வைத்தபடி குனிந்த நிலையுடனேயே, சவுக்குக் கழியில் பின்னிப் பிணைந்துவிட்டிருந்த அந்தத் தாலிச்சரட்டை விலக்கி எடுப்பதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது. தாலிச் சரட்டின் ஒரு 'கரணை'யில் சவுக்குக் கழியின் சிறு கவ்வல் அகப்பட்டுக் கொண்டு, அவளை எத்தனை அவதிப்படுத்தி விட்டது! தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டே பின்கழுத்தில் இழுத்துவிட்டாள். பின்னர், அவசரத்தோடு கஞ்சியைக் குவளையில் ஊற்றிக் கொண்டு ஊறுகாய்க் கிண்ணத்துடன் கணவனின் படுக்கையை நாடினாள் காத்தாயி. பெரிய கண்டத்தினின்றும் உயிர் தப்பிவிட்ட ஓர் அமைதி அவளுள் கனிந்திருந்தது. ''மச்சான் ரொம்பப் பொழுது ஆயிடுச்சு. ராத்திரியும் குலைபட்டினியாய்க் கிடந்திங்க. இப்பவாச்சும் ஒரு வாய்ப் பத்தியக் கஞ்சி குடியுங்க'' என்று சொல்லி, கஞ்சிக் குவளையைக் கீழே வைத்தாள். ஊறுகாய்க் கிண்ணமும் நழுவி விடாமல் தப்பித்தது. புடவை முன்றானையைத் தோளில் போட்டுக் கொண்டாள் காத்தாயி.

அவன் தலையணையில் சாய்ந்து கொண்டு, குவளையை எடுத்து ஒரு மிடறு கஞ்சியை இறக்கியிருப்பான். மறுகணம், அவன் வாந்தி எடுத்துவிட்டான். அவன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட அவள், ''மச்சான், பயப்படாதீங்க. பித்தம் வெளியேறுகிறது நல்லதுதான். அப்பத்தான் காய்ச்சல் விடும்'' என்று சொல்லி, அவனைக் கைத் தாங்கலாகப் பற்றிக் கொண்டு நிலைப்படிக்கு அழைத்து வந்து, வாய் கொப்புளிக்கத் தண்ணீர் கொடுத்தாள். ''நீங்க இங்கிட்டாலே இருங்க. அல்லாத்தையும் சுத்தம் பண்ணிப்புட்டு, வேறே பாய் விரிக்கிறேனுங்க'' என்று கூறி, அவனை ஈசான்ய மூலைச் சுவர் ஒண்டலில் சாய்த்து வைத்தாள். ''யாபகமாய் இருக்கோணும்.. கட்டாந்தரையிலே சாஞ்சுப்புடாதீங்க!''

சொக்கனின் கண் முனைகள் கசிந்தன. ''ஆவட்டும். நீ போ !''

போனவள் திரும்பினாள். ரவிக்கையை முடிந்த விரல்கள் விலகின. கணவனைப் படுக்க வைத்தாள். ''ஊறுகாயிலே ஒரு துளி நாக்கிலே தடவட்டுங்களா?'' என்று அன்புடன் கேட்டாள்.

''ஊக்கூம்!'' அவன் கண்கள் மீளவும் மூடிக் கொள்ளத் தலைப்பட்டன.

அவிழ்ந்த கொண்டையைத் தட்டிச் செருகியபடி, திருவிழாப் பொம்மையெனக் குந்தி விட்டாள் காத்தாயி. வகை புரிய மாட்டாத மலைப்பு அவளுள் மலையாகக் கனக்கத் தொடங்கியது. 'எம் பொழுது எப்பிடி விடியப் போவுதோ, விளங்கல்லியே?' என்று உருகித் தவித்தாள். எதிர்காலம் அவளை எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணச் செய்தது போலும்! கண்கள் தளும்பின.

''காத்திக் குட்டியோ !'' வாரிச் சுருட்டிக் கொண்டு விழிகளை மலர்த்தி அழைத்தான், உடைமையாளி. ''அழுதியாங்காட்டி?.... ஒத்தாளி தங்காதுன்னு அச்சம் வந்திடுச்சா புள்ளே!.... அப்பிடி ஒண்ணும் கிலேசப் படாதே. ஒத்தாளிக்கு வயசு கூடுதல். ஏன்னா, நான் பலக்க எழுதிக் கட்டப்போறுக்கும் !... ஒரு சு எறும்புக்குக்கூட தீம்பு செய்யாதவங்க நாம. மானமாய்ப் பொழைக்கக்கினு வருகிற ஒரு தனிச் சென்மங்க நாம. ஒனக்கு நானும் எனக்கு நீயும் மட்டுமே துணை ஆகிப்பிட்ட பொசிப்பு கொண்ட அதிசயமான புருசன்— பொஞ்சாதியான நம்பளைச் சோதிக்கிறதுக்கு ஆத்தா ராக்காச்சிக்கு மனசும் வராது

மாயமும் தோணுது. நம்பு, புள்ளே !'' என்று தேற்றிய சொக்கன், நேர் கொண்ட பார்வையை வீசினான். மறு இமைப்பில் அவனுள் பதற்றம் சாரைப் பாம்பாக உறுமியது. ''ஏலே, என்னுங்கிறேன், உங் கழுத்தடியிலே என்னமோ தீப்பட்ட காய மாட்டம் தடம் காட்டுதே ?'' என்று விசாரித்தான்.

அவள் குனிந்து பார்த்துக் கொண்டாள்.

''ஒனக்குத் தெரியுமாலே?.... என்னு பட்டுச்சி ?''

அவள் சமாளித்துக் கொள்ளமாட் டாளா? ''அதுவாங்கிறேன்..... அது. சும்மா கங்கு தெறிச்ச வடு.... இல்லே, புண்ணுக்கும்....!'' வேதனை உள் வாங்க, புன்னகை ஏந்த முயற்சி செய்தாள், ஏந்திழை.

''நான் பாயும் படுக்கையானதும் ஒனக்கு மனசு குளம்பிப் போச்சு. ஆமா, ராத்திரி முச்சூடும் நீ ஏகாதசி பிடிச்சிருப்பே. எனக்கு நல்லாப் புரியுது. இப்பவாச்சும் போய்க் கஞ்சி கிஞ்சி சாப்பிடுலே !''

அவள் தூவிய புன்னகைப் பூவுக்கென்று இப்படியொரு நெடியா?

''ஆத்தாடி ! இப்பத்தான் என்னோட உசிரு எங்கிட்டே தங்கிச்சு!'' என்று உணர்ந்து பேசினான் சொக்கன். ''காத்தாயி! தண்ணிக்குப் போகையிலே, நம்ப கடலைக் கொல்லைத் தாக்கையும் ஒரு நோட்டம் விட்டுக்கினு வந்திடு. மாடு ஆடு மேஞ்சு சாலும் மேயும். விரட்டிப் போட்டு வா. இன்னும் நாப்பது நாப்பத்தஞ்சு நாள் பொழுது கழியணுமில்லே!..... மறந் திடாதே !'' என்று நினைவூட்டினான் அவன்.

''மறப்பேனுங்களா, மச்சான் ?''

கஞ்சிப் பொழுது.

உச்சி வெய்யில் இப்படியா வறுத்துக் கொட்டும்? மழை குணத்துக்கு அறிகுறியோ?

குறட்டை யொலியின் சுரபேதத்தை உணர்ந்தவளாக, இன்னமும் கஞ்சிக் கலயத் தின் முன்னேதான் கைகளில் கன்னத் தைத் தாங்கியவாறு காத்தாயி குந்தியிருந் தாள். சிந்திக் கிடந்த அரிசி மணிகளைக் கொத்திக் கொண்டிருந்த குளமங்கலம் அத் தாச்சி வீட்டுப் பெட்டையை விரட்டக்கூட நினைவிழந்திருந்தாள் அவள். 'எம் மச்சான் ஒரு மிடறு கடுகஞ்சித் தண்ணியும் குடிக் கல்லே! நான் மட்டும் எப்பிடிச் சாப்பிடு வேணும்?' — இந்த ஒரு வைராக்கியமே அவளது உயிர் மூச்சாக இழைந்து, இயங்கிக் கொண்டிருந்தது. கண்ணீரைத் துடைத்த விரல்கள் கீழ் நோக்கித் திரும்பியபோது, கழுத்துப் புண்ணில் பட்டுவிட்டன. அவள் சிலிர்த்து விழித்தாள். தாலிச் சரட்டைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஞாபகம் எழுந்தது. அதற்குள், கிழவி ஒருத்தி பிடி உப்புக்கு வந்து நின்றாள். 'இந்தாங்க, பிடிங்க!' என்று உப்பைக் கொடுத்தாள்.

''சொக்கன் காலம்பறக் கொத்து வேலைக் குக் கிளம்பிட எந்திரிச்சிடுவான், பாரு, காத் தாயி!'' என்று நல்வாக்குக் கொடுத்து விட்டு உப்பும் கையுமாகச் சென்றாள் மூதாட்டி.

முதல்

பேட்டி !



பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கும் திட்டம், முதன் முதலில் அமெரிக்க ஜனாதிபதி ஜான் குயின்ஸி ஆடம்ஸ் அவர்களிடமிருந்துதான் ஆரம்பமாயிற்று. இதுவும் இலேசில் நடந்துவிட வில்லை. அவர் நீச்சல் குளம் ஒன்றில் குளித்துக் கொண்டிருந்தபோது நிருபர் ஒருவர் திடீரென்று அவர் முன் தோன்றி அவர் கரையில் வைத்திருந்த ஆடைகளின் மீது அமர்ந்து கொண்டு ''செய்தி ஒன்று கொடுப்பதற்கு இணங்கினால்தான் இங்கிருந்து நகர முடியும்'' என்று பிடிவாதம் செய்தார். நீண்ட நேரம் தண்ணீரில் இருந்தவாறே மறுத்துப் பார்த்த ஆடம்ஸுக்குக் குளிர் தாளவில்லை. கரை யேறி வந்தால் போதும் என்றாகிவிட்டது. ஆகவே, ஆடைகளை வாங்கிக் கொள்வதற்காக, செய்தி அளிக்க ஒப்புக் கொண்டார்.

ஆதாரம்: ''நியூஸ் வீக்''
தகவல்: வி. வி.

செக்கச் சிவந்த குங்குமத்தைச் செக்கச் சிவந்த அழகிய நெற்றியில் இட்டுக் கொண்டு, குடம் ஏந்தி வழிநடந்தாள் காத்தாயி.

''நம்ப ரெண்டு பேரும் ஒன்னோட நல்ல குணத்திலே நான் மயங்கியும் என்னோட நல்ல குணத்திலே நீ மயங்கியும் சதிபதி யாகிட்ட ஏழை பாழைங்க. அந்த மயக்கத் திலேயே நான் இருந்திட மாட்டேன். நீயும் இருந்திட மாட்டே. ஆனபடியாலே, நாம ரெண்டு பேரும் உழைச்சுக்கிட்டே இருப் போம். அதை நம்பித்தான் கையிலே மடி யிலே சேமிச்சு மிச்சம் புடிச்சு வச்சிருந்த நாலூறு ரூபாயை மண்ணிலே போட்டுப் புட்டேன். மண்ணும் தெய்வத்துக்குச் சமம். அது, மனுசங்களொப்ப, நம்பிக்கை மோசம் செஞ்சுப்புடாது. கொத்து வேலைக்குப் போற துக்கு முந்தியும், வேலையை விட்டு வந்தப்புற மும் நான் உழைப்பேன். நீயும் முடிஞ்ச மட்டுக்கும் பாடுபடு. அப்பத்தான் நம்பளும் ஊர் உலகத்தைப் போல இல்லாட்டியும், கடன் கப்பி வாங்காம வாழுற போதுமென் கிற மனசோட வாழுறதுக்கு — மானமும் மரியாதையுமாய் வாழுறதுக்குத் தோதாய்க் கையிலே மடியிலே நாலு காசு சேர்த்துக்கிட ஏலும்!'' என்று சொக்கன் மனத்தில் புனிதம் ஏந்தி, அடக்கம் காத்து, நம்பிக்கை வைத்து நாணயம் ஏற்றி உரைத்த சொற்கள், காத் தாயியின் அழகிய உள்ளத்தில் அமுதமாக வழிந்தன. அவன் நேர்கொண்ட பார்வையை வீசினான். நீண்டு விரிந்து கிடந்த கடலைக் கொல்லையின் பசுமை பரப்பும் கொடிகளில் பூத்திருந்த மஞ்சள் பூக்களின் கம்பீரமும் அவனை மெய்மறக்கச் செய்தன. 'எங்க சொந்த மண்ணு இது. இந்தக் கொல்லே எங்க அசராத உழைப்புக்குச் சாட்சி!'

கொல்லையின் கீழ் வசத்தில் இருந்த புதிய கிணறு அவனைக் கைதட்டிக் கூப்பிட்டது. நன்றியின் சுரப்புடன். நான்கு ஆள் ஆழத் துக்கு அந்தக் கேணியைத் தோண்ட அவன்

நூறு ரூபாய் அல்லவா கூலியாக அதில் போட்டிருந்தான்! 'ஆத்தாடியோ!... எம் புட்டு ஆழம்... கால் தவறி விழுந்துபுட்டாக்க அத்தோட சரிதான்!'

ஏற்றக் கிணற்றடியில் குடத்தை எச்சரிக் கையோடு இறக்கி வைத்தாள் காத்தாயி.

கருச் சிதைவு ஏற்பட்டுத் துடித்துக் கிடந்த காத்தாயி புனர்ஜன்மம் எடுத்தாற் போன்று பிழைத்தெழுந்ததைக் கண்டு கூத்தாடினானே சொக்கன், அப்பொழுது அவன் அவளிடம் தேம்பி அழுததை அவள் மறக்கவே மாட்டாள்! — ''காத்திப் புள்ளே! நீ என்னைத் தனியே விட்டுட்டுப் பிரிஞ்சிடுவியோன்னு கூட அச்சம் வந்திடுச்சு எனக்கு. அப்படி எக்குத்தப்பா நடந்தாக்க, அந்தப் பாளத்த விதியோட வாயிலே ஒரு கொத்து மண்ணை அள்ளிப் போட்டுப்புட்டு நானும் அப்பவே செத்துப்பூட்டிருப்பேன்! இது சாமி ஆணையாக்கும்!''

கண்களைத் துடைத்துவிட்டு எழுந்த காத்தாயி, தலையைக் குனிந்து மூச்சை அடக்கிக் கொண்டு, ஏற்றச்சாலை நகர்த்திக் கிணற்றுக்குள் செலுத்திக் கைகளை மேலும் கீழுமாகப் பரப்பியபடி ஏற்றக் கம்பை மேலே இழுத்துவிட்டு, சாலில் இருந்த நீரைக் குடத்தில் ஊற்றி நிரப்பினாள். களைப்புடன் நிமிர்ந்தவள், இரண்டு கை நீரை எடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டு ஒரு கைநீரை அருந்தினாள். பிறகு குடத்தை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு நடந்தாள். அவளுடன் அவளது பிரார்த்தனையும் உடன் நடை பயின்றது. வீட்டுக்கு வந்ததும், விசுக்கென்று முகத்தைத் தடவிப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவளுக்கு உயிரே போய்விட்டது. 'ஐயையோ!' என்று அவளது மனம் அலறியது.

அவளுடைய தங்கத் தாலிச் சரட்டைக் காணோம்!...

''மச்சான்!''

பதறியபடி கூவினாள், கைகொடுத்தவள்.

''என்ன புள்ளே!'' பதற்றத்துடன் கேட்டான் திருப்பூட்டியவன்.

''என்னோட தாலி சரட்டோட கிணற்றுக் குள்ளார விழுந்திருச்சுங்க அத்தான்!'' என்று தலையில் அடித்துக் கொண்டு கூக்குரல் எழுப்பினாள் காத்தாயி.

''ஆ!'' என்று அலறினான் சொக்கன். கொண்டவளை ஊடுருவிப் பார்த்தவன், மறு கணம், தன் பதற்றத்தை, நடுக்கத்தை, துயரத்தை, பயத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டான். ''அழாதே, காத்தாயிப் பொண்ணு! நீ இம்மாங்கொத்த கோழையின்னு நான் நினைக்கவே யில்லையே!.... பொழுது விடியறதுக்குள்ளார, புதிய தாலி செஞ்சு உனக்குப் பூட்டிப்பிடறேன். 'அந்தத் தாலி கேணியிலே விழுந்திட்டதாலே என்னோட உசிருக்குக் குந்தகம் விளைஞ்சிடு மோன்னு நீ கிலேசப்படாதே!... ஆத்தா! என்னைக் காப்பாத்திட்டா! இனிமேல், என் உசிருக்குப் பயமே இல்லே!'' என்று ஆறுதல் சொன்னான், உரிமைக்காரன்.

காத்தாயி தன் ஆசை மச்சானை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு மீண்டும் செருமினாள்.

மெள்ள எழுந்து அவள் கண்ணீரைத் துடைத்தான் சொக்கன். ''எனக்குப் பசிக்குது. கஞ்சித் தண்ணி கொதிக்க வை, காத்திக் குட்டி, இந்தாலே வரேன்!'' என்று நேசக் காதலியின் கன்னங்களை வருடிக் கொடுத்து விட்டு அங்கிருந்து நகர்ந்தான்!

பத்தியக் கஞ்சி கொதிக்கத் தொடங்கி விட்டது.

அப்போது:

''காத்தாயி... காத்தாயி! ஒம் மச்சான் உங்க கிணத்திலே விழுந்திடுச்சாம்!'' என்று அலறியபடி ஓடோடி வந்தாள் உப்புக்கு வந்த கிழவி.

''ஐயையோ, என் தெய்வமே!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு கேணியை இலக்கு வைத்துப் பாய்ந்தோடினாள்.

''மச்சான்! மச்சான்!'' என்று பதறிக் கதறிய வண்ணம், தன் ஆசை மச்சானின் நாசியில் கையை வைத்துப் பார்த்த காத்தாயி மறு கணம், ''ஐயையோ!...எம் மச்சானுக்கு மூச்சுப் பறியலையே, பாட்டையா!'' என்று மண்டையில் அடித்துக் கொண்டு ஓலமிட்டாள். சொக்கனின் வலது கைப்பிடிப்பில் மௌனத்தின் மங்கலமென மின்னிய அந்தத் தாலிச்சரட்டில் அவள் காணிக்கை செலுத்திக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகள் சொட்டிக்கொண் டிருந்தன.

பெரியவர் மண்டியிட்டு, சொக்கனின் நாசித் துவாரங்களில் விரல்களை அமைத்துச் சோதித்துப் பார்த்துவிட்டு, உதடுகளைப் பிதுக்கினார்!

மறு கணம்:

காத்தாயி வெறி கொண்டவள் போல எழுந்தாள். தலைமுடி அவிழ்ந்தாடியது. கண்ணீர் வழிந்தோடியது. நெற்றிக் குங்குமம் மட்டும் துலாம்பரமாகப் பளிச்சிட்டது. ஆருயிர்க் கணவனை மீண்டும் ஒரு முறை விழுங்கி விடுபவள் போல் நோக்கினாள். செருமல் வெடித்தது. ''மச்சான்!...எந் தெய்வமே!... இந்தாலே நானும் ஒங்களோட பயணம் வச்சுப்பிடுறேனுங்க!'' என்று வெறி மூள முழங்கியவாறு கிணற்றின் திசை நோக்கித் திரும்பினாள் காத்தாயி.

அந்த முழக்கத்தில் 'ஸ்ருஷ்டி தர்மம்' குரல் கொடுத்ததோ?

வாரிச் சுருட்டிக் கொண்டு, கனவினின்றும் விழிப்பவனாக எழுந்தான் சொக்கன். ''ஏலே காத்தாயிப் புள்ளே!'' என்று பலத்தைக் கூட்டிக் கூவினான். அவன் கையிலிருந்த தாலியில் ஈரம் சொட்டியது.

காத்தாயி, தெய்வத்தின் அழைப்பைக் கேட்டவள் போன்று தலையைத் திருப்பினாள். ''மச்சான்!... மச்சான்!''

சொக்கன் விம்மினான். ''காத்தாயிக்குட்டி! எந்தெய்வத்தோட தாலியை மீட்டுப்பிட வேணுமிங்கிற ஒரே வைராக்கியத்திலேதான் வெறியோடெ என் காய்ச்சலையும் மறந்து, இந்தப் பாதாளக் கேணியிலே குதிச்சேன். எந்தெய்வம் என்னைக் காப்பாத்திப்புடுச்சி!... உன் தெய்வம் உன்னையும் காப்பாத்திக் கொடுத்திடுச்சு!...ஆமாங்கிறேன்!...''


தன் அன்புக் கணவனின் பாதங்களைச் சரணடைந்தாள் காத்தாயி: ''மச்சான்! எந்தெய்வமே....!''

ஸ்ருஷ்டி தர்மம் மங்கல நாண் ஏற்றி அருட் புன்னகை சொடுக்கிக் கொண்டிருந்தது அப்போது!

சக்திக்கும் வலிமைக்கும் போர்ன்விடா!



சக்தியளிக்கும் போர்ன்விடா நாவினிமையிலே சிறந்ததோர் பானமாக விளங்குவதன் ரகசியம்—செழுமையான கோகோ!



வளமையின் சிறந்த பொருள்களான கோகோ, மால்ட் சர்க்கரை, பால் இவையாவும் திட்டமாக கலக்கப் பெற்று தயாரிக்கப்பட்டதன் பலன்—தெம்பும் திடமும் தரும் ஒரு தீஞ்சுவை பானம் போர்ன்விடா.சூடான பாலிலே போர்ன் விடா கலந்து ஒரு கோப்பை அருந்துங்கள்...நாவுக்குத் தான் என்ன இனிமை, உடம்புக்குத்தான் என்ன வலிமை.

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா

3226A-Tm.


போலியிலே அசல்!

மீனாட்சி கிருஷ்ணா

''ஏன்னு, நாளன்னைக்கு உங்களுக்குப் 'போனஸ்' தராளாமே! இந்த வாட்டியாவது ஒரு கடிகாரம் வாங்கிடலாம் இல்லையா?''

'கன்னிச் சொட்டான' காப்பியை ஜெயராமன் கடித்து விழுங்க முயன்று, அதே சமயத்தில் அதன் நறுமணத்தில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த நிலையில் அவனது இல்லாள் நந்தினி கேட்ட கேள்வி இது.

''ஆஹா, பேஷ்! எந்த நல்ல வேளையில் எதைத்தான் கேட்க வேண்டும் என்ற இங்கிதத்தை உணர்ந்து கேட்கும் நங்கை நல்லாளே, என் நந்தினியே, போனஸ் நற்செய்தியை உனக்கு இவ்வளவு கச்சிதமாக விண்டுரைத்த ஊர்க்குருவி யாரோ?'' எனக் காவிய நடையில் வினவினான் ஜெயராமன்.



''வேறு யாரு சொல்லப் போறா, உங்க தொழிற்சாலையில் வேலை பார்க்கிறாளே, கோடி வீட்டுக் கோகிலா, அவளேதான்!''

''பரவாயில்லையே, அந்தரங்கக் காரியதரிசிகளும் அறியாத விஷயங்கள் இவர்களுக்கெல்லாம் எப்படித்தான் முன்கூட்டியே தெரிந்து விடுகிறதோ?''

''நீங்க என்ன நினைச்சேள் என் ஸிநேகிதியை? அவள் யூனியன் செயற்குழுவில் இருக்கிறாளாக்கும்! பகவானுக்கே சொல்லாவிட்டாலும் அவளுக்குச் சொல்லியாகணும்! அது போகட்டும், கடிகாரம் வாங்கற விஷயம்?''

''பார்த்தியா, பார்த்தியா, அதை எங்கே மறந்துடப் போறியோன்னு பார்த்தேன்.. உனது கோகிலைப் பிரதாபச் சொல் மழையிலே! பிள்ளையாண்டான்களைக் கான்வெண்டுக்கு அனுப்பக் கடன் வாங்கின பணத்தைக் கொடுத்தப்புறம் மீதி ஏதாவது இருந்தா நீ ஒரு கடிகாரம் வாங்கிண்டு எனக்கு ஒரு 'ஸ்ட்ராப்'பும் வாங்கி வா. இரட்டைச் சந்தோஷம்!''



''போறுமே உங்க 'இல்லை'ப் பாட்டு! நானும் ஆறு வருஷமாகக் கேட்டுண்டிருக்கேன், ஒரு சின்னக் கடிகாரத்துக்கு! என்னிக்கும்தான் கடன் வாங்கறோம். அதோட இதுன்னு வாங்கினாத்தான் வாங்க முடியும்!''

வாதம் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதோடன்றி, இந்த ஆண்டு போனஸும் அவளது கோரிக்கையைப் பூர்த்தி செய்யாமலேயே கரைந்து விட்டது. ஆனால் அவளது பேதை மனம் ''என்றாவது வாங்க முடியாமலா போய்விடும்?'' என்று எண்ணமிட்டபடி இருந்தது.

நந்தினி நான்கு நாட்களாகக் கண்ணை திறக்கவில்லை. டாக்டர் என்னவோ, ''வெறும் 'டிங்கு' ஜுரம்தான். கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை'' என்று சொல்லி மருந்து தந்து விட்டுப் போய்விட்ட போதிலும் ஜெயராமனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'காஷுவல்' லீவு போட்டான்-மனைவிக்கும் நற்பணிக்காய்!

டாக்டர் மூன்றும் முறையாக வந்து விட்டுப் போனார், ரூபாய்க்கு ஒன்று விதம் மிகவும் மலிவாகக் கிடைக்கும் மாத்திரைகளில் இருபத்து நான்கும், உணவாக 'ஹார்லிக்'ஸும் அருந்த வேண்டும் எனச் சிபாரிசு செய்துவிட்டு! ஜெயராமனுக்கு மேலும் ஒரு சோதனை போலும்!

ஜெயராமனுக்குத் தலை சுற்றியது. ''ஹார்லிக்ஸ்'' என்னும் கிடைத்தற்கரிய அமுதம், பங்கீட்டு முறையில் உணவுப் பொருள்களோடு, முன்னதாகவே அட்டையில் பதிவு செய்து கொண்டவருக்கு மாத்திரமே ''ஸ்டாக்குகள் எஞ்சியுள்ளவரை'' கிடைக்கும் அற்புதப் பொருளாயிற்றே! மேலும் தனக்கும் தன் குடும்பத்துக்கும் பொருளாதார ரீதியாக அவசியமில்லாதவை எனக் கருதி நந்தினி ஒதுக்கிய பொருள்களில் அதுவும் ஒன்றாதலால், இன்றுவரை பதிவு செய்துகொள்ளவில்லை. மிகவும் அவசியமானபோது இன்று போய் விண்ணப்பித்தால் பங்கீட்டு அதிகாரிகள் உடனே பதிவு செய்து விடுவார்களா, அல்லது கடைக்காரர்தான் அவனை இன்முகத்தோடு வரவேற்று, ''ஐயா, இந்தாருங்கள் ஹார்லிக்ஸ்!'' என்று முகமலர்ந்து அளித்து விடுவாரா?

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், மாயா ஜாலத்தாலோ மந்திர சக்தியாலோ அரிய பொருளையும் கிடைக்கச் செய்யும் சக்தி ஒன்றுக்கு இருந்தது. அதுவே பர்மா பஜார்.

அகதிகள் நாட்டை விட்டுப் பெயர்ந்து வந்து பிழைப்புக்கென்று சில பொருள்களை விற்கத் தொடங்கி இன்று நாகரிக உலகின் ஜம்பத்துக்கு ஈடு தந்து நிரந்தரமாக நிலைத்து விட்ட கடை வீதி. அசலும் நகலுமாக ஆடம்பரச் சரக்குகளை அளவற்றுக் குவித்து விற்கப்படுமிடம். கும்பலோடு கும்பலாக ஜெயராமனும் நடந்தான். ''அவசியத் தேவை ஒன்றை நாடுபவன்'' என்றலட்சணம் அவனது முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. இதைக் கவனித்து விட்டார் சுறுசுறுப்பு மிகுந்த வியாபாரி ஒருவர்.

''வாங்க ஸார்! ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடு, வின்செஸ்டர் டார்ச் லைட், இம்போர்ட்டட் சாக்லேட்ஸ்!....''

''ஹார்லிக்ஸ் இருக்கிறதா?'' — மிகவும் ரகசியமாகக் கேட்டான் ஜெயராமன்.

''இல்லாமலென்ன? அயல் நாட்டுச் சரக்கு கொஞ்சம் கிராக்கிதான்! மூன்று ரூபாய் அதிகமாகும்; சம்மதம்னு சொல்லுங்க; பத்தே நிமிஷத்திலே கொண்டாந்து தர்றேன்!'' — மிகுந்த தோரணையோடு கூறினார் அவர்.

''பணத்தைப் பத்திக் கவலை இல்லீங்க... அவசரத் தேவை.... சாமான் கிடைச்சா சரிதான்!''

சொல்லி வைத்தாற்போல் பத்தே நிமிடங்களில் திரும்பிய அவரது கரங்களில் அன்று தான் பொறியப்பெற்றது போன்ற புத்தம் புதிய ஹார்லிக்ஸ் பெட்டி காட்சி தந்தது. கஜானாவின் கனத்தைக் குறைத்துக்கொண்டு கரங்களுக்குச் சுமையாய் அம்மாயப் பொருள் ஏந்தி, நடையைக் கட்டினான் ஜெயராமன்.

சரிசனத்தோடு கணவன் கொடுத்த பானத்தைப் பருகினாள் நந்தினி. மறு கணமே அவளையும் அறியாமல் ''தூ''வென்று துப்பிவிட்டாள் — அது படுக்கையறை என்பதையும் பொருட்படுத்தாமல்!

''ஏன்?... என்ன ஆச்சு?''

''இது என்ன ஹார்லிக்ஸ்தானா, அல்லது மரத்தூளா? மாவு கரைந்த மாதிரியாகவும் தெரியவில்லை. வாயில் என்ன 'நறநறன்னு' தட்டுப்படுகிறது. ஏதோ போலிச் சரக்கை உங்க தலையிலே கட்டிட்டான் போலிருக்கு!''

மனக் குரங்கு தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தது. எழுந்து போய், பாட்டிலை எடுத்து வந்து துகளைக் கையில் எடுத்தும், வாயில் போட்டு மென்றும் ஆராய்ந்தான். மீண்டும் ஒரு கரண்டி துகளைத் தண்ணீரில் கரைத்தும் பார்த்தான். அசல் ஹார்லிக்ஸைப் போல் அது கரையவில்லை. தூசியும், தும்பும் வேறு கலந்திருந்தன. நோயாளிக்குக் கொடுக்கு முன்னரே இதைக் கவனிக்காத தன் மடமையை எண்ணி நொந்தான். ஆத்திரத்தில் பல்லைக் கடித்த போதிலும் அப்போதைக்கு வேறு ஏதும் செய்ய இயலாத நிலையில் இல்லாளுக்குப் பால் கலந்த கஞ்சியைக் கொடுத்து விட்டுக் கண் அயர்ந்தான்.

மறு நாள் பொழுது என்றும் போலவே விடிந்தது. மிக அவசியமான ஒன்றிரு வேலைகளை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு எப்படியாவது இந்தப் போலிச் சரக்கு வியாபாரியை ஒரு கை பார்த்து விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்டான், டவுனை நோக்கி.

அதே மரத்தடி. அதே வியாபாரச் சரக்கு. ஆனால் இன்று வியாபாரம் செய்யும் ஆண்மகன் மாத்திரம் வேறு!

''என்னா ஸார், நமக்கு என்ன தேவை?'' என்று பணிவன்போடு வினவினார் அவ்வகதி வியாபாரி.

ஏமாற்றத்தை வெளிக் காட்டாமல், ''நேற்று இங்கு ஒரு வியாபாரி இருந்தாரே, அவர் எங்கேப்பா?'' என வினவினான் ஜெயராமன்.

''யாரைக் கேக்கிறீங்க?... புலப்படலையே, இங்கே யாருக்கும் நிலையான எடம் கிடையாதுங்க!'' — வியாபாரி நிதானமாகவே பதிலிறுத்தார். பிறகு தனக்குத்தானே யோசித்தார், ஞானோதயம் பெற்றதைப் போல.

''ஓ...அவுகளா? நேத்து ராவுதான் அக்கரைக்குப் புறப்பட்டுப் போனாக, வரப் பத்து



CRISP NEWS...
SATHE
PICNIC
BISCUITS
YOUR FAVOURITE
SATHE
PICNIC
BISCUITS
Now available
in fancy
air-tight carton
SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD., POONA-2.

பதினேஞ்சு நாளாகும்! நம்ப 'தேள்வை' என்னன்னு சொன்னீங்களு...!'' வாக்கியத்தைப் பூராவாக முடிக்காமலே தேவைப் பூர்த்தி நிபுணர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

''தேவை ஒண்ணுமில்லேப்பா... நேத்து அவர் கையிலே இந்த ஹார்லிக்ஸ் வாங்கிட்டுப் போனேன். வீட்டிலே போய்த் திறந்து பார்த்தா மண் மாதிரி இருக்கு! எட்டேகால் ரூபா என்னு...!''

''ஐயையோ.. அப்படீங்களா? இப்பல்லாம் யாரையுமே நம்ப முடியறதில்லீங்க, ஸார்! அவுக நம்ப அண்ணுருதான். ரொம்ப நாணயமானவகதான்... ஆனு எங்கே கொள்முதல் பண்ணிஞகளோ தெரியலே! கப்பலில் வர்ற சரக்கை அசலா, 'டுப்ளிகேட்'டான்னு நாம என்ன பூந்து பார்க்க முடியுதுங்களா?''

வியாபாரி தம் இனத்தவரின் நாணயத்தைப் போற்றுவது கொள்கையளவில் முறையானதுதான்! ஆனல் தன் குறை அதனல் தீருமா?

ஏமாற்றத்துடன் அவ்விடம் விட்டகலலானுன் ஜெயராமன். பிறகு, வேறொரு நண்பனின் உதவியால் உள்நாட்டில் தயாரான அசல் ''ஹார்லிக்ஸ்'' புட்டி ஒன்று வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

நோயின் உக்கிரம் சற்றுத் தணிந்திருந்தமையால் நந்தினி எழுந்து நடமாட ஆரம்பித்திருந்தாள். புதிய புட்டியைத் தானே பரிசோதித்துத் திறந்தாள். சிறிதளவு கலந்தும் பருகினுள். கணவனுக்கும் சிறிது வழங்கினுள். ஜெயராமன் பருக மறுத்தான். வீழ்ச்சி மனப்பான்மை அவனை மென்றுகொண்டிருந்தது.

''என்னு, ஒரேயடியா யோசனையிலே மூழ்கிப் போயிட்டேளே, அந்தப் பழைய பாட்டிலை என்ன பண்ணறதாக உத்தேசம்? கடைக்காரன் என்ன சொன்னுன்?''—நந்தினி கேட்டாள்.

''ஆமாம், சொன்னுன் சுரைக்காய்க்கு உப்பில்லேன்னு! போலிச் சரக்கை விற்றவன் கம்பி நீட்டிட்டான். இப்போ வேறொருவன் அதே வேலையைக் காட்டப் பார்க்கிறுன். எல்லாம் ஒரே பசப்பல்!'' — இரைந்து கொண்டே எழுந்தவன், போலிப் பாட்டிலைக் கையில் எடுத்தான். ஆத்திரத்துடன் விட்டெறிந்தான் குளியலறைச் சுவரில்.

பாட்டில் சின்னு பின்னமாகியது.

''கோபத்தை ஏன் வீட்டில் வந்து காட்டறேள்? அவன் மூஞ்சிலே விட்டெறியறது தானே! எல்லாம் என்னுல்தானே வந்தது! வியாதியும் வெக்கையும் தகுதியில்லாதவனுக்கு ஏன்தான் வரணுமோ?'' — சிணுங்கியவண்ணம் எழுந்தவள் துடைப்பத்தை எடுத்து வந்து சிதறல்களைக் கூட்டிப் பெருக்கலானுள். குப்பையைக் குப்பலாக அள்ளி எடுத்தபோது, முற்றிலும் உடையாத பாட்டியின் ஒரு பகுதியிலிருந்து காகிதப் பொட்டலம் ஒன்று நீட்டிக் கொண்டிருந்தது. அசிரத்தை கலந்த ஆர்வத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தாள். அவளது கண்கள் மலர்ந்தன.

''என்னு, சீக்கிரம் இப்படி வாங்கோ!''

ஜெயராமன் வந்தான். ஆச்சரியம் அவனைத் தாணும் நிறுத்தியது. அவளது கையிலிருந்த காகிதப் பொட்டலத்தில் மூன்று மகளிர் கைக் கடிகாரங்கள் காட்சி தந்தன.

''ஏது இதெல்லாம்?''

''எல்லாம் உங்க போலிச் சரக்கு தந்த பிரசாதம்! என்னேட ஆசை பூர்த்தி ஆயிடுத்து!''

நந்தினியின் மகிழ்ச்சியை ஜெயராமன் ஏற்றுக் கொள்ள வில்லை. எட்டேகால் ரூபாய்க்கு ஈடாக முந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள கடிகாரங்கள் கிடைத்த பெருமை அவனைப் பூரிக்கச் செய்யவில்லை. எவனே ஒருவனிடம் தான் ஏமாந்தது ஒருபுறமிருக்க, யாரோ ஒரு பொருளை மற்றென்றில் மறைத்து, எவருக்கோ அனுப்பி, சரியான அடையாளமின்மையால் அது தன்னிடம் வந்து சேர்ந்தது என்ற கசப்பான உண்மையை அவன் உணரலானுன். ஆனுலும் அது தன்னுடைய அதிர்ஷ்டம் என்று அவன் மனைவி உரிமை கொண்டாடுவது அவனுக்கு வெட்கத்தையும் ஆத்திரத்தையுமே மூட்டியது.

நீண்ட நேர வாதம், ஆலோசனை, காரண ஆராய்ச்சி எல்லாவற்றுக்கும் பின்னர், உடைந்த புட்டி, போலிச் சரக்கு, கடிகாரங்களடங்கிய பொட்டலம் எல்லாவற்றையும், ''பி—3'' காவல் நிலையத்தில் சேர்ப்பித்து, மத்திய வர்க்கத்தின் நாணயத்தை நிலைநிறுத்திக் கொண்டான் ஜெயராமன்.

மூன்று மாதங்கள் உருண்டோடின. இடையே ஒரு நாள் செய்தித் தாள்கள் சென்னையில் நடைபெறும் கடத்தல் நடவடிக்கைகளைப் பற்றியும், சுங்க அதிகாரிகள் எடுத்துவரும் பறிமுதல்களைப் பற்றியும் பத்தி பத்தியாகச் செய்திகளைப் பிரசுரித்தன.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் முக்கியமான போலீஸ் அதிகாரி ஒருவர், ஜெயராமனை நாடி வந்தார். அவன் சாட்சியமாகக் கொடுத்த கடிகாரப் பொட்டலம், 'ரஹிமான் காக்கா' பற்றிய வர்ணனை, அங்க அடையாளங்களே மிகப் பெரிய கள்ளக் கடத்தல் கோஷ்டியை மடக்கித் தண்டிக்க உதவின என்று கூறி, அவனது செய்கையைப் பெரிதும் பாராட்டினுர். அதற்காக அரசாங்கம் பரிசு அளிக்கும் என்றும் அது ஒரு கடிகாரமாக இருக்கும் என்றும் அவர் தெரியப்படுத்தினுர்.

உற்சாகமின்றி அதைக் கேட்டுக் கொண்ட ஜெயராமன் கண்களில் நீர் ததும்ப, வீட்டின் உட்பகுதியை வெறித்து நோக்கினுன். அங்கே அவனது மூன்று, ''ரெண்டுங் கெட்டான்'' சிசுக்களும் கவனிப்பாரின்றி நின்று கொண்டிருந்தன.

''என்ன ஸார், ஒன்றுமே பேசாமல் நிற்கிறீர்களே, என்ன நேர்ந்தது?''

தன் மனைவி இவ்வுலகை விட்டு மறைந்து போய்ப் பதினேந்து நாட்களாயின என்பதைச் சொல்ல முடியாமல் சொன்ன ஜெயராமன், ''காலம் காட்டும் கருவி கேட்டவள் காலத்தையே வென்று விட்டாள்!'' என்றுன்.

''நான் அந்தக் கேட்க மிகவும் வருந்துகிறேன்!'' என்று அதிகாரி ஆங்கிலத்தில் கூறி விட்டுச் சில விநாடிகளில் எழுந்து போனுர்.

கௌதம புத்தர் அடிச்சுவட்டில்

இரண்டாயிரத்துஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் சித்தார்த்தனுகப் பிறந்து, இளம் வயதிலேயே பட்டம் பதவி, மனைவி குழந்தை அரச போகம் எல்லாவற்றையும் துறந்து, கடுந்தவம் இயற்றிப் பிறவிப் பிணி தீர்க்கும் உண்மை வழியைக் கண்டுபிடித்து மக்களுக்கு உபதேசித்து ஒரு புதிய மதத்தையே ஸ்தாபித்துவிட்டுப் பிறகு மகாநிர்வாணம் எய்திய புத்த பகவானுடைய தியாக சரித்திரத்தைத்தான் எழுதியுள்ளார் இந்நூல் ஆசிரியர் திரு சிவபாதசுந்தரம். ஆனல் இதில் புதுமை என்னவெனில் இவர் புத்தரின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல இடங்களுக்கும் நேரில் சென்று ஏற்பட்ட அநுபவங்களோடு இணைத்துப் புத்தரின் வாழ்க்கையைக் கம்பீரமும் இனிமையும் கலந்த நடையில் எழுதி யிருக்கிருர்.

கபிலவஸ்து எங்கே என்று தேடிப் புறப்பட்ட ஆசிரியர், தௌலிவா எனும் கிராமத்தைக் கஷ்டப்பட்டு அடைந்து அந்தக் கிராமமே





எழுத்தில் புதுமை


தான் பழைய கபிலவஸ்து என்று அறிந்து கொள்ளுகிருர். பரபரப்பு, திகில், ஹாஸ்யம் மூன்றையும் கலந்து சுவையாக நூலின் தொடக்கத்தில் எழுதியிருக்கிருர்.

கபிலவஸ்து நகரம் ஏற்பட்ட கதை, சுயம் வரம் போல ஓர் அழகுப் போட்டி, அரச போகத்தைத் துறந்த இரவின் வர்ணனை இவற்றை யெல்லாம் தருகிற நூலாசிரியர், உல்லாசப் பிரயாணமாக வந்த முப்பது வணிக இளைஞர்களுக்கு உபதேசம் செய்து புத்தபிரான் அவர்களைத் தர்ம மார்க்கத்தில் ஈடுபடுத்தியது, தந்தையைச் சந்திக்க நேர்ந்த போது, தகப்பன்சாமி போல அவருக்கே உபதேசம் செய்தது, கணிகை அம்பபாலிகை பலருடைய எதிர்ப்புக்களையும் பாராட்டாமல் புத்தருக்கு விருந்து அளித்துப் பிறகு துறவியானது போன்ற பல கட்டங்களைச் சுவையாக வர்ணித்துள்ளார். சாந்தத்தைப் போதித்த புத்த பகவானின் அஸ்தியை யார் எவ்வளவு எடுத்துக் கொள்வது என்பது பற்றிச் சண்டை மூண்டதையும், அப்போது துரோணர் என்ற அந்தணர் வந்து தகராறை எப்படித் தீர்த்து வைத்தார் என்பதையும் அறிந்து அதிசயிக்கிறோம்.

இந்த நூலின் அழகுக்கு அழகு செய்கின்றன, நடுநடுவே இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள். மொத்தமுள்ள 49 படங்களில் 44 ஆசிரியராலேயே எடுக்கப்பட்டவை. இவை புகைப்படக் கலையில் ஆசிரியருக்குள்ள புலமைக்குச் சான்று பகர்கின்றன. கௌதம புத்தரின் இருவடித் தாமரைகளைக் காட்டும் ஒரு புகைப்படமாவது சேர்க்கப் பட்டிருந்தால் 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' என்ற நூலின் பெயருக்குப் பொருத்தமாக இருந்திருக்கும்! நூலின் அநுபந்தத்தில் கொடுத்துள்ள ஆதார நூல்களின் பட்டியலும், சிறப்புப் பெயர் அகராதியும் வாசகர்களுக்கு மிக்க பயன் தருபவை.

1912ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்து கொழும்பு சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்ற இந்த நூலாசிரியர் திரு சோ. சிவபாதசுந்தரம், 1938 முதல் 1942 வரை 'ஈழகேசரி'யின் ஆசிரியராக இருந்து இலக்கிய சேவை செய்தார். பிறகு 1947 முதல் 1950 வரை லண்டன் பி. பி. ஸி.யில் பணியாற்றிய போது, 1948ல் 'தமிழ் ஓசை'யைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு கிட்டியது,

ரேடியோ சிலோனில் தமிழ்த்துறை அமைப்பாளராகவும், கொழும்பு லீவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் விளம்பர அதிகாரியாகவும் பணியாற்றியிருக்கிறார். 1938—ல் ''கல்கி''யும், ''மாலி''யும் இலங்கையில் செய்த சுற்றுப் பிரயாணத்தை அமைத்துத் தந்து அவர்களுக்கு உறுதுணையாக இருந்து உதவியவர். சமஸ்கிருதம், லத்தீன், சிங்களம் ஆகிய மொழிகளை நன்கு கற்றுத் தேர்ந்தவர். இவருடைய ஒரு நூல் சென்னை அரசினரின் பரிசு பெற்றது. 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் ஆயிரம் ரூபாய் பரிசு அளித்துப் பாராட்டியுள்ளது. நூலாசிரியரைப் பேட்டி கண்டபோது பல சுவையான தகவல்கள் கிடைத்தன.



''எனக்குச் சிறு வயதிலிருந்தே புகைப் படக் கலையிலும், பிரயாணம் செய்வதிலும் நிரம்ப ஆர்வம். இத்துடன் நம் புராதன கலைச் செல்வங்கள் பற்றிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபாடு. கோயில் குளங்களைப் பயபக்தியோடு சென்று பார்க்கும் ஆவலும் உண்டு. இவையெல்லாம் சேர்ந்து அளித்த தூண்டுதல் தான் நான் இந்த நூலை எழுத உதவியது.''

'''கௌதமபுத்தர் அடிச்சுவட்டில்' என்ற பெயரைச் சூட்டக் காரணம் உண்டா?''


''என் நண்பர் ஒருவர், எச். வி. மார்டன் எழுதிய 'இன் தி ஸ்டெப்ஸ் ஆப் தி மாஸ்டர்' என்ற இயேசு கிறிஸ்து பற்றிய புத்தகத்தை என்னிடம் கொடுத்து 'இந்தப் பாணியில் எழுதும் தகுதி உனக்கு இருக்கிறது. நீயும் இத்தகைய நூல் ஒன்றை உருவாக்கலாம்' என்று உற்சாகமூட்டவே, 1948ல் முதன் முதலாக, 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்' என்ற நூலை எழுதினேன். பிறகு அந்த நூலின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்த நூலை எழுதினேன்'' என்றார் திரு சிவபாதசுந்தரம்.

தொடர்ந்து, ''ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் புதிய நூல் எதையாவது எழுத நினைப்பேன். எழுத வேண்டியதைச் சிந்தித்துப் பிறகு தேவையான தகவல்களைச் சேகரித்து வைத்துவிட்டு, என் பிரயாணத்தைத் தொடங்குவேன். நான் ஏற்கனவே கொண்டுள்ள அபிப்பிராயங்கள் என் பிரயாணப் பாதையில் குறுக்கிட்டுத் திசை திருப்பிவிட நான் அனுமதிப்பதில்லை. புதிய கருத்துக்கள் உதிப்பதற்கு யாதொரு தடையும் இருக்கக் கூடாதல்லவா?'' என்றார்.

''இந்த நூலை எப்படி எங்கே எழுதி முடித்தீர்கள் ?''

''சென்னையை விட்டு மதுரையம்பதிக்குச் சென்று ஹோட்டல் அறை ஒன்றில் இந்நூலை எழுதத் தொடங்கியது 1959ம் ஆண்டு சித்ரா பௌர்ணமியன்று. சரியாக ஒரு மாதம் இரவு பகலாக உழைத்து நூலின் கடைசி அத்தியாயத்தை எழுதி முடித்தது, புத்த பகவான் மகா நிர்வாண மடைந்த வைசாக பௌர்ணமி தினம். நூல் வெளி வந்தது 1960ம் ஆண்டு வைசாக பௌர்ணமி நாள்!''

''ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்ற நான், ''இந்த நூல் மூலம் தங்களுக்குக் கிடைத்த ஊதியம் தங்கள் பிர



யாணச் செலவை ஈடுசெய்ததா?'' என்று அவர் தொடாமல் விட்ட புள்ளி விவரம் பற்றிக் கேட்டு வைத்தேன்.

''இருமுறை வடநாட்டில் புத்தர் அடிச்சுவட்டில் பிரயாணம் செய்வதற்காக நான் செலவு செய்தது 7000 ரூபாய். இந்த நூல் மூலம் எனக்குக் கிடைத்த தொகை 2000 ரூபாய்தான் ! லாப நஷ்டக் கணக்கு நீங்களே போட்டுக் கொள்ளுங்கள் !'' என்றார் திரு சோ. சிவபாதசுந்தரம்.

''உங்களுக்கு நஷ்டமிருக்கலாம். ஆனால் தமிழ் இலக்கியத்துக்கு இந்த நூல் ஒரு லாபம்; விலை மதிக்க முடியாத பொக்கிஷம்'' என்று பாராட்டி விடைபெற்றேன். —மகரம்

கிடைக்குமிடம்: அமுத நிலையம், சென்னை - 4. விலை ரூ. 12.

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 35

சித்திரம் பேசியது!

‘அரண்மனையில் இல்லாத பாட்டா? அத்தனை சங்கீத வித்வான்களையும் தாசிகளையும் கொண்டு நிறுத்திவிடுகிறேன்’ என்று சர்க்கரை சொன்னான் அல்லவா?

அதைக் கேட்ட பிரதாப சிம்மர், ‘‘அட பாவி, கெடுத்து விடாதே! அரண்மனைப் பாட்டு அர்த்தமற்ற பாட்டு. அரசனுக்குத் தோடி பிடிக்கும் என்றால் அத்தனை வித்துவான்களும் அதையே பாடுவார்கள். உட்காரும் போதே ஒரு நமஸ்காரம்; நம்மைப் பார்த்து ஒரு சிரிப்பு. அதில் ஒரு கெஞ்சல். பாடும்போதோ பாட்டைப் பார்க்க மாட்டார்கள். நம் தலை ஆடுகிறதா என்றே பார்ப்பார்கள். கொசுவை இரண்டு கையால் தட்டினால் கரகோஷம்னு நினைச்சுக்குவாங்க. உடம்பை உடுப்புக்குள் புதைத்துக் கொண்டு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் தலையை இஷ்டம் போலத் திருப்ப முடியாமல் திண்டாடிப் பாடுவார்கள். துடையிலே தாளம் போடப் பயம்! ‘ராஜாதி ராஜ’ என்ற இடத்தில் தாளத்தை அடித்துப் போட்டால், ‘ஏண்டா, ராஜாவை அடிச்சேன்?’னு டபேதார் கேட்பானோ என்று பயம். அந்தப் பாட்டெல்லாம் சொந்தப் பாட்டல்ல. பிறரைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்த கலையும், பாட்டும், ஆட்டமும். அவை நெட்டிப்பூ மாதிரி தான் இருக்கும். ‘உன் திருப்திக்குப் பாடு. உன் திருப்திக்கு ஆடு. நீ திருப்தி அடைந்தால் உலகமே திருப்தி அடையும்.’ அந்தக் கலைதான் எனக்குப் பிடிக்கும்.

‘‘குயிலினருக்குப் பாடவில்லை. கடை போடவில்லை. ‘தன் ஆனந்தம்’ அதில் இருந்தது. என்னை ஆனந்தப்படுத்தியது. அதிலே சுதந்திரம் இருந்தது. நான் சுதந்திரமாகக் கேட்டேன். இப்போது கூட என் மனம் சுதந்திரத்தை நாடுகிறது. இந்த ராஜாங்கமும், அரண்மனையும் அப்பா அம்மாவுக்குமே இருக்கட்டும். நான் இளைஞன். கலைஞன்.’’

இளவரசரின் பேச்சு சட்டென்று நின்றது. ஒரு நீண்ட பெருமூச்சு வந்தது. ‘‘மற்றப் பிராணிகளுக்கும் மனிதனுக்கும்தான் எத்தனை மாறுதல்கள்! மாட்டை ஒரு தும்பால் கட்டுவார்கள். மனிதன் தன்னைப் பல தும்புகளால் கட்டிக் கொண்டிருக்கிறான். ஔவையார் பன்னிரண்டு தும்புகளால் இட்டுக் கட்டினார். திருவள்ளுவர் நூற்றி முப்பத்து மூன்று தும்புகளால் கட்டினார். அடிக்கடி இதை உடைக்கப் பலர் வருகிறார்கள். மறுபடியும் பிராணியாகி விடுவோம் என்கிறார்கள். ஒரு சிறு மாறுதல்! ஒரு சிறு புரட்சி! சில நாட்களுக்குள் மனிதன் திரும்பவும் மனிதனாகி விடுகிறான். பிறர் வயல், தன் வயல் என்று மாடு பார்ப்பதில்லை. பசித்தால் உள்ளே புகுந்துவிடும். ஆனால் இந்த நாட்டில் மனிதன் எத்தனை பசி வந்தாலும் இன்னொருவர் வயலில் இறங்குவதில்லையே? வரம்பை மீறுவதில்லை. கட்டுப்பாடு, கட்டுப்பாடு! உலகை ஏமாற்றுகிற வேஷம்!’’ என்று. எதையோ எண்ணி அதை வெளியே சொல்லவும் முடியாமல் பிரதாபசிம்மர் ஏங்கினார். அவரது ஏக்கம் நீண்ட பெருமூச்சில் தெரிந்தது.

ஃ ஃ ஃ

பல்லக்கை விட்டு இளவரசர் இறங்கும் போதே, ‘‘வருக! வருக!’’ என்று வரவேற்றார் ரங்கமன்னார். உள்ளே இளவரசரின் வருகைக்காகச் சித்திர சாலைக்குள் எளிய முறையில் மலர்களால் அலங்காரம் செய்திருந்தார்கள். இளவரசருக்கு அவர் அலங்காரம் செய்திருந்த விதம் மிகவும் பிடித்திருந்தது. மலர்கள் எங்கும்தான் மலர்கின்றன! ஆனால் இரண்டு மலர்கள் ஒரு கலைஞன் கையில் அகப்பட்டுவிட்டால் அவை பயன் பெறுகின்றன. இயற்கையின் படைப்பை அவன் நோக்கும் விதமே அலாதியாக இருக்கிறது. மனிதன் முதல் மலர் ஈறாக எதைக் கண்டாலும் அந்தக் கலைஞனின் கண்ணுக்கு அது உயிர் உள்ளதாகவே படுகிறது. வியாபாரி மனிதனைச் சந்தைக் கூடமாக மதிக்கிறான்.

சிப்பாய் மனிதனைக் கொலைப் பொருளாக மதிக்கிறான். அரச வரி கொடுக்கும் இயந்திரமாக மதிக்கிறது. ஆனால் உண்மைக் கலைஞனோ அதில் படைப்பின் விசித்திரத்தைக்காண்கிறான். 'சாதாரணமான பவழமல்லியும், தாமரையும் தான்! இதில் ஒரு சித்திரமோ வந்துவிட்டதே. பச்சை, நீலம் சிவப்பு, மஞ்சள் என்று ஒரு தாமரையில் ஓர் இதழைக்கூட விணாக்காமல் அதைத் தரம் பிரித்துக் கோலம் போட்டிருக்கிறார்' என்று இளவரசர் ரங்கமன்னாரின் கலைத் திறனை வியந்து கொண்டே இருக்கும் போது, ''தங்களை நெடு நேரம் காக்க வைத்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்றார் ரங்கமன்னார். அவர் கைத் தூரிகையில் பிரதாபசிம்மரின் விழிகள் பதிந்தன. ஆம்! அங்கும் அவரும் அப்போது தான் பிரதாபசிம்மரின் முழு அளவு ஓவியத்தை விழி இறந்து முடித்தார்.

''இளவரசே! சித்திரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் ஓவியர் ரங்கமன்னார்.

''என்னைப்போல்தான் இருக்கிறது.''

''அழகாக இருக்கிறதா?''

''அதை நான் எப்படிச் சொல்வது? பார்ப்பவர் கண்களைப் பொறுத்தது படத்தின் அழகு'' என்று சொல்லிவிட்டு வெட்கத்தால் வேறொரு புறம் திரும்பினார் இளவரசர். திரும்பியவுடன், அவர் உடலில் குப்பென்று ஓர் உணர்ச்சி பரவியது. அவர் முகம் திடீரென்று மலர்ந்தது. காலைக் கதிரவன் போல் அவர் முகத்தில் ஒளி வீசியது. வியப்புடன் வைத்த கண்களை வாங்காமல் எதிரில் இருந்த சித்திரத்தையே பார்த்தார்.

அதே முகம்! அதே துடி துடிப்பு! சித்திரம் பேசியது. படம் பாடியது. ஓவியம் ஒளி வீசியது. ஒயிலாட்டம் ஆடியது.

''இளவரசே! அது தங்கள் கவனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அது கற்புக்கரசி சாவித்திரி படம்'' என்றார் ரங்கமன்னார்.

''தெரிகிறது! அருமையான சித்திரம். ஆனால் நான் அந்த முகத்தை.... அந்த முகத்தை.... நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன்'' என்று அதன் அருகில் சென்றார் இளவரசர். ''ஓவியர் மணி அவர்களே! நீங்களும் பிரமனும் ஒன்று ஆகிவிட்டீர்கள். சபாஷ்!''

ரங்கமன்னார் திடுக்கிட்டார். 'குயிலியை இளவரசர் பார்த்திருப்பாரோ?' என்று யோசித்தார்.

''இளவரசே! என்னைப் படைத்த கடவுள் நான் பார்த்து எழுதவும் பல முகங்களைப் படைத்திருக்கிறான். அதில் ஒரு முகம்தான் இது! குயிலி என்று ஒரு பெண்ணை முன் மாதிரியாகக் கொண்டு இதை வரைந்தேன்'' என்றார்.

''அவள் எங்கே? அவளை அழைக்க இயலுமா?'' என்று ஆவலோடு கேட்டார் இளவரசர் பிரதாபசிம்மர். ரங்கமன்னாரின் முகம் மாறியது.

''அது ஒரு பரிதாபக் கதை. அவள் ஒரு நாடோடி. விலைமகள் வீட்டில் பிறந்தவள். அவளை நான் ஒரு சமயம் தற்செயலாகப் பார்த்தேன். ஒரு கணத்தில் என்னையே ஏமாற்றிவிட்



டாள். நான் ஏமாந்தாலும் என் கலையை நம்பினேன். அவளாலேயே நான் ஏமாற்றப்பட்டிருப்பினும் நான் படித்த கோளாறினால் அவளை நம்பினேன். என் மனைவியே தடுத்தும் என் படிப்பை நம்பினேன். அவளை இங்கு அழைத்து வந்து அவளைக் கொண்டு இதை வரைந்தேன்.''

''சொல்லுங்கள்! அவள் எங்கே இப்போது?''

''நாலு நாட்களுக்குமுன் அவளைப் பரிசுகளுடன் வீட்டுக்கு அனுப்பினேன். ஆனால் அவள் வீட்டுக்கும் போகவில்லை. எங்கோ ஓடியிருக்க வேண்டும். அல்லது......?''

''ஏன் தயங்குகிறீர்கள்?''

''அவளை நம்ப முடியாது. இருந்தாலும் தயவுசெய்து வாருங்கள். என் தோட்டத்தைப் பார்க்கலாம். அவள் ஒரு படம் வரைந்தாள். அதில் ஒரு கொடிய முகத்தைக் கண்டேன். 'இது யார்?' என்று கேட்டேன். 'ஒரு நாள் நான் ஆற்றில் அகப்பட்டுக் கொண்டு ஒரு சிப்பாயால் துரத்தப்பட்டேன். அங்கிருந்து கரையேறி ஓர் இடுகாட்டில் படுத்திருந்தேன். அங்கு இவன் என்னைத் தூக்க வந்தான்' என்றாள். பொய்யோ நிசமோ?'' என்றார் ரங்கமன்னார்.


இளவரசருக்கு அது உண்மைதான் என்று தெரியாதா? அன்றுதான் தஞ்சையில் கீழ்வாசலில் தீப்பிடித்தது. அதே நேரத்தில் சுமார் முப்பது குதிரை வீரர்கள் உடையார்பாளையம் காடுகளை நோக்கி ஓடினார்கள். அதில் ஒருவன் பேய்போல் அவளைத் தூக்க வந்தானாம். அவள் அலறியதும் ஓடிவிட்டானாம்.

''எங்கே அந்தப் படம்?'' என்று வேகமாகத் தோட்டத்துக்கு வந்து அந்தச் சித்திரத்தைப் பார்த்தார் இளவரசர். திடுக்கிட்டார். அவர் வாயிலிருந்து, ''கௌமாஜி'' என்ற வார்த்தைகள் வெளிவந்தன.

சுஜானாபாய் அரண்மனையில் உட்பு புளி விவகாரங்களைக் கவனிக்கும் ஆமாஜி அவர்களின் மாமனார்தான் கௌமாஜி. அவருக்கு மந்திரவாதம் தெரியும். பில்லிசூனியங்கள் வைப்பதிலும் எடுப்பதிலும் சிறந்தவர். முடிகயிறு தாயத்து முதலியவை கட்டுவார். இவை தவிர கையில் நிரம்பப் பணம் வைத்திருந்தார். அரண்மனைச் சிப்பந்திகளுக்கும், சில சமயங்களில் ராணிகளுக்கும்கூட அவர் கடன் கொடுப்பார். வட்டி விஷயத்தில் கண்டிப்புக்காரர். ஆனால் முதலைக் கேட்கவேமாட்டார். அவர் முகத்தின் ஜாடை படத்தில் இருக்கவே இளவரசர் விரைந்து வெளியே புறப்பட்டார்.

மாலை இருட்டிய பிறகு கௌமாஜியின் வீட்டின் வாசலில் இளவரசர் பிரதாபசிம்மர் நின்றார்.

கௌமாஜி பதறாமல் வெளியே வந்து, ''வருக! வருக! இந்தக் கிழவன் வீடு தங்கள் வருகையால் புனிதம்



அடைந்தது. இப்போதுதான் காட்டேரி பூசை பண்ணிக் கற்பூரம் காட்டினேன். அப்போதே சுடர் விழுந்தது. ஏதோ நல்ல குறி என்று கண்டேன்'' என்று வரவேற்றார். அவர் முகத்தில் நெற்றியை மறைக்கும் அளவுக்கு உதிர் விபூதியை அள்ளிப் பூசி, அதன் மேல் கீறிச் சந்தனம் இட்டு, குங்குமத்தை அள்ளிப் பொட்டிட்டும் இருந்தார். 'இவர் அரண்மனை உறவினர். அண்ணா பாவா சாகிப்புக்கு மந்திர தந்திரங்களில் உதவி செய்து கொண்டு எப்போதும் சந்தன குங்குமம் தரிப்பவர். அந்த வடுக்கள் இவர் முகத்தில் ஏதாவது இருக்கின்றனவா?' என்று யோசித்தார் இளவரசர்.

''சிறிது தண்ணீர் வேண்டும். தங்கள் பூஜா கிரகம் இருக்கிறதல்லவா உள்ளே?'' என்றார்.

கௌமாஜி உள்ளே போய் ஒரு பெரிய செம்பு நிறையத் தண்ணீர் கொண்டு வந்து இளவரசர் காலில் ஊற்றப் போனார்.

''அபசாரம். தாங்கள் இப்படிச் செய்யலாமா?'' என்று சொல்லிய இளவரசர் பாத்திரத்தைப் பறித்தார். அந்தோ பரிதாபம்! அவர் பறித்த வேகத்தில் செம்புத் தண்ணீர் முழுவதும் கௌமாஜியின் முகத்தில் கொட்டிவிட்டது. இது கண்ட இளவரசர், ''அபசாரம், அபசாரம். மன்னிக்க வேண்டும்'' என்று கௌமாஜியின் முகத்தைத் தமது பட்டு அங்கவஸ்திரத்தால் அழுந்தத் துடைத்தார்.

திருடன் வெளிப்பட்டான்.

அவர் முகத்தில் இருந்த வடுக்கள் தெரிந்தன. அப்போது மறைவிலிருந்த நாலைந்து வீரர்கள் திடீரென்று பாய்ந்து கௌமாஜியைப் பிடித்துக் கொண்டார்கள். சர்க்கரை கௌமாஜியைக் கைது செய்தான்.

ஃ ஃ ஃ

'வரையுலாம் சந்தோடு வந்திழி காவிரி
கரையுலாம் இடுமணல் சூழ்ந்த காட்டுப்பள்ளி
நீரையுலாம் கங்கையும் திங்களும்...'

என்று காவிரி அம்மனுக்குச் சந்தனக் காப்பு சாத்தினார் ஞானசம்பந்தர்.

வரையுலாம் சந்தோடு வந்திழி
காவிரி கரையுலாம் இடுமணல் சூழ்ந்த
காட்டுப்பள்ளி


என்று திருக்காட்டுப் பள்ளியில் வரும்போது காவிரி சந்தனம் பூசிக் கொண்டு வருகிறாளாம். அதுவும் கடையில் வாங்கிய சந்தனமா? அல்ல; மேல் மலையில் விளைந்த சந்தனம். அகில் கட்டை, சந்தனம், ஆனைக் கொம்பு, தேனடை அத்தனையும் அள்ளிக் கொண்டு வருகின்றாள். சம்பந்தர் வாக்கு தெய்வசம்பந்தமுடைய வாக்கு. இசை மணக்கும் தமிழ். ஆதலால் அன்றையதினம் திருக்காட்டுப் பள்ளியிலிருந்து திருவையாறு வரை காவிரி நீர் சந்தனமாகவே ஓடியது. அன்றுதான் திருக்காட்டுப்பள்ளி நாடு, தஞ்சையுடன் சேர்ந்த திருநாடு. திருச்சிக்கும், திருவையாற்றுக்கும் இடையே உள்ள காவிரிக் கரை ஊர்களின் பெருமையை நா விரித்துச் சொல்ல யாரால் முடியும்? ஒழுங்கு முறையை நியமம் என்பர். நியமம் தவறாத மக்கள் நிறைந்த ஊர் ஒன்று காவிரிக் கரையில் உள்ளது. இந்தக் காரணத்தினாலேயே அவ்வூருக்குப் பேர் நியமம் என்றாயிற்று. எத்தனை சிற்றூர்கள்? அத்தனையும் அறிவு மணக்கும் சிற்றூர்கள். எத்தனை அகரங்கள்? அத்தனையும் அறிவின் முதலாகிய அகரங்கள். நியமம் தவறாததால் நியமம், கருவிலே திரு உடையவர்கள் வாழ்வதால் 'திருநயம்'. காவிரிப் புனல் படிந்த கால்களில் பிறகு அதன் மணல் படிந்து இருக்கும் அனுஷ்டான சீலர்கள். நிரம்பியதால் 'மணற்கால்'. மனஉறுதியும், மாவலிமையும் கொண்ட மக்கள் நிரம்பியதால் மாங்குடி. இறைவனை எதிரில் காட்டும் பக்தியைப் போதிக்கும் பள்ளியாக விளங்குவதால் திருக்காட்டுப் பள்ளி என்று அவை பெயர் பெற்றனவோ, அன்று காவிரிக் கரையில் அப்பரும், சம்பந்தரும், ஒருங்கே வந்து நின்றனர். ஒப்பிலாத் தமிழ் பாடிய அப்பரும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய, அல்ல, அல்ல, தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரும், காலடி மணல் பதிய நடந்து நடந்து கவி மழை பொழிந்து பொழிந்து கன்னித் தமிழ் வளர்த்த காவிரியே, உன்னைக் கைகூப்பத்தான் என்னால் முடியும். கையால் எழுதிவிட முடியுமா? நாவுக்கரசர் பேரை நந்தவனத்துக்கும், நன்னீர் குளத்துக்கும், தன் அருமை மகனுக்கும், தண்ணீர்ப் பந்தலுக்கும் சூட்டிய அப்பூதி அடிகள் வாழ்ந்த திங்களூர் அங்குதானே உள்ளது? 'அப்பர் எங்குற்றார்?' என்று அப்பனைத் தேடும் பிள்ளை போல் வினவியது ஆளுடைய பிள்ளை. ''அடியேன் இங்குற்றேன். அடியேன் இங்குற்றேன்'' என்று ஞான சம்பந்தரின் பல்லக்குத் தண்டிகையைத் தேக சம்பந்தம் உடையதாகச் செய்து கொண்டார் திருநாவுக்கரசர் பெருமான். கவிஞர்களுக்கெல்லாம் கவியாகிய வாக்கினிலே

கலியாண விசேஷ விற்பனை!

ஈடு இணையற்ற பட்டுச் சேலை ரகங்களுக்கு

NALLI SILKS'

SILK SAREES




நல்லி சில்க்ஸ்

82, ராயப்பேட்டை ஹை ரோட்

லஸ் · மயிலாப்பூர் · போன் 74862 · சென்னை-4

பின்னி அசல் கிரேப் & ஜியார்ஜெட் சேலைகளும் கிடைக்கும்



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414, மதராஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி பிரகாரமும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சீட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200	ரூ. 5000	D	ரூ. 25	ரூ. 625
B	ரூ. 100	ரூ. 2500	E	ரூ. 20	ரூ. 500
C	ரூ. 50	ரூ. 1250	F	ரூ. 15	ரூ. 375

40 மாதங்கள் — நீண்ட காலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500	ரூ. 20000
LTB	ரூ. 250	ரூ. 10000
LTC	ரூ. 125	ரூ. 5000

சேரும் விருப்பை விவரித்து எங்கள் கிளைகளுக்கு எழுதவும் :

கிளைகள் : புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSK - BBC - 1000 TM - K

ஒவல்டின்

புரதப் பொருள், வைட்டமின்கள், ஃபாஸ்பேட்டைடுகள், எடுகட்டிய புத்தம்புதிய பால், முதிர்ந்த பார்லி மால்ட் ஆகியவை வளப்பமாக அடங்கியது.

உடல்நலமும், வலிமையும், தெம்பும் உருப்பெற இவை யாவும் உங்களுக்குத் தேவை



உடல்நலமும், வலிமையும், தெம்பும் உருப்பெற உங்களுக்கு இன்றியமையாத எல்லா ஊட்டப்பொருள்களும் செறிந்தது ஒவல்டின். பாலுடன் ஒவல்டின் சேர்க்கும்போது, நீங்கள் சேர்ப்பது இன்சுவை மட்டுமல்ல —உடல்நலம், வலிமை, தெம்பு.

அருந்துங்கள்.
இன்சுவைமிக்க **ஒவல்டின்**

இன்றும்.. நாளையும்... என்றும்!





ASP/J1/22/Tam.

[illegible]
[illegible]
[illegible] வோல்டாஸ் லிமிடெட்

இறைவன் கவிநடம் புரியும் நாவுக்கரசர் பல்லக்குச் சுமந்த திருப்பூந்துருத்தி அங்குதானே உள்ளது? இவ்வாறு பல திருப்பதிகள் நிறைந்து திருப்பதிகங்கள் நிறைந்து உள்ள காவிரியின் கரையிலே திருக்காட்டுப் பள்ளி கோட்டையின் மீது அன்று திருச்சிக் கொடியும், தஞ்சைக் கொடியும் சேர்ந்து பறந்தன. காவிரிக் கரையில் தஞ்சை ஓதுவாமூர்த்திகளும் அவரது குழுவினரும் முதலில் தெய்வ வணக்கமாக ஞான சம்பந்தரின் திருக்காட்டுப்பள்ளிப் பதிகத்தை இன்னிசையுடன் ஓதித் திருவிழாவைத் தொடங்கி வைத்தார்கள். துக்கோஜி மன்னரின் தந்தை ஷாஜி மகாராஜா ஒரு வெற்றி விழாவை முன்னிட்டுக் கண்டரமாணிக்கம் என்ற கிராமத்தில் இருந்த நான்மறை உணர்ந்து நூன்முறை நடந்த குடும்பத்தினர் நாற்பதின்மரைத் திருவிசை நல்லூர் கிராமத்தில் காவிரிக் கரையில் குடியேற்றி அவர்களுக்கு இறையிலியாக நிலம் வழங்கி, குறையின்றிக் கலையை வளர்த்தார். அதைப் போலவே துக்கோஜி மன்னரும், மகாதேவ பட்டினத்தில் இருந்த போது அனுமந்தக்குடி போரின் வெற்றியின் காரணமாகத் திருவண்ணாமலையிலிருந்து சில மறையவர்களை வரவழைத்துப் பைஞ்ஞா நாட்டில் குடியேற்றினார். இன்றும் அதை ஒட்டி இவ்விழாவின் காரணமாக அதே கண்டர மாணிக்கத்தில் தர்க்கம் வியாகரணம், மீமாம்சம், சங்கீதம், வான சாஸ்திரம், நாடகம் முதலிய கலைகளின் வல்லுநர்களைத் திருக்காட்டுப் பள்ளிக்கு வரவழைத்துப் பலவான் எறி, விஷ்ணும் பேட்டை முதலிய சிற்றூர்களில் குடியேற்றினார். அவ்வேதியர்கள் தங்கள் கரங்களில் காவிரி நீரை ஏந்தி, கதிரவனை வணங்கி, ''ஆபோவா இதம் சர்வம்'' என்றனர்.

''யாவும் நீரால் வருவதே. வையம் வருவது நீரால். வையம் வாழ்வது நீரால். உயிர் நீரால். அன்னம் நீரால். செல்வம் நீரால். மந்திரம் நீரால். வாக்கு நீரால். இசை நீரால். இயக்கம் நீரால். வானம் நீரால். அமுதம் நீரால். அரசன் நீரால். அனைத்தும் நீரால். ஆகையால் நாங்கள் செய்யும் நற்பணிகள் எல்லாம் நீரால்தான் நடைபெறுகின்றன'' என்றனர். **(தொடரும்)**



ஒரு பிடி மண்!

தம்பி சீனிவாசன்

ஒரு பிடி மண்ணு சொல் - வெறும்
ஒரு பிடி மண்தானு?

புண்ணிய மண் நான் பிறந்த மண் - என்
புனிதம் பெற்றேர் பிறந்த மண் - இம்
மண்ணில் எனது மூத்தோர் பலரும்
மறைந்தனர் - அவர் கரைந்தனர்

கண்ணன்ராமன் நடந்த மண் - அக்
கண்ணன் வாயுள் கிடந்த மண்
வண்ணம் பலவாம் பண்பாடு அவை
வளர்ந்த மண் - அருள் செழித்த மண்

வீரம் தியாகம் விதைத்த மண் - பல
வெற்றி கொத்தாய் விளைந்த மண்
ஈரம் ஈகை எழில் அன்பெல்லாம்
இணைந்த மண்ணே சத்திய மண்!

சற்றும் பார்த்தால் பாரத நாட்டின
சரிதம் காண்போம் மண்ணுள்ளே
உற்றும் பார்த்தால் பிடி மண்ணுள்ளே
உணர்வோம் பாரத தேசத்தை

நிறைந்த மண் உயிர் நிறைந்த மண் பயன்
நிச்சயம் உழைப்புக் குகந்த மண்
பிறந்த மண் புகழ் சிறந்த மண் - நாம்
பெருமை கொள்ளும் இத் திரு மண்

ஒரு பிடி மண்ணு சொல் - வெறும்
ஒரு பிடி மண்தானு?

தமிழ்ப் படத்திற்குத் தங்கப்பதக்கம்



தமிழ்ப் படத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைக்குமா?

திரு ஏ. பி. நாகராஜன் அவர்கள் திருவிளையாடல், வீர பாண்டிய கட்டபொம்மன் போன்ற சில படங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கிடைத்ததோ ஏமாற்றம். திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன் படமான ''என்ன தான் முடிவு''க்குப் பரிசை எதிர்பார்த்தோம். கிடைக்கவில்லை. பரிசு பெறாததால் படத்தைத் தயாரித்தவரும் ஒரு வழக்குப் போட்டுப் பிறகு வாபஸ் வாங்கிக் கொண்டார்.

பொறுமையின் உருவம் தமிழன். இவ்வளவு நாட்கள் பொறுத்திருந்தோம். இந்த ஆண்டு 'சன்பீம்'ஸாரின் 'ஆலயம்' படத்தை ஜனாதிபதியின் பரிசுக்கு அனுப்ப வேண்டுகிறேன். கடமையிலிருந்து தவறாத ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் ஒரு நாள் வாழ்க்கையை இயற்கையாகச் சித்திரித்துள்ள ஓர் ஒப்புயர்வற்ற படம் ஆலயம். (புகைப்படம்) இதற்கும் பரிசு கிடைக்கவில்லை எனில் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் இனி தமிழ்ப் படத்தை ஜனாதிபதி பரிசுக்கே அனுப்ப வேண்டாம்!

சென்னை—1
2—8—68 டி. வி. ராதாகிருஷ்ணன்

மில்டனின் கூற்று!

ஆண்டுமலர் கிடைக்கப்பெற்றேன். படித்துப் பார்த்தபோது வால்ட் விட்மன் எழுதிய ஒரு வாசகம் — ''இதைத் தொடுகிறவர் மனிதனை உணர்கிறார்'' — ஞாபகத்தில் வந்து நின்றது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் ராமாயண காலத்து ஹனுமானிலிருந்து இன்றைய மணியம்மாள்வரை இந்தக் கல்கி இதழில் சந்தித்தேன். 'மகரிஷி' எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்! சரளமான நடை, எளிமையான, ஜாலமில்லாத எழுத்து. அற்புதமான கதை. 'பொன்னியின் செல்வன்' முதல் அத்தியாயமே சொல்லுக்கு அடங்காத படைப்பு. 'ஐயோ, இந்த கைய அற்புதக் கதையைப் படைத்த கை இன்றில்லையே' என்று மனம் உருகுகிறது. 'திறமை சொர்க்கத்தை விரைவாகக் கவர்ந்துவிடுகிறது' என்றுதான் எவ்வளவு அழகாக மில்டன் சொல்லியிருக்கிறான்! வாண்டுமாமாவின் கதை ஒன்றுதான் பாக்கி. அதைப் படிக்க விடாமல் என் தங்கை 'கல்கி'யை வைத்துக் கொண்டு அதிலேயே ஆழ்ந்திருக்கிறாள்.

மதுரை—3
1—8—68 மைத்ரேயி நடராஜன்

அபாரப் பொருத்தம்!

பத்துக்காரணங்களைக் கொடுத்துள்ளீர்கள். இதோ பதினோராவது காரணம்:

பொன்னியின் செல்வனுக்குப் பத்தாவது நூற்றாண்டுவிழா கருதித்தான் ''பொன்னியின் செல்வனை''த் தாங்கள் வெளியிடுகிறீர்களென நினைக்கிறேன். ஆசிரியர் கல்கி தமது முன் இரு வாக்கியங்களில் கூறியிருப்பதைக் கவனியுங்கள். 1950 அக்டோபர் 29ந் தேதி முதல் முதல் இந்தக் கதை தொடங்கியபோது ''தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்'' கதை நிகழ்ந்துள்ளது. இன்று, பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சரியாக ஆயிரம் வருஷம் ஆன வரலாறு இது. இந்த ஒரு காரணத்துக்கே தாங்கள் இந்தத் தொடர் கதையை மீண்டும் வெளியிடுவது பொருத்தம். முதல் அத்தியாயம் ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் கிடைத்ததும் பொருத்தமே.

சென்னை
2—8—68 டி. எஸ். வி.

மெட்ராஸ் பாஷை வேண்டாம்!

தமிழ்ப் படங்களில் ''மெட்ராஸ் பாஷை''யைப் புகுத்துவதை நிறுத்த வேண்டும் என்றதற்குத் திரு சோ பெர்னார்ட் ஷா போன்றவர்கள்கூடக் கொச்சைப் பேச்சுக்களைப் புகுத்தி உள்ளதாகக் கூறியிருக்கிறார்.

ஷா ஆங்கிலம் பேசும் யாவரும் திருத்தமாகப் பேச வேண்டும் என விரும்பினார். கொச்சை மொழி பேசுபவரை வெறுத்தார். இக்கருத்தை வலியுறுத்தவே, மொழி உச்சரிப்பு வல்லுநரைக் கதாநாயகனாகவும் கொச்சைமொழி பேசும் தாழ்ந்த பிரிவைச் சேர்ந்த பெண்ணைக் கதாநாயகியாகவும் வைத்து பிக்மேலியான் என்ற நாடகத்தை எழுதினார். அவர், தம் நாடகங்களில் கொச்சை மொழியை உபயோகித்ததன் நோக்கம் மொழி திருத்தமடைய வேண்டும் என்பதற்குத்தான்!

குலசேகரப்பட்டினம்
28—7—68 சிவ. பழநிகுமரன்

அறைக்குள் வந்துவிட்டாள் அவள். மேல் மூச்சு வாங்கிற்று. புடவையும், தலையும் நனைந்து ஊறிப்போன ஈரம் கசகசத்தது. கதவை அவசரமாய் மூடி அடைத்தாள். தனக்கென்று ஏற்பட்ட அந்தப் புழுக்கமும் நெரிசலும் கூடிய அறைக்குள், தன்னுடைய தனிமையை உணர்ந்து, ஒரு முறை நெட்டுயிர்த்துப் படபடப்பிலிருந்து விடுபட முயலும்போது அந்த வார்த்தைகள் நெஞ்சில் குறுகுறுப்போடு நெளிந்தன.

''நீ....நீ...''

''உக்கும், எனக்கென்ன?''

கொடியிலிருந்து உலர்ந்த புடவையை உருவினாள். ஆனால் உடனே அந்த அவசரங்கூட மறந்து போயிற்று. தன்னையும் மறந்து போய்விட்டாள்.

மழை இரைச்சலுக்கிடையே குனிந்து அவளுக்கருகில் தலையை நீட்டியபடியே காரின்



கதவைத் திறந்து விட்டுக் கொண்டே அவன் சொன்னான்.

'நீ'—

நானா?

என்னைப் பார்த்தா அப்படிச் சொன்னான்? நிஜந்தானா, இல்லை நானே கற்பனை பண்ணிக் கொண்டேனா?

இல்லை, நிச்சயமாய் அது நிஜந்தான். இந்த ஈரம், கசகசப்பு எல்லாம் நிஜந்தானே?— உலர்ந்த புடவையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு நின்றாள். உடம்பெல்லாம் கதகதப்பாய்ப் பரவிக் கொண்டே வந்தது.

எப்படியோ அந்தப் பிரவாகத்திலிருந்து விடுபட்டு, உடை மாற்றிக் கொண்டு தலையைத் தளர முடிந்து, அலமாரியில் கிடக்கும் சின்னக் கண்ணாடியைத் தேடினாள். நடு விரலில் குங்குமத்தைத் தேக்கிக் கொண்டு தன் பிரதிபிம்பத்தைப் பார்க்க நேரிட்டபோது—

'நீ அழகாய்த்தான் இருக்கே!'

'என்னையா சொல்லறே?' —அவள் சிரித்தாள். ஏன் இந்த அர்த்தம் இல்லாத—இல்லாவிட்டால் தேவையில்லாத — விஷயத்தைப் பேசுகிறாய் என்று கேட்டாள்.

கோபி அந்தக் கேள்வியை அலட்சியமாய் ஒதுக்கி விடவில்லை.

'உன்னையேதான் சொல்கிறேன். உன்னோட முக அமைப்பிலே அழகின் அற்புதம் கலந்திருக்கு. கையில், இந்த நீண்ட விரல்களில் தனியாய் ஒரு நளினம்...'

வெளியே இன்னமும் மழை பெருந் தாற்றலாய் வீசி அடித்துக் கொண்டிருந்தது. அவள், 'நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன்' என்று பிடிவாதமாய்ச் சொல்லி விட்டாள். கோபிக்கு அவளை நன்றாய்த் தெரியும். அவளுடைய பிடிவாதத்தையும் அவன் நன்றாய் உணர்ந்திருந்தான். அதனால் அவள் குடியிருக்கிற அந்தச் சந்து தெருவில் அவன் காரைத் திருப்பவில்லை. பின்புறம் திரும்பி, அவளுக்காகக் கதவைத் திறக்கும்போது

அவன் பார்வை அவளை மிகவும் நெருங்கி வந்தது. அப்போதுதான் அவன் அதைச் சொன்னான்.

'கோபி! என்னைப் பார்த்து ஒருத்தன் அழகே இல்லை என்று அஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே சொல்லிவிட்டுப் போய்விட்டான்' என்று சொல்லிவிட அவள் நினைத்தாள். ஆனால் சொல்லவில்லை. 'ஒருத்தன்' என்று நினைத்ததைப் பற்றி அவள் தனக்குள் விநாடி நேரம் திகைப்பும் பரபரப்பும் அடைந்தாள். இப்பொழுது நிதானமாய்ச் சிந்திக்கும்போது, 'ஒருத்தன்' என்பதற்கு மேல் எந்த மரியாதையும் ஒட்டிக் கொண்டிருப்பதாய்த் தெரியவில்லை. அந்த ஒருத்தன் — அவளுக்குத் தாலி கட்டிய உரிமையைப் பெற்ற அவன்— ஐந்து வருஷங்களுக்கு முன்னாலேயே ஓடிப் போய் விட்டான்.

வருஷக் கணக்காய் வேதனையால் வதைபட்ட நெஞ்சைத் தாங்கிக் கொண்டிருக்கும் உடம்பு. பொழுதுவிடியும்போதே தொடங்கிச் சமையலறையில் அடுப்படியில் வேலை செய்யும் கைகள். இன்னும் என்ன மிச்சம் இருக்கிறது அவளிடம், அழகு என்று சொல்லிக் கொள்ள? ஆனாலும் நெஞ்சில் சிலிர்ப்பாய் அலையோடுகிறது.

கோபி பொய் சொல்ல மாட்டான்.

நான்...நான்...

வழக்கமாய்ச் சாயங்காலம் திரும்பி வந்ததும் அவள் முதல் காரியமாய்க் காப்பி போடுவாள். சுடச் சுட ஒரு தம்ளர் குடிக்கும்போதே அவள் களைப்பையும் அலுப்பையும் உதறிவிட்டு நிம்மதி அடைந்து விடுவாள்.



நான் அழகாய் இருக்கிறேன்!

கு. வேங்கடரமணி

சிறப்புச் சிறுகதை

அந்த ஒரு வேளையின் சில விநாடி நிம்மதிதான் அவளுக்கு. அதற்கு மேல் ஆசைப்பட, கற்பனை செய்து கொள்ள முயன்றதே இல்லை; உண்மையில் அவைகளுக்கெல்லாம் ஆதாரமும் எதுவும் இல்லை. போனதைப் பற்றிய ஞாபகங்களை யெல்லாம் துடைத்து எறிந்தாகி விட்டது. இனிமேல் வரப்போகிறது என்று எதுவும் இல்லை என்று மனசை அடக்கிக் கொண்டாகி விட்டது.

அப்புறம் என்ன?

அந்த விநாடிகள்தான் நிம்மதியானவை. அதற்காகவே அவன் ஒரு ஹோட்டலில் மாவும் சட்னியுமாக அரைத்தாள். யாரோ ஒருத்தர் வீட்டில் சமையல்காரியாய்க் களைத்துச் சலித்துப்போனாள். அந்த விநாடிகள்! அவை போதும். அவைகளுக்காகவே வாழ்வைத் தேய்த்துக் கொண்டு, நினைப்பற்ற நிச்சலனமான அந்த விநாடிகளிலேயே வாழ்ந்து—அல்லது வாழ்வதாய்ப் பிரமை கொண்டு ஏமாற்றம் அடைந்து திருப்திப்பட்டுக் கொள்கிறாள்.

அவள் வேறே என்னதான் செய்ய முடியும்?

ஆனால் இன்று அவள் அடுப்படிக்கே போகவில்லை. புடவைத் தலைப்பை விரித்துச் சுவர் ஓரமாய்ப் படுத்துக் கொண்டாள் அவள். உடம்பெல்லாம் கோபியின் அந்தப் பேச்சின் நினைப்பிலேயே கதகதப்பாய் இருந்தது. உள்ளே — அவள் நீண்ட நாட்களாய் எட்டிப் பார்க்காத இதய அந்தரங்கத்திலே — நெருப்பாய்ச் சுரீரிட்டது.

மறுபடியும் அந்தப் பழைய சின்னக் கண்ணாடியை எடுத்துத் தன்னையே பார்த்துக் கொள்ளலாமா என்ற ஆசை மெள்ள எட்டிப் பார்த்தது.

அவளை அழகற்றவள் என்றும் சொல்லி விட முடியாது. பதினெட்டு வயதில் அவளும் யௌவனத்தை எட்டிப் பிடித்தவள்தான். அப்போதுதான் அவளுக்குக் கல்யாணமாயிற்று. கல்யாணம் அவளைப் புதிய இடத்தில் கொண்டு நிறுத்திவிட்டது. அவன்—அவளுடைய அந்த 'எவனோ ஒருத்தன்'—அவளைத் திரும்பியே பார்க்கவில்லை. அதனால் இப்போதும், இந்த ஐந்து வருஷங்களுக்குப் பிறகும், அவள் பதினெட்டு வயதுப் பெண்ணாய்—வெறும் பெண்ணாய்த்தான் — நிற்கிறாள்.

நம்பிக்கையும், கற்பனைகளுமாய் அவள் அந்த நாளில் இங்கே வரவில்லை. கொஞ்சமாவது ஆறுதல் கிடைக்கும் என்று அவள் எதிர்பார்த்தாள். மாமாவுக்குச் சுமையாய் வளர்ந்து நின்றாள் அவள். மாமா ஓட்டலில் வேலை பார்க்கும் ஒரு பையனைத் தேடிப் பிடித்தார். பையனுக்கு அம்மா மட்டும் தான் இருந்தாள். மாமா அவளை அம்மாவும் பிள்ளையுமாய்க் குடும்பம் நடத்தின இந்த ஒற்றை அறைக்குள் மூன்றாவது பேர்வழியாய்க் கொண்டு வந்து சேர்த்துவிட்டு, அவளுக்கு ஒரு வழியைக் காட்டிவிட்ட திருப்தியோடு போய்விட்டார். இதுதான் அவளுடைய கல்யாணம் — ஒரு கோவிலில் அவசரமாய் நடந்து முடிந்த ஏற்பாடு.

'அவர் சிவப்பாய், வெட வெடவென்று நல்ல உயரமாய், அழகாய்த்தான் இருக்கிறார்' அவள் முதல் தடவை அவனைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் பிரமித்துப் பூரித்துப் போனாள். அவளுடைய வாழ்க்கையே அந்த ஒரு நிமிஷந்தானோ?

அவன் எப்போதாவது வருவான். சில சமயம் அம்மா இருக்க மாட்டாள். அவனை மட்டும் நம்பி நடத்த முடியாத குடும்பத்தை அவன் அம்மாவும் இரண்டு வீடுகளில் சமையல் வேலை செய்து நகர்த்திக் கொண்டிருந்தாள். அம்மா இல்லாத நேரத்தில் அவள் ஒருத்தி இருப்பதாகவே அவன் நினைத்ததில்லை.

ஒரு நாள்.

''அம்மா! அம்மா!'' என்று அவசரமாய் வந்தான் அவன்.

அவள் ஓடிப்போய்ச் செம்பில் தண்ணீர் எடுத்து வைத்தாள். அவள் திரும்புவதற்குள் தடதடவென்று அதைக் கீழே கொட்டினான் அவன்.

அவளுக்கு வயிற்றில் 'பகீ'ரென்றது.

அவன் அவளைத் திரும்பியே பார்க்கவில்லை. சட்டையை மாட்டிக் கொண்டு மறுபடியும் வெளியே புறப்பட்டு விட்டான்.

ஒதுங்கி நின்ற அவள் துடித்தாள்.

''சமையல் ஆகிவிட்டது. சாப்பிட்டு விட்டுப் போகலாமே?'' என்று எப்படியோ பேசிவிட்டாள்.

''உம்... என்ன சொன்னே?''

பதில் எதுவும் சொல்லத் தோன்றவில்லை அவளுக்கு. ஆனால் மெதுவாய் நிமிர்ந்து பார்த்தாள்.

இந்த முகத்தைப் பார்த்தா அவள் அழகென்று மயங்கிப் போனாள்? அவன் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, மரவட்டையைப் பார்க்கிற மாதிரி அருவருப்போடு அவள் பக்கம் ஒரு பார்வையைச் சிந்தினான்.

''உன்னோட அவலட்சண முகத்தோட எனக்குச் சாப்பாடு வேறே போடணும் என்று ஆசைப்படுகிறாயா?''

சுவரோடு ஒட்டிக் கொண்டு அவள் விம்மினாள்.

''சீ அழாதே! நீ இருக்கிற லட்சணத்துக்கு அது ஒண்ணுதான் குறைச்சல். அம்மா உன்னைப் பார்த்து என் தலையிலே கட்டிவிட்டாள். அம்மாவுக்குத் துணையாய் இரு. அது போதும்.''


அவ்வளவுதானா? தன்னுடைய ஏமாற்றத்துக்கெல்லாம் சேர்த்து ஒரேயடியாய் அழுது தீர்த்துவிட வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. ஆனால் அவனுக்கு எதிரில் அழுது கொண்டு நிற்கவும் அவள் விரும்பவில்லை.

அவள் தினம் தன்னுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். சுவரில் அவன் கொண்டு வந்து மாட்டியிருந்த 'காலண்டர் பெண்களின்' உருவத்தையும், தன்னையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள். கண்ணாடி அவளுக்கு இருந்த அழகைக் குறைத்துக் காட்டவில்லை. ஆனால் அவன் நினைத்துக் கொண்டு பார்க்கும் அழகு தன்னிடம் இல்லை என்ற முடிவுக்கு வந்த பிறகு, அவளுக்கு எல்லாவற்றிலும் பிடிப்பு விட்டுப் போயிற்று.

அப்புறம் மூன்று வருஷங்கள் ஓடிப்போனதில் — நாட்கள் ஒவ்வொன்றாய்ச் சூன்யமாய் வந்துவிட்டுப் போனதில் — அவள் மனம் அடங்கி ஓய்ந்து போய்விட்டது. எதையாவது எதிர் பார்க்கிறபோதுதானே ஏமாற்றம்

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச்சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

P-6986


இன்னுமொரு புதுப் புடவை உடுத்திக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே. நானும் என் கணவரிடம் புதுப் புடவை ஒன்று வாங்கித் தரச் சொல்லி எவ்வளவு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!
பிரஸ்டிஜ் உபயோகிப்பதனால் மிச்சமாகும் வீட்டுச செலவுப் பணத்திலிருந்து நானே சுயமாக வாங்கியவைதான் இவை!
Prestige
Prestige
பிரஸ்டிஜ் எல்லா வகையான, சைவ, அசைவ உணவுகளையும் தயாரிக்க உதவுகிறது.
பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கரில் சமைப்பதினால், உங்கள் எரி பொருள் செலவில் 80% மிச்சமாகிறது; ஊட்டமுள்ள உணவு கிடைக்கிறது; சமையல் நேரம் பாதியாகக் குறைகிறது மேலும், நீராவியில் தயாராகும் சமையல் ஆரோக்கியமான சமையல்! பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கர் வாங்குங்கள்: குடும்பத்தின் அளவுக்கேற்றபடி தேர்ந்தெடுக்க 15 மாடல்கள் உள்ளன.
தயாரிப்பாளர்கள்:
டி.டி. (ப்ரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16.
PREETT ப்ரீத் பாத்திரங்கள் உங்கள் சமையலறைப் பொக்கிஷம்

அதன் முடிவாய்க் காத்துக் கொண்டிருக்கப் போகிறது!

கடைசியில் ஒரு நாள் அவனுடைய அம்மாவும் தன் வாழ்வை முடித்துக்கொண்டு போய்விட்டாள். அவன் அதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தான் போலிருக்கிறது. ஒரு மாதம் அப்படியும் இப்படியுமாய் வந்து எட்டிப் பார்த்தவன், பிறகு ஒரேயடியாய் எங்கோ போய்விட்டான்.

இத்தனை நாட்களும் யாருக்காகவோ வாழ்வதாய்ப் பிரமை கொண்டிருந்த அவள் தெளிவு கொண்டு விழித்துக் கொண்டாள். தனக்காகவே வாழ வேண்டிய அவசியம் அவளை ஆட்கொண்டது.

மறுபடியும் கோபியைச் சந்திப்போம் என்று அவள் நினைக்கவே யில்லை.

உடலை வேக வைக்கும் வெய்யிலில் அவள் சாலையோடு நடந்து கொண்டிருந்தாள். எதிரே காரில் வந்து கொண்டிருந்த கோபி அவள் பக்கத்தில் வந்து நிறுத்தி இரண்டு தடவைகள் அழைத்த பிறகு கூட அவளால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

''என்னை ஒரேயடியாய் மறந்து போச்சா?''

ஒரு விநாடி திணறிப் போனாள் அவள். கோபியா இவன்? எப்படி வளர்ந்துவிட்டான்! ஊரில் வேண்டுமென்றே அவளிடம் பேச்சுக் கொடுத்து ஓட வைப்பானே?

நினைப்புக்கள் குமிழியிட்டுக் கொண்டு வந்தன. அவனைக் கண்டு ஓடிய பயம், அவள் தனியாய் இருக்கும்போது அவளையே சுற்றிச் சுற்றி வருகிறானே என்ற ஆத்திரமும் அழுகையும், அவன் மேல் ஏற்பட்ட வெறுப்பையும் மீறிக் கொண்டு ஒவ்வொரு சமயம் அவனைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று தோன்றும் ஆசையைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டது.

''என் மானத்தைக் கெடுத்துவிடாதேடீ'' என்று அவளுடைய மாமாவே ஒரு தடவை சத்தம் போட்டார்.

என்ன செய்வது? கோபி வசதியான குடும்பத்துப் பையன். அவளுக்கு ஆத்திரம் வேதனையாய் மாறி நெஞ்சை அடைத்துக் கொண்டது. வீட்டுக்குள்ளேயே நாள் கணக்காய்க் கிடந்து புழுங்கினாள்.

கோபியைப் பிறகு பல தடவைகள் சந்தித்து விட்டாள். 'இன்னமும் என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைகூட உனக்கு இருக்கிறதா கோபி?' என்று அவனிடம் கேட்க வேண்டும் என்ற ஒரு நினைப்பு அவளுக்குத் தோன்றியது. அடுத்த தடவை அவனைச் சந்திக்கும்போது கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வாள். ஆனால் அவனைப் பார்க்கும்போது அது மறந்துபோய் விடும். அல்லது அது ஓர் அர்த்தமில்லாத கேள்வி என்று பேசாமல் இருந்துவிடுவாள்.

எப்படியோ அவள் காதுகளில் ஓயாமல் ஒலிக்கும் வார்த்தைகளை, அவளைச் சுற்றிலும் மிதக்க விட்டு விட்டான் கோபி.

'நீ அழகாய்த்தான் இருக்கே!'

வேலைச் சுமையை நினைத்துக் கொண்டே எழுந்திருக்கும் காலை வேளையிலும் ஓய்வே இல்லாத பகல் முழுதும் அலுப்பாய் வந்து படுக்கும் மாலைப் பொழுதிலும் இதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள். இதன் அர்த்தத்தையேதான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். தானே தனக்கு ஒரு புதுமையாய்த் தோன்றுவது போலிருந்தது அவளுக்கு.

ஏழெட்டு நாட்கள் எப்படியோ நகர்ந்து கொண்டிருந்தன.

தினமும் சுடச் சுட ஒரு வாய் காப்பியைக் குடித்துவிட்டுப் படுத்ததும் உடம்பெல்லாம் பரவித் தன்னையே மறக்கச் செய்யுமே அந்த நிம்மதி வரவேயில்லை.

அன்றைக்கு ஏன் மழை வந்தது? ஏன் கோபி வந்து கூப்பிட்டதும் அவள் காரில் ஏறிக் கொண்டாள்? கடைசியில் தெரு முனையில் அவளை இறக்கி விடும் நேரத்தில் ஏன் அந்தச் சேதியைச் சொன்னான்?

நான் அழகாய் இருக்கிறேனாமே!

மறுபடியும் ஒரு நாள் அவள் வரும் வழியில் அவள் திரும்பி வருகிற நேரத்தில் கோபியின் கார் காத்துக் கொண்டிருந்தது.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு விட்டனர். வேண்டாம் என்று பார்க்காத மாதிரிப் போய்விட அவளுக்கு வழியில்லை. ''வாயேன்'' என்றான் அவன் கதவைத் திறந்து விட்டுக் கொண்டே.

''இல்லை, கோபி! நான் பஸ்ஸில் போய் விடுவேன்.''

''உன்னிடம் ஒரு சேதி சொல்ல வேண்டுமே!''

''அதுதான் அன்னிக்குச் சொன்னியே, கோபி?''

''என்ன சொன்னேன்?''

நடு வழியில் இதற்கு மேல் பேசிக்கொண்டு எப்படி நிற்க முடியும்?

அவள் காரில் ஏறிக் கொண்டாள். கார் எங்கோ புதிய பாதையில் போய்க் கொண்டிருந்தது.

''காப்பி சாப்பிடுவோமே?'' என்று கேட்டான் கோபி.

அவள் மறுக்கவில்லை.

ஹோட்டலுக்குள் இருவரும் நுழைந்தார்கள். சுவரில் பெரிய நிலைக்கண்ணாடியைத் தாண்டும்போது அவள் தன்னை அதில் பார்த்துக் கொண்டாள். எதிர்பாராத அந்த இரண்டு மூன்று விநாடிகளில் அவளுக்கு மூச்சை அடைத்தது. கசங்கிப்போன பழைய புடவை. சாயம் விட்டு வெளுத்த ஜாக்கெட். அவளே வாடிப்போயிருந்தாள்.

தனி அறையின் குளிர்ச்சிக்குள் போய் உட்கார்ந்தாள். ஆனால் அவளுக்கு இன்னமும் வெப்பம் தணியவில்லை.

'நான் இப்படியா இருக்கிறேன்?'

''என்ன சாப்பிடுகிறே?'' என்றான் கோபி.

''சூடாய் ஒரு வாய் காப்பி.''

டிகாலின் மூக்கு உடையும்!

பிரபல பிரஞ்சு பத்திரிகையொன்று அண்மையில் ஒரு புதுமையான விளம்பர உத்தியைக் கையாண்டிருந்தது : ''உங்களுக்கு அரியதோர் வாய்ப்பு. இன்று டிகாலின் பேச்சு இல்லாமல் வெளிவந்துள்ள பத்திரிகை இது ஒன்றுதான்!''

தகவல் : கற்பூரம்

அவனுக்கு அதுதானே பழக்கம்? வீட்டுக்குப் போனதும் முதலில் அதைத்தானே அவள் குடிப்பாள்?

காப்பி கொண்டு வரச் சொல்லிவிட்டு அவள் பக்கம் திரும்பினான் கோபி.

"சீக்கிரம் சொல்லேன் கோபி." அவனுக்கு உடனே தன் இடத்துக்கு — அந்தத் தனிமைக்கு — ஓடிவிடலாம் என்றுதான் தோன்றியது.

"ஒரு வாரமாய் உன்னிடம் சொல்லவேண்டும் என்றுதான் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீ என்ன சொல்லுவாயோ என்ற தயக்கம்."

"விவரமாய்ச் சொன்னால்தானே?" இன்னமும் அவளுக்கு அவசரம்.

'...நீ அழகாய் இருக்கே, ஏன் இப்படிக் கஷ்டப்படணும்? என்னோடு வந்துவிடு. எங்கேயாவது போய்விடலாம்...'

இந்த மாதிரி ஏதாவது சொல்லப் போகிறானோ?

"என் சிநேகிதன் ஒருத்தன் புது மாதிரியாய் ஒரு சினிமா எடுக்கப் போகிறான். நான்தான் பணம் கொடுக்கிறேன்."

"உம்."

"அந்தக் கதையிலே உன் மாதிரியே ஒரு பெண்."

"அதுக்காக?"

"அதில் நீ நடிக்கணும் என்று எனக்கு ஆசை."

"எனக்கு அதெல்லாம் வருமா? நான் ரொம்பச் சாதாரணமானவள். சினிமாவிலே நடிக்க முதலில் அழகா இருக்கணுமே?"

"அதுதான் சொன்னேனே! நீ அழகாய்த்தான் இருக்கே. உன் அழகு உனக்கு எப்படித் தெரியும்? பார்க்கிறவர்களுக்குத்தானே தெரியும்?"

"நானா?"

அவள் யோசித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

"அவசரமில்லை. இன்னும் ஒரு வாரம் போகட்டும். நான்கூட உன்னை வந்து பார்க்கவில்லை. உனக்குச் சம்மதமானால் நீயே வந்து சொல்லு."

காரில் திரும்பி வந்து தெரு முனையில் இறங்கும்போது கோபி ஒரு பையைத் தூக்கிக் கொடுத்தான்.

"இது என்ன?"

"போய் நீயே பார்த்துக் கொள்ளேன்."

அவன் போய்விட்டான்.

உடம்பில் இன்றைக்குக் களைப்பே இல்லை. ஆனால் மனம் ஒரேயடியாய்ச் சோம்பிப் போயிருந்தது. அறைக்குள் வந்து தலைப்பை விரித்துச் சுவர் ஓரமாய்ப் படுத்தாள்.

எல்லாம் பொய் போலிருந்தது. கோபி சினிமா, நடிப்பு என்று சொன்னதெல்லாம் பொய். தன்னோடு பேசவும் பழகவும் இப்படியெல்லாம் சொல்லுகிறான்.

'நான் அப்படி அழகாகவா இருக்கிறேன்?'

அவள் புரண்டு புரண்டு படுத்தாள். ஆசையும் ஏமாற்றமும் மாறி மாறி வந்தன. ஒரு காலத்தில் அவளுடைய அலுப்புக்கெல்லாம் ஆறுதலாய் இருந்த சுவர் ஓரம் இப்போது உடம்பெல்லாம் வேதனையாய் உறுத்துகிறது.

'நான் ஏன் அழகாய் இருக்கக் கூடாது?'

தூக்கம் வராமலே அந்த இரவு கழிந்தது.

எழுந்ததும் முதலில் அந்தப் பைதான் கண்ணில் பட்டது. நேற்று மாலையில் கோபி கொடுத்த பை. அவசரமாய்க் கீழே கவிழ்த்தாள். ஒரு துணிப் பொட்டலம். இன்னும் விதவிதமாய் அழகுப் பொருள்கள்.

அவள் ஆசையிலும் கற்பனையிலும் புதிய வழியைப் பிரித்து விடும் வெளிர் நீலப் புடவை.

பிரமிப்பாய் இருந்தது அவளுக்கு. உள்ளம் படபடத்தது. வெகு நேரம் செயலற்று உட்கார்ந்திருந்தாள். 'வெளியே போக வேண்டும்; கோபியைப் பார்க்க வேண்டும்' என்ற ஞாபகம் வந்ததும் விடுபட்டு எழுந்தாள்.

அலமாரியில் கிடந்த சின்னஞ் சிறிய கண்ணாடியை எடுத்துப் பார்த்துக் கொள்ளும்போது, புதுப் புடவை, புதிய அனுபவம் போல் அவள் உடலைத் தழுவிக் கொண்டிருந்தது. சுற்றிலும் அவளையே மயங்க வைக்கும் மணம்.

'நானும் அழகாய்த்தான் இருக்கேன்.'

'இப்படியே புறப்பட்டுப் போனால் எல்லாரும் அவளை ஒரு மாதிரியாய்ப் பார்ப்பார்கள். பார்க்கட்டுமே!'

அவள் அந்தக் கடைசி அறையை விட்டு வெளியே வந்து, தெருவுக்கும் வந்து விட்டாள். வாசலில் வாடகைக் கார் ஒன்று வந்து நின்றது.

அவளுடைய பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டு அப்படியே நின்றாள்.

யார்?

அவன் — அவள் கணவன்!

"என்னாலே எழுந்து நடக்க முடியாது. வலது கால் போயிடுத்து. கொஞ்சம் பிடிச்சுக்கோ. மெள்ள நடந்து வந்துவிடுவேன்."

அவனை அழைத்துக் கொண்டு போய் அறையில் சுவர் ஓரமாய் உட்கார வைத்தாள்.

அவன் வந்து வருஷத்துக் கதையையெல்லாம் அவசரமாய்க் கொட்டித் தீர்த்தான். அவள் பேசாமல் கேட்டுக் கொண்டு நின்றாள். ஏதோ விபத்தில் அவன் கால் போய்விட்டதாம். முதலாளி கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டாராம்.

"நீ இன்னமும் இங்கேயே இருப்பாயோ மாட்டாயோ என்று நினைத்துக் கொண்டே வந்தேன். இருந்தாலும் ஒரு ஆசை; நம்பிக்கை."

அவள் இன்னமும் வாய் திறக்கவில்லை.

"உன்னைப் புரிஞ்சுக்காமல் பாடாய்ப் படுத்திவிட்டேன். எல்லாவற்றையும் சேர்த்து வைத்து ஒத்தைக் காலோடே அனுபவிக்கப் போகிறேன்."


ஏதாவது சொல்லலாம் என்று முயன்று, ஒன்றும் பேச வராமல் அவனையே பார்த்தாள் அவள்.

"நீ எத்தனை அழகாய் இருக்கே..." என்று அவன் எதையோ சொல்ல ஆரம்பித்தான் மறுபடியும்.

நானா?

அந்த அழகு இப்பொழுது அவளைச் சுமையாய் அழுத்தித் திணற வைத்துக் கொண்டிருந்தது.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam




இளமையின் எழில் ததும்பும் வதனம்
பூவிலும் மென்மையான சருமம் பெறுங்கள்!

...அதற்கு உங்கள் சருமத்தின் இயற்கையான ஈரத் தன்மை மாறுமல் பாதுகாப்பது அவசியம்

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள பிரத்தியேகக் கலவை ‘ஹ்யுமெக்டன்ட்’ சருமத்தின் இயற்கையான ஈரத்தை உலராமல் காக்கிறது. இதனல் பருவகால மாறுதல்களாலோ, தூசு முதலியவற்ருலோ, சருமம் வறட்சியடையாமல் மிருதுவாக இருக்கிறது. துல்லிய வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் வதனத்திற்கு இளமை எழிலையும், மென்மை சேர்பையையும் அளிக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகப் பூசிக் கொண்டாலே உங்கள் முகம் பொலிவுடன் விளங்கும். அல்லது முகத்தில் முதலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவி அதன் மேல் பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து முகம் மாசு மறுவில்லாமல் திகழும்!



பாண்ட்ஸ் **வானிஷிங் க்ரீம்—உலகத்து அழகிகளின் வதனத்தில் மிளிர்வது**

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது)

P-6990

REGISTERED No. M. 4382

Registered as a Newspaper in Ceylon



